# யா / ஏழாலை வடக்கு

# அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

## ஏழாலை




# 120ஆவது ஆண்டு சிறப்பு மலர்

# 1888 – 2008



# சமர்ப்பணம்

எமது பாடசாலையின் 120 ஆவது ஆண்டு
சிறப்பு மலருக்கு நிதி உதவியை
வழங்கிய
திருமதி செபரட்ணம் செல்வரட்ணம்
அவர்களின் கணவன் ஆசிரியர் அமரர்
செல்வரட்ணம் அவர்களுக்கு
இந்நூல் சமர்ப்பணம்

# யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை

## பாடசாலைக் கீதம்

பள்ளியின் பெயரைச் சொல்லச் சொல்ல
பரவசம் வந்தெமைஆளும்
துள்ளியே பயிலும் மாணவர் நாமும்
தொடுவோம் உயர்வினை நாளும்

செந்தமிழ் வல்லார் வாழ்ந்திடும் பூமி
செல்வம் சிறக்கும் செம்மண் பூமி
வந்தநல் வல்லார் அமைத்த ஏழாலை
அமெரிக்கன் பாடசாலை வாழி

கல்வியும் கலையும் இங்கு வளருது
காவலாய் பெரியோர் ஆசியும் பெருகுது
நல்ல இரு மதங்கள் நாளுமே பேணி
நற்பண் பென்றும் வளர்த்தாய் வாழி

வாழிய எங்கள் பாடசாலை
வளம் பல பெற்று வாழியவே
ஆழிசூழ் உலகம் போற்றிட என்றும்
அன்னை வாழி வாழியவே

கலாபூசணம் சு.துரைசிங்கம்
(கவிஞர் துரையர்)

# ஆசிரியர் கீதம்

முத்து முத்தான சித்திரங்கள் - லங்கை
முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள் ஆ....
பற்றும் பாசமும் வைத்தவற்றை நல்ல
பாதையில் சேர்க்கும் பணி எமதே....

(முத்து...)

அன்னை மடியில் அரவணைத்த பிள்ளை
பள்ளிவரும் பிஞ்சுப் பாலகனா...ம் அவன்
தன்னந் தனிமையைப் போக்கி உள்ளத்தினில்
நம்பிக்கை, அன்பையும் ஊட்டிடுவோ...ம்

(முத்து...)

எண்ணும் எழுத்தும் உணர்த்திடுவோம் உள்ளத்
தேவைகள் அறிந்து பூர்த்தி செய்வோம் அவன்
ஒழுங்குடன் ஒழுக்கமும் பேணி நல்ல
சிந்தனை ஆற்றலைத் தூண்டிடுவோம்

(முத்து...)

கற்பித்தல் கற்றல் நிகழ்ந்திடவே - நல்ல
கட்டுப்பாட்டுடன் வகுப்பறையில் - தினம்
பெற்ற கடமையைப் பேணி ஏற்றே ஞாலம்
போற்றும் சமூகத்தை நாம் படைப்போம்

(முத்து...)

திரு. பொன்.ஸ்ரீ வாமதேவன்

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே
வானமளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
இசைகொண்டு வாழியவே
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வான மறிந்த தனைத்தும் மறிந்து
வளர் மொழி வாழியவே!
வளர் மொழி வாழியவே!

மகாகவி சுப்பிரமணியபாரதியார்

## யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள் 1)

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார் (குறள் 10)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு (குறள் 299)

நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன்
உண்மை அறிவே மிகும் (குறள் 373)

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக (குறள் 391)

எண்என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும்
கண் என்ப வாழும் உயிர்க்கு (குறள் 392)

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் ஊறும் அறிவு (குறள் 396)

**(திங்கள், புதன், வியாழன் நாட்களில்**
**காலை வேளையில் மாணவர்களால்**
**இசைக்கப்பெறுகின்றது)**

# யா / ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை

## மகுடவாசகம்

# கற்றனைத்தூறும் அறிவு

## தூர நோக்கு (Vision)

கற்றல் - கற்பித்தல் செயலாற்றுகை மூலமாக மாறிவரும் உலகுக்குப் பொருத்தமானதும், சவால்களை எதிர்கொள்ளக் கூடியதும், பண்பாட்டைப் பேணுவதுமான நற்பிரசைகளை உருவாக்குவோம்.

## பணிக்கூற்று (Mission)

எமது பாடசாலையின் பாரம்பரியமான சாதனைகள் தற்போதைய வினையாற்றல் திறன்களினூடாக, முறைசார், முறைசாரா, முறையில் கல்வி மூலம் மாணவர்களுக்குக் கல்வி – தொழில் தேர்ச்சிகளை வழங்குதல் அவர்களைத் தேசக் கட்டுமானத்தில் உண்மையான பங்காளராக்கி வீடு, பாடசாலை, நாட்டுப்பற்றுடன் செயலாற்றக்கூடிய கல்விச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.

யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை

1888

★ ஏழாலை ★

கற்றனைத் தூறும் அறிவு

## பாடசாலைத் தகவல்கள்

| | |
|---|---|
| ➪பாடசாலை ஆரம்பம் | 11.10.1888 |
| ➪பாடசாலை இலக்கம் | 1010015 |
| ➪தொகை மதிப்பு | 09191 |
| ➪பரீட்சை இல. | 11076 |
| ➪தேர்தல் தொகுதி | மானிப்பாய் |
| ➪பிரதேச செயலாளர் | பிரிவு வலிதெற்கு, உடுவில். |
| ➪கிராம சேவையாளர் | பிரிவு ஏழாலை வடக்கு J/205 |
| ➪தரம் | III |
| ➪வகுப்புக்கள் | 1-5வரை |
| ➪காணி | 4 பரப்பு 3குளி |
| ➪கட்டடம் | 90X20 (10X20 அலுவலகம்) |
| ➪மின்வசதி உண்டு | |
| ➪குடிநீர் வசதி (நீர்த்தாங்கி) | |

**❖10.04.1963ம் ஆண்டு வர்த்தமானிப் பிரகாரம் பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.**

**❖இடம்பெயர்ந்தது :07.01.1991**

**(யா/ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலையில் இயங்கியது)**

**❖மூடப்பட்டது :23.01.1995**

**❖மீளத் திறக்கப்பட்டது :14.02.2003**

**❖கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பம் :01.01.2004**

# பாடசாலை வரைபடம்

## II MAPS, SKETCHES, SITE PLAN

| | | | |
|---|---|---|---|
| Name of School | J / EARLALAI NORTH A.M.T.M.S. | | |
| School ID No | 1010015 | Distr./ Division | Uduvil |
| GPS Coord. N | 09.77174 | GPS Coord. E | 080.05136 |


| | | | |
|---|---|---|---|
| Drawings | ArchiCAD | CAD Drawing | GPS Drawings |

| | | | |
|---|---|---|---|
| School Plot | Length / Wide | 37.4 | 17.4 |
| | Length / Wide | 27.1 | 12.5 |
| | Length / Wide | 0 | 0 |
| Measurement | sqmtr / m2 | sqft | acre |
| Approx. Size | 988 | 10,631 | 0.2441 |
| Building m2 | 97 | 10% | Plot Coverage |
| Access Land | 0 | Non | Owner of A.L. |

SCHOOL SITE POSITION ON JAFFNA MAP



SITE PLAN SKETCH DRAWING SCHOOL COMPOUND




***Designe By:Miss. R.Thamizhini***




எங்கள் அதிபர்

## மலர்க் குழு

காப்பாளர் : திரு. தம்பிஐயா வாமதேவன் (அதிபர்)
மலராசிரியர் : திருமதி சுஜந்தினி குருபரன்
செயலாளர் : திரு.பரமலிங்கம் அருமைநாதன்
பொருளாளர் : திரு.செபஸ்தியாம்பிள்ளை யூட்ரவிநாத்
ஆலோசனை : வண.K.J.W.தேவசகாயம்
(பங்குத்தந்தை தென்னிந்தியத் திருச்சபை)
திரு.சி.கந்தசாமி (ஓய்வுபெற்ற கணக்குப் பரிசோதகர்)
திரு.க.சிவானந்தம் (கிராம அலுவலர்,ஏழாலை வடக்கு)

உறுப்பினர்கள் : திரு.இ.விஜயஜெயராசா (செயலாளர், பா.அ.சங்கம்)
திரு.க.நித்தியானந்தம் (உறுப்பினர், பா.அ.சங்கம்)
திரு.நா.செல்வராசா (உறுப்பினர், பா.அ.சங்கம்)
திருமதி கௌசல்யா சிவசுதன் (ஆசிரியர்)
திருமதி கலைவாணி நகுலேஸ்வரன் (ஆசிரியர்)
செல்வி தர்மலிங்கம் சுஜிதா (ஆசிரியர்)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை

தலைவர் : திரு.தம்பிஐயா வாமதேவன் (அதிபர்)
செயலாளர் : திரு.இளையதம்பி விசயஜெயராசா
பொருளாளர்: திரு.செபஸ்தியாம்பிள்ளை யூட்ரவிநாத் (ஆசிரியர்)

## உறுப்பினர்கள்

1. திருமதி பிமிலா கேதீஸ்வரன்
2. திருமதி இராஜசுசீலா நாகராசா
3. திருமதி கணேஸ்வரி விஜயகுமார்
4. திருமதி உமாதேவி செல்வராசா
5. திரு.கணபதிப்பிள்ளை நித்தியானந்தம்
6. திரு.நாகமணி செல்வராசா

## தற்போதைய ஆசிரியர் குழாம்

திரு.த.வாமதேவன் (அதிபர்)
திரு.செ.யூட்றவிநாத்
திரு.ப.அருமைநாதன்
திருமதி க.நகுலேஸ்வரன்
திருமதி சு.குருபரன் (தற்காலிக இணைப்பு)
திருமதி கௌ.சிவசுதன் (தற்காலிக இணைப்பு)
செல்வி த.சுஜிதா (தொண்டர் ஆசிரியர்)

## அதிபர் வரிசை

திரு.சீனிவாசம் (சீனிச் சட்டம்பியார்)
திரு.கார்த்திகேசு 1931
திரு.தம்பிஐயா 1967-1968
திரு.வயித்திலிங்கம் 1949
திரு.செல்லையா 1965
திரு.விஜயரட்ணம் 1970
திரு.சின்னத்துரை
திரு.சரவணமுத்து
திரு.செ.சோமலிங்கம்
திரு.சூசைப்பிள்ளை
திரு.யோகர் (1976-1993)
திரு.பொன்னம்பலம் (1993-1995)

## ஆசிரியர்கள்

திரு.செல்லம் 1940
திரு.இராசா 1931
திரு.ஞானம் 1931
திரு.செல்லப்பா இரத்தினம் 1940
திரு.அம்பலம் 1931
திருமதி எம்.மனோன்மணி 1948
திரு.திசநாயகம் 1932
திருமதி பாக்கியம் இராசதுரை 1957
திரு.சூசைதாஸ் 1965
திரு.கந்தையா 1950
திருமதி ப.இராசையா
திரு.வசந்தராசபிள்ளை 1965
திருமதி சகுந்தலா 1965
திருமதி முதத்துச்சாமி செல்லம்மா · 1973

பண்டிதர் பொன்னுத்துரை 1948
திரு.திருநாவுக்கரசு (நாவேந்தன்)
திரு.வி.முருகேசு
திருமதி இராசசிங்கம் இராசமணி
திருமதி தேவராசா புஸ்பராணி
திருமதி சுகிர்தம் தயானந்தன்
திருமதி ஞானதீபம் அருட்பிரகாசம்
திருமதி லில்லிமலர் சண்முகநாதன்
திருமதி நாகம்மா யோகர்
திரு.அ.அருட்பிரகாசம்
திரு.த.கந்தசாமி
திருமதி அன்னலட்சுமி பொன்னுச்சாமி
திருமதி குலமணி பொன்னுத்துரை
திருமதி இரஞ்சிதம் சுவாமிநாதன்

திரு.ஏ.சின்னத்தம்பி
திரு.ரி.பொன்னையா
திருமதி தவமணி சின்னத்தம்பி
திரு.க.அப்புத்துரை
திரு.கார்த்திகேசு
திரு.கதிராசிப்பிள்ளை
திரு.செ.இரத்தினம்
திருமதி றோஸ் செபரட்ணம் செல்வரத்தினம்
திரு.ரி.கந்தையா
திரு.எஸ்.இரத்தினம்
திரு.எஸ்.ஆர்.இரத்தினசிங்கம் 1943 - 1958
திரு.வி.எஸ்.வைரமுத்து
திருமதி கே.அன்னதானம்

## மிசனறி காலத்து முகாமையாளர்கள்

(கிடைத்த தகவல்கள்)

| | |
|---|---|
| 01.07.1935ல் | வண. ஜி.டி.தோமஸ் |
| 24.10.1935ல் | பி.சி.டி. மாதர் |
| 11.06.1938ல் | ஜே.வி.செல்லப்பா |
| 30.06.1939ல் | அ.கார்த்திகேசு |
| 1960ல் | டி.எஸ்.சாண்டேர்ஸ் |

# பண்பாட்டின் இதயஸ்தானமே ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை



கலா என்கின்ற சமஸ்கிருத வார்த்தை கல்வி என்கின்ற தமிழ்ச் சொல், கல்ச்சர் என்கின்ற ஆங்கில பதம். கொலோ என்கின்ற பரெஞ் வார்த்தை எல்லாவற்றுக்கும் மூலமொன்றே. கலை சர்வ தேசத்தையும் தழுவுகிற விஷயமாதலால் கல்வி சிறப்பு பெறுகின்றது. சந்திரக்கலை, பிறை தினம்தோறும் வளர்வது போல் அமைவது கலா என்பது வளருவது என்பதாகும். மாணவரிடையே மனவளர்ச் சியை தருவது கல்வி உயர்ந்த பண்பாட்டில் வளர்வது ஒவ்வொரு மாணவரிடையும் ஒவ்வொரு விதமாக உருப்பெறுகின்றது. சிற்பரூபமாக, சித்திரரூபமாக, நாட்டிய ரூபமாக சங்கீத ரூபமாக, காவிய ரூபமாக, தியாக ரூபமாக, சேவை ரூபமாக, இவ் வாறான உயர்ந்த எண்ணங்களையும் பண்பாடுகளையும் உருவாக்குவதே அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகும்.

"கற்றது கைம்மண்ணளவு" என்று சரஸ்வதியே கற்றபடி இருக்கின்றார். இவ்வாறான உன்னதமான வளர்ச்சியும், சிறப்பும் 120ம் ஆண்டு மலர் வெளியிடுவதில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை சிறப்படைகின்றது. மென்மேலும் வளர இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**சுபம் அஸ்து**

**சிவஸ்ரீ நா. குகநேசக்குருக்கள்**
**உடுவில், சுன்னாகம்.**

# தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்ப்பாணப் பேராயர் அதிவண முனைவர் டி.எஸ்.தியாகராஜா - ஆயர் அவர்களின் ஆசியுரை



" வீடுதோறும் கலையின் விளக்கம்!
வீதிதோறும் இரண்டொரு பள்ளி!
நாடுதோறும் உள்ளன ஊர்கள்!
நகர்களெங்கும் பலபல பள்ளி!"

உருவாக்கி உருப்படுமாறு உரத்துப் பாடினான் பாவலன் பாரதி! அந்தக் கவிக் குரலுக்குச் செயல்வடிவம் கொடுத்துக் கொண்டிருக்கும் கல்விச் சாலைகளில் ஒன் றாக, யாழ். ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை சிறந்து ஒளிர்கின்றது. 120 ஆண்டுகளை நிறைவு செய்த பெரும்பூரிப்பில் திளைக்கின்றது. அன்றைய அமெரிக்கன் மிஷனறிமாரின் அறிவுத் தேடலின் தொடக்க விதைகள் பல இலங்கை முழுவதிலும் பரவி விழுந்து செழித்தோங்கி வளர்ந்துள்ளன. இன்றும் அவர்களுடைய கல்விப்பணி, சமுதாயப்பணி, மருத்துவப்பணி ஆகிய இம்மூன்றும் எம்மவர்களுக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதம் ஆகும். அவற்றுள் ஒன்றான ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை எத்தனையோ இடர்கள், தடைகளுக்கு நடுவிலேயும் எதிர்நீச்சல் அடித்தவண்ணம் தனது இலக்குகளை நோக்கி முன்னேறிக்கொண்டே உள்ளது. அப்பேர்ப்பட்ட இப்பாசாலையின் நூற்று இருபதாவது ஆண்டு விழா நிறைவில் அதன் முதல்வர், ஆசிரியர்கள், மாணவர், மாணவியர் ஆகியோரை வாழ்த்தி ஆசி வழங்குவதில் பெரும் மனநிறைவடைகின்றேன். எல்லாம் வல்ல இறைவன் அருளாட்சி இப்பாடசாலையிலும் ஒளிர்ந்து ஓங்குவதாக!

**இறைபணியில்,**

**அதிவண. கலாநிதி D.S.தியாகராசா**
**ஆயர், தென்னிந்தியத் திருச்சபை யாழ். ஆதீனம்,**
**அமெரிக்கன் இலங்கை மிஷன், வட்டுக்கோட்டை.**

# பங்குத் தந்தையின் ஆசியுரை



பச்சைவயல் நிலங்களைக்கொண்ட அழகிய விவசாயக் கிராமத்தின் கண்ணே, இக்கிராமத்தின் குழந்தைகளைக் கல்வியிலும் ஒழுக்கத்திலும் வளர்தெடுக்கின்ற ஒரு ஒளிவிளக்காக விளங்கும் யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலையானது 120ஆம் ஆண்டினைக் கொண்டாடி சிறப்பு மலரினை வெளியிடுவதையிட்டு பரிசளிப்புவிழாமூலம் சிறுவர்களை ஊக்குவிப்பதனையிட்டும் நாம் மிகுந்த சந்தோசமும் பெருமையும் அடைகிறோம்.

ஏழாலை கிராமத்தின் சிறந்த கிறிஸ்தவ தமிழ் ஆரம்பக்கல்விப் பாடசாலையாக இது விளங்குவதுடன் தரம் 05 வரையுள்ள இப்பாடசாலை கோட்ட, மாவட்ட மட்டங்களில் பங்குபற்றி வெற்றியீட்டுவது மிகவும் பெருமை சேர்க்கின்றது. 1995 இல் மூடப்பட்ட இப்பாடசாலையானது மீண்டும் 2003 இல் திறக்கப்பட்டு இன்று நல்ல முறையில் இப்பாடசாலையின் மாணவர்கள் தமது கல்வியினைத் தொடர்வதற்குக் காரணமான பாடசாலை அதிபர் பாராட்டுக்குரியவர். இதனைவிட மாணவர்களுக்காக உழைக்கின்ற, அத்திவாரமிட்டு, களமமைத்துக் கொடுக்கின்ற அதிபரோடிணைந்த ஆசிரியர்களையும் நான் பாராட்டி நிற்கின்றேன்.

தொடர்ந்தும் இவர்களின் அர்பணிப்பும், விழிப்புணர்வுடன் கூடிய செயற்பாடுகளும் மாணவச் செல்வங்களின் உயர்கல்விக்கும் எதிர்காலத்திற்கும் நல்ல அடிப்படையாக அத்திவாரமாக இருந்து களமைத்துக் கொடுப்பதுடன், நல்ல கல்விமான்களை உருவாக்கிய இக் கிராமத்தின் பதிவுகளில் இப்பாடசாலையின் சிறுவர்களும் ஒழுக்கத்துடன் கூடிய மகான்களாகவும் நல்ல சிற்பிகளாகவும் உருவாகவேண்டுமெனவும் இவ் உணர்வுபூர்வமான இவ் அழகிய மலரினை மனதில் நினைவுகளாகச் சுமந்து வெளியிடும் அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டி வாழ்த்தி இறையாசி கூறிநிற்கின்றேன்.

**அருட்திரு வண. ம. கான்ஸ்போவர்**
**பங்குத் தந்தை புனித இசிதோர் ஆலயம், ஏழாலை.**

# தென்னிந்திய் திருச்சபை பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தழிழ்க் கலவன் பாடசாலை தனது 120வது அகவையில் காலடி எடுத்துவைப்பதை இட்டு புகளாங்கிதம் அடைகின்றேன்.

மேலும் இது நீண்ட வரலாற்று பாரம்பரியமுள்ள ஒரு பாடசாலை யாகும். 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்துவை குறித்த நற் செய்தியை கீழைத்தேய நாடுகளுக்கு அறிவிப்பதற்காக அமெரிக்கா வில் இருந்து இலங்கையின் வடபாகத்திற்கு வநத அமெரிக்க நற்செய்தி பணியாளர்கள் இதனை ஆரம்பித்தனர். ஏனெனில் நற்செய்தியின் விழுமியங் களை புரிந்து கொள்வ தற்கு கல்வியறிவு இன்றி அமையாதென புரிந்துகொண்டனர். இதன் விளைவாக இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இந்த அமெரிக்க நற்செய்தி பணியாளர்களின் தன்னலமற்ற தொண்டுகளினால் ஈர்க்கப்பட்ட மக்கள் இப்பாடசாலையை நோக்கி வந்து கல்வி பயில முன் வந்தனர். ஆரம்பத்தில் பாடசாலையின் வளர்ச்சி துரிதமாக இருந்தது. காலம் செல்லச் செல்ல இப்பாடசாலையின் வளர்ச்சியில் தேய்வு நிலை தோன்றியது. குழப்ப நிலை காரணமாக இப்பாடசாலை மூடப்பட்டு மீண்டும் புத்துயிர் பெற்றது இதற்காக நாமனைவரும் இறை வனுக்கு நன்றி கூற வேண்டும். இதற்கு ஏதோவொரு உள்நோக்கம் இருக்கவேண்டும்.

தற்போது அரசும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் முயற்சியால் வகுப்பறைகளை புதிதாக நிர்மாணிக்கப்பட்டு புதிய ஆசிரியர் குழாம் கல்வி நடவடிக்கைகளுக்கான பொறுப்புகளை ஏற்றது அதிபரின் பெருமுயற்சியினாலும் ஆசிரியர்களின் முயற்சி யினாலும் இவ் அரிய நூல் உருவாக்கம் பெற்றது இதற்காக உதவிய பழைய மாணவர்களும் பெற்றோரும் "குறிப்பாக செல்வரெட்ணம் செபரெட்ணம் ஆசிரியரின் பிள்ளைகளும் சேர்ந்து செய்த உதவி வரலாற்றில் நினைவு கூரப்படவேண்டியது. இவர்களையும் இப்பாடசாலையையும் கல்வி சம்பந்தமான நடவடிக்கைக்கு பொறுப் பானவர்களையும் இறைவன் வழிநடத்துவார்.

யாழ். தென்னிந்தியத் திருச்சபையின் குருவாகிய நான் இப்பாடசாலையின் வளர்ச்சி மேலோங்க உழைத்து வரும் அனைவரையும் உளமாரப் பாராட்டுகின்றேன். பிறர் வாழ்வுக்கெனத் தங்களை அர்ப்பணித்து வாழ்பவர்களை வரலாறு ஒரு போதும் மறக்காது. ஏழாலை வடக்குப் பகுதியின் குடிமக்களாகிய சந்ததியினரின் நல்வாழ் வுக்காக மட்டுமல்ல எமது தமிழ் சாகியத்தின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புள்ள மாணவர்களை உருவாக்குவதே எனது விருப்பம். பல்வேறு திறமைகளைக் கொண்ட இவ் அரிய பொக்கிஷம் தொடர்ந்து வளர்ந்து வீறு நடை போடவேண்டும் என்பதை இறைவனும் எதிர்பார்க்கின்றார். இந்நோக்கம் நிறைவேறுவதற்காக நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுவின் நிறைவான ஆசீர்வாதம் உங்கள் யாவரோடும் இருப்பதாக.

**வண. K.J.W தேவசகாயம், தென்னிந்தியத் திருச்சபை**

**ஏழாலை வடக்கு, ஏழாலை.**

# மாகாணக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை தனது 120வது ஆண்டு நிறைவில் வெளியிடப்படவுள்ள சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன். 2003ல் இப்பகுதியில் மீளத்திறக்கப்பட்ட இப்பாடசாலை துரித வளர்ச்சியைக் கண்டு 2008ம் ஆண்டு 46 மாணவர்களை கொண்டு இயங்குகின்றது. இப்பாடசாலை 1880 களில் ஆரம்பிக்கப்பட்டபோது 1990களில் ஏற்பட்ட இடப்பெயர்வினால் தற்காலிகமாக மூடப்பட்டது. இப்பகுதியில் மீளக் குடியேற்றம் நடைபெற இருப்பதால் எதிர்காலத்தில் மாணவர் தொகை அதிகரிக்கும் என்பது திண்ணம்.

இந்த ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இரண்டு மாண வர்கள் சித்தியடைந்தமை இப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கு ஒரு சான்று.

நீண்டகால இடைவெளிக்கு பின் சிறப்பு மலர் வெளியிடுவதற்கு துணைநின்ற அதிபர் ஆசிரியர் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு எனது பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வீ. இராசையா**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**வடக்கு மாகாணம், திருகோணமலை.**

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஏழாலை பதி மிகச் சிறந்த அறிஞர்களையும், கனவான்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது. மிக உன்னதமான நீர்வளமும், நில வளமும் கொண்ட பிரதேசமுமாகும். கடந்த கால யுத்த சூழல் இப்பிரதேச மக்களை இடப்பெயர்வுக்குள்ளாக்கியது.

ஏழாலைப் பதியில் முதன்மையாக நிறுவப்பட்ட பாடசாலைகளுள் ஏழாலை வடக்கு அ.மி.த.கவும் ஒன்றாகும். 1888ல் ஆரம்பித்த இப்பாடசாலை நூற் றாண்டு நிறைவில் 1989ம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வில் தற்காலிகமாக மூடப்பட்டது.

மீளவும் ஏற்பட்ட மீள் குடியேற்றத்தினைத் தொடர்ந்து 2003ல் ஆரம்பிக்கப்பெற்று சிறப்பான கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. 120வது ஆண்டு நிறை வினை இவ்வருடம் கொண்டாடும் இப்பாடசாலை வரலாற்றுப் பதிவினைப் பேணும் நோக்கில் வெளியீடு செய்யும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

உயர் பாதுகாப்பு வலயத்தின் எல்லையிலே பொருளாதார வசதி குன்றிய பெற்றோரின் குழந்தைகள் நிறைவான கல்வி பெற உழைக்கும் அதிபர், ஆசிரியர் களைப் பாராட்டுவதுடன் பாடசாலை மேலும் வளர்ச்சி பெற இறையருளைப் பிரார்த்திக்கிறேன்.

**திரு. ப. விக்னேஸ்வரன்,**
**கல்விப்பணிப்பாளர்**
**வலிகாமம் கல்வி வலயம்,**
**மருதனார் மடம்,**
**சுன்னாகம்.**

# ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை பெருமையுடன் சந்திக்கும் நூற்றியிருபதாவது ஆண்டு



ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை நூற்றியிருபதாவதாண்டைச் சாதனைகளுடன் சந்திப்பதையிட்டு மகிழ்ச்சிய டைகின்றேன் 11.10.1888ல் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக அமெரிக்கன் மிஷனரி மாராலும் 1963 அரசு சுவிகாரத்தின்பின் எம்மவர்களாலும் சிறப்புற இயங்கிய மேற்படி பாடசாலை வன் செயல்கள் காரணமாக மூடப்பட்டிருந்தது அப்பிரதேக் குழந்தைகள் 1996ல் இடப்பெயர்வின் பின் யாழ் மாவட்டத்தில் குடியேறியும் நீண்டதூரம் பாடசாலைகளுக்குச் செல்லவேண்டி ஏற்பட்டது மூடப்பட்ட பாடசாலை களை மீளத்திறக்க அப்போதைய வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளரும் இன்றைய வடமாகாணக் கல்விப் பணிப் பாளருமாகிய உயர்திரு வீ.இராசையா அவர்கள் முடிவுசெய்தபோது மேற்படி பாட சாலையையும் திறக்க முடிவெடுக்கப்பட்டது அவரது பணிப்பின் பேரில் அதிபரைத் தேடினோம். பலரது சிபார்சுகள் தற்போதைய அதிபராகக் கடமையாற்றும் திரு. த.வாமதேவனை எமக்கு அடையாளம் காட்டியது அவரது ஆளுமையும் அயற் பாடசாலைகளோடு கொண்ட நல்லுறவும் மேற்படி பாடசாலைக்கு மாணவர் சேர உந்துதலாய் இருந்தன. 10 மாணவர்களுடன் ஆரம்பித்த 1ம் வகுப்பு இன்று 5ம் வகுப்பு வரை உயர்வடைந்து இன்று புலமைப்பரிசில் பரீட்சையில் 2 மாணவர்கள் சித்தி பெறும் அளவிற்கு உயர்வடைந்துள்ளது. ஒரு அதிபரினால் பாடசாலையைச் சிறப்பிக்கமுடியும் என்பதற்கு திரு.த.வாமதேவன் உதாரணமாக விளங்குகிறார் அவரது ஆளுமை முதன்மையில் சேவை மனப்பங்கு கொண்ட ஆசிரியர்களின் துணை, அருகில் இருக்கும் அமெரிக்கன்மிஷன் அருட்தந்தையின் பாதுகாப்பு பெற்றோரின் ஆர்வம் அனைத்தும் இன்று இப் பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளமை தனது மாணவர்களின் தொகையினால் பெருமை பெறாமல் அவாகளது தரத்தினால் பெருமை பெறும் அதிபர் அவர்களை மனதார வாழ்த்துகின்றேன். நூற்றியிருபதாவது ஆண்டு பெருமை பெறும் இப்பாடசாலை இன்றையகல்விப் பணிப் பாளர் உயர் திரு.ப.விக்னேஸ்வரன் அவர்களின் ஆசியுடன் மேலும் உயர் வகுப்புக்களை பெற்றுக்கொள்ளவும் வாழ்த்துகின்றேன்.

**திருமதி றெஜீனா இருதயநாதன்**
**(ஓய்வுநிலை வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம்)**

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி வெளியிடப்படுகின்ற மலருக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

ஆரம்பக்கல்விச் சேவையை நல்குவதில் ஒன்றரை நூற்றாண்டிற்கு மேற்பட்ட வரலாற்றினை கொண்ட இப்பாடசாலை சமகால நினைவின் நினைவுப் பதிவேடாகவும் கடந்தகால வரலாறுகளை தற்போதைய கல்விச் சமூகத்திற்கு ஞாபகமூட்டுவதுடன் எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கின்ற நல் ஆதாரச் சான்றாகவும் மிளிரும் என்பதில் ஐயமில்லை.

மக்கள் இடப்பெயர்வினால் பல வருடங்களாக மூடப்பட்டிருந்த இப்பாடசாலை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இவ் வருடம் முதன்முறையாக தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றிய 10 மாணவர்களுள் இருவர் சித்திபெற்றமை அதிபர், ஆசிரியர்களது அர்ப்பணிப்பான சேவையையும் பெற்றோர்கள், பாடசாலை மீது கொண்டுள்ள அதீத பற்றுதலையும் பறைசாற்றுகின்றதெனலாம். தேசிய ரீதியான 10% சித்தியுடன் ஒப்பிடும்போது தனியொரு பாடசாலை 20% சித்தியினை பெற்றுள்ளமை அளப்பரிய சாதனை முயற்சியாகும். இப்பாடசாலை மேலும் பல வழிகளிலும் சிறப்பான முன்னேற்றங்களைப் பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

**திரு. சு. சுந்தரசிவம்**<br>
**பிரதிக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)**<br>
**வலிகாமம் கல்வி வலயம்,**<br>
**மருதனார்மடம்,**<br>
**சுன்னாகம்.**

# பிரதிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஏழு ஆலயங்களைக் கொண்டு சிறப்புப்பெற்ற ஏழாலையின் வடக்கே 1888ல் அமெரிக்க மிஷனரிமாரால் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 120 ஆண்டுகளை நிறைவுசெய்து அதன் வெளிப் பாடாக "சிறப்புமலர்" ஒன்றினை வெளியிட முனைந்தமை பெரு மகிழ்விற்குரிய விடயமாகும்.

பல இன்னல்களுக்கு மத்தியில் 1995ல் தற்காலிகமாக மூடப்பட்டு அயற்சமூகம் இல்லாத நிலையில் மீண்டும் 2004 இல் தரம் 1ல் 10 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று தரம் 5 வரை 45மாணவர்களைக் கொண்டுள்ள துடன் புலமைப்பரிசில் பரீட்சையில் இரு மாணவர்கள் சித்தியெய்தியமையும் பாராட் டுக்குரியது. இன்றைய நிலையிலும்கூட அயற்சமூகம் முற்றாக தமது இடத்திற்கு வரவில்லை.

சிறப்பான கற்றல் - கற்பித்தலுக்குரிய வளப்பற்றாக் குறை இருப்பினும் அதில் நிறைவு கண்டு செயலாற்றுவதிலும், சமூகத்துடனும், கல்விப் புலத்துடனும் சிறந்த தொடர்பாடலை வளர்த்து ஆக்கமான பணிகளை மேற்கொள்வதிலும் அயராது முனைந்து நிற்கும் பாடசாலைச் சமூகத்தின் செயற்பாடுகள் மெச்சப்படவேண்டியவை.

கல்வியறிவு, பொருளாதாரவசதி, சமூகமுன்னேற்றம், என்பவற்றில் பின்னடைவு பெற்ற நிலையில் காணப்படும் சமூகத் தொகுதியினரைத் தன்னகத்தே கொண்டு அவர்களின் ஆற்றல்களை வளர்ப்பதில் கடின உழைப்பைக்காட்டி சமூகத்தில் நன்மதிப்பினைப் பெற்றுள்ள இப்பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் தமது அயரா முயற்சியால் கோட்ட, வலய, மாவட்ட மட்டப் போட்டிகளில் மாணவர்களைப் பங்குபற்றச்செய்து அவர்களுக்கு ஊக்கமும் அளித்துக்கொண்டிருக்கின்றனர்.

இப்பாடசாலை எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபடும் முகாமைத்துவம் அதனோடு கைகோர்த்துச் செயற்படும் ஆசிரியர்கள், சமூகம் பெரியோர் யாவரும் எடுத்த காரியங்களில் வெற்றியும் நன்மையும் பெற இறைவன் கிருபையை இறைஞ்சுகின்றேன்.

**திருமதி ச.நாகராஜா,**
**பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)**
**வலிகாமம் கல்வி வலயம்,**
**மருதனார்மடம்,**
**சுன்னாகம்.**

# முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



ஏழாலை வடக்கு அமரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு வயது 120 வருடங்கள். மிகமிக நீண்டதோர் வரலாறு. அறிந்த அளவில் 1888.10.11ம் திகதி அமெரிக்க மிஷனறியினரால் ஆரம்பிக்கப்பட்டு தென்இந்தியத் திருச்சபையினரால் நிர்வகிக்கப்பட்டு 1963ம் ஆண்டு அரசினால் சுவீகரிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த பாடசாலையின் வரலாற்றில் ஒரு கரும்புள்ளி. 1990களில் ஏற்பட்ட இடப்பெயர்வுகளும் 1995ம் ஆண்டில் முழுமையாக மூடப்பட்டமையுமாகும். மீண்டும் 2003ம் ஆண்டு முதன்முதலாக வலயக் கல்விப் பணிப்பாளர் சகிதம் இப்பாடசாலைக்குச் சென்றபோது கண்ட காட்சி பற்றைகளால் மூடப்பட்ட முழு இடிபாடுகள் தான் உட்புகமுடியாத அளவுக்குச் சுற்றி மூடிவளர்ந்த பற்றைக் காட்டை அழித்து இடிபாடுகளை நீக்கி **G.T.Z.** நிறுவனத்தின் முழுமையான உதவியுடன் சீர் செய்யப்பட்டு 14.02.2003ம் ஆண்டு மீளத்திறக்கப்பட்ட நாள் ஞாபகத்தில் நிற்கின்றது.

கண்ணிவெடிகளின் நிரந்தர மானபயத்துடன் எந்த நிமிடமும் துவக்கு வெடிசத்தம் காதை துளைக்கும் என்ற மனப் பயத்துடன் பாடசாலையை சிறுகச் சிறுக மீளக் கட்டி எழுப்பி உரிய தடத்திற்குக் கொண்டுவந்த பெருமை அன்று அதிபராக துடிப்புடனும் துணிவுடனும் பொறுப்பேற்ற திரு.த.வாமதேவன் அவர்களையே சாரும். ஆண்டு 1ல் 10 மாணவர்களுடன் அன்று சிறிது சிறிதாக மீள ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று ஆண்டு 5 வரை மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு குடும்ப கோட்ட, வலய மட்டங்களில் பாடவிதானத் தொழிற்பாடுகளுடன் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பங்குபற்றி பெருவிருட்சமாகத் தெரிகிறது.

பாடசாலை மேலும் மேலும் வளர்வது கிராமத்தின் கல்வித் தேவைகளை இனிதே வழங்க வாழ்த்துவதுடன் கண்முன் இளமைத் தோற்றத்துடன் நிற்கும் அதிபர் தம்பி வாமதேவனுக்கும் சக ஆசிரியர்களுக்கும் பாடசாலைச் சமூகத்திற்கும் எனது மன முவந்த வாழ்த்துக்கள்.

**திரு. வி. சச்சிதானந்தம்**
**இளைப்பாறிய கடமைகளைக் கவனிக்கும்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (திட்டமிடல்) (அதிபர் தரம்-I)**

# முன்னாள் துணைவேந்தரின் வாழ்த்துச் செய்தி



எனது சொந்த ஊரில் எமது இல்லத்திற்கு அண்மையில் அமைந்துள்ள யா/ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலையின 120ஆவது ஆண்டு நிறைவையொட்டி பாடசாலைச் சமூகத்தினர் சிறப்பு மலரொன்று வெளியிடுவதையிட்டு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். இப்பாடசாலை 19ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் அமெரிக்கமிஷனரிமாரால் நிறுவப்பட்டு சுமார் எழுபத்தைந்து வருடங்களாக தென்னிந்திய திருச்சபையினரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது. 1963ம் ஆண்டு அரசால் சுவீகரிக்கப்பட்ட இப் பாடசாலை பல சகாப்தங்களாக எமது ஊரில் ஒரு முக்கிய பாடசாலையாக விளங்கி ஊர் மக்களின் ஆரம்ப கல்வித் தேவையை நிறைவேற்றுவதிலும் சமய சமூகப் பணிகள் ஆற்றுவதிலும் பெரும் பங்காற்றி வந்தது. நான் இப்பாடசாலையில் ஓரிரு வருடங்களே கல்வி கற்றிருக்கின்றேன். எனினும் சிறுவயதில் இப்பாடசாலையில் வருடாவருடம் நடைபெறும் நத்தார் புதுவருடம் பெரிய வெள்ளி போன்ற கிறிஸ்தவ பண்டிகைகளை யொட்டிய விழாக்களிலும் பாடசாலைப் பரிசளிப்பு விழாக்களிலும் தவறாது கலந்து கொள்வதுண்டு. இவ்விழாக்கள் மத வேறுபாடின்றி ஊர் மக்கள் அனைவராலும் கொண்டாடப்படுவது வழக்கம்.

எமது ஊரில் பிற்காலத்தில் நிறுவப்பட்ட வேறு பாடசாலைகள் சில பிரபல்யமடையத் தொடங்கியதன் காரணமாக இப்பாடசாலையின் முக்கியத்துவம் படிப்படியாகக் குறைவடைந்தது. மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததால் வகுப்புகளின் எண்ணிக்கையும் மட்டுப்படுத்தப்பட்டது. ஈற்றில் 1995ல் பாடசாலை மூடப்பட்டு 2004ம் ஆண்டிலேயே மீண்டும் திறக்கப்பட்டது ஊர் மக்கள் முற்றாக மீள்குடியேறாத நிலையில் பாடசாலை இப்பொழுது ஒரு சிறுதொகை மாணவர்களுடனேயே இயங்கிக்கொண்டு வருகிறது. ஒருகாலத்தில் எமது ஊரின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றிய இப்பாடசாலையை புத்துயிர் பெறசெய்து வளர்ச் சிப்பாதையில் இட்டுச்செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இப்பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் மற்றும் தொண்டர்களுக்கு எனது பாராட்டையும் நன்றியையும் கூறி அவர்களின் பணி வெற்றிபெற எனது வாழ்த்துக்களைத் தெரித்துக்கொள்கிறேன்.

**திரு. க. குணரத்தினம்.**
**ஓய்வுநிலைப் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தரும்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், (பழைய மாணவன்).**

# பிரதேச செயலரின் வாழ்த்துச்செய்தி



நீண்டதொரு வரலாற்றைக் கொண்ட ஏழாலை வடக்கு அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை ஏழாலை வாழ் மக்களின் கல்விப் பணி சிறப்பதற்கென்றே 1888 ஆம் ஆண்டு காலப் பகுதிதனிலே அமெரிக்கன் மிசனரி மார்களால் ஆரம்பிக் கப்பட்டு ஏழாலை மண்ணின் பழம் பெருமைதனை கூறுவது மட்டு மின்றி பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் நின்று நிலைத்து இன்று 120 ஆவது ஆண்டு நிறைவு விழாக்காணுவது ஒரு தனிச் சிறப்பு என்றே கூறலாம்.

1963 ஆம் ஆண்டுகளில் அரசினால் சுவீகரிக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்ட இப் பாடசாலை பல்வேறு சான்றோர்களையும் கல்வியாளர்களையும் இன்று சமூகம் போற்றும் பெரியார்களையும் உருவாக்கி இருப்பது இப்பாடசாலையின் பழம் பெருமையை எடுத்துக்கூறுவதாக்வுள்ளது.

போர் சூழ்ந்த வேளைதனில் 1990 இடப்பெயர்வின் பின்னராக 1995இல் இடை நிறுத்தப்பட்ட கல்விச் செயற்பாடு 8 ஆண்டுகளின் பின் மீளவும் 2003 இல் துளிர்விட்டுப் பிரகாசிக்கச் செய்து இன்று தனது கல்விப் பணியில் வீறுநடை போட்டு தனது பணியை ஏழாலை வாழ் மக்களிற்கு வழங்கி பழம் பெரும் பாடசாலை எனும் பெருமையுடன் திகழ்வதனை நாம் அவதானிக்கலாம்.

கடந்த இரு தசாப்தங்களாகப் போரின் தாக்கங்களால் பாடசாலையின் சில பகுதிகள் சேதமடைந்த நிலையிலும் கூட அதனை நிர்வகித்த அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் அயராத முயற்சியின் பயனாக இன்று புதுப்பொலிவுடன் விளங்கி ஏழாலைக் கிராமத்தின் கல்வி மணம் பரப்ப உறுதுணையாக நின்று தனது 120 ஆவது அகவைதனை அகமகிழ்வுடன் கொண்டாடி நிற்பது பெருமகிழ்விற்குரியதொன்றாகும்.

ஏழாலைக் கிராமத்து மக்களின் பாடசாலைத் தேவையைக் கருதி பாடசாலைகள் இல்லாத காலங்களிலே ஏழாலைக் கிராமத்தின் கல்வி வளர்ச்சிக்கென 120 ஆண்டு களுக்கு முன் உருவாக்கப்பட்ட பாடசாலை இன்று நகரப்பகுதி பாடசாலை களுக்கு நிகராகக் கல்வியில் மட்டுமின்றி சகல போட்டிகளிலும் வலயம், மாவட்டம் என்னும் வகையில் முதலிடத்தைப் பெறும் மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு பாடசாலை பெருமையை மட்டுமின்றி அதனுடன் சேர்ந்து அயராது பாடுபடும் அதிபர்,

ஆசிரியர்களின் பெருமையையும் அவர்கள் தம் அயராத பணிகளையும் எடுத்துக் கூறுவதாக இறையாசியுடனும் தோற்றப்பொலிவுடனும் விளங்குவதைக் காணலாம்.

2004 ஆம் ஆண்டிலிருந்து இணைந்த மாணவர்களூடாக இன்று தரம் 5வரை மாணவச் சிறார்களைத் தன்னகத்தே கொண்டு கல்வி என்பது காலத்தால் அழியாதது வேர் இருக்கும் வரை மரம் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதை உணர்த்துவதாக தானிருக்கும் வரை கல்வி, சமயம், கலை, கலாசாரம் ஒழுக்க விழுமியங்களை வளர்ப்பேன் எனும் உறுதியுடன் நிலைத்து நின்று சேவையாற்றும் இப் பாடசாலையின் வளர்ச்சியை வாழ்த்துவதுடன் இப் பாடசாலை ஞாலத்தில் ஓங்கவும் ஏழாலைக் கிராம மக்களின் கல்விப் பணிக்கு அரும்பணியாற்றி பல்லாயிரம் ஆண்டுகள் தன் பெருமைதனை நிலைநாட்டவும் இறையருள் என்றும் கிடைக்க வாழ்த்துகிறேன். வாழி!

**திருமதி மஞ்சுளாதேவி சதீசன்**
**பிரதேச செயலாளர்,**
**வலி தெற்கு,**
**உடுவில்.**

# உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குதையிட்டு பெருமிதம் அடைகிறேன்.

அமெரிக்க மிசனறிமாரால் ஏழாலையில் 1888.10.11 அன்று இப்பாடசானல ஸ்தாபிக்கப்பெற்றது என்பது வரலாறாகும். யாழ்ப் பாணத்திற்கு அமெரிக்கமிசனறிமாரின் வருகையினால் அவர்களின் மதமாகிய புரட்டஸ்தாந்து மதத்தைப் பரப்புவதே முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருத்தனர். இந்த நோக்கத்தைச் செயற்படுத்துவதற்கு சிறந்த வழி கல்வியே. இதனைப் புகட்டுவதன் மூலமே சமயத்தைப் பரப்பமுடியும் என நம்பினர். அதனால் யாழ்.குடாநாட்டில் ஒரு முனையிலிருந்து மறுமுனைவரை பல்வேறு வகைப்பட்ட பாடசாலைகளை நிறுவினர். அதுமட்டுமன்றி மக்களுக்கு வைத்திய சேவை, சமூகசேவை, ஆங்கிலக் கல்வியை முதன்மைப்படுத்தி இங்கு படித்த மத்திய வகுப்பினரை உருவாக்கத் தலைப்பட்டனர் வெற்றியும் கண்டனர். மிசனரிமாரின் சேவையினால் சுதேசமக்களிடையே மதத்தினை அனுசரிப்பதோடு அவர்களுக்கிடையே கலாச்சார ரீதியான மறுமலர்ச்சி அத்துடன் எழுதப் பேச, வாசிக்க ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் கல்வியிலே அதிக அக் கறை காட்டத் தொடங்கினர். இது கல்வி கற்ற இளம் சமூகத்தினரைக் கொண்ட ஒரு சமுதாயத்தை உருவாக்கியமை என்று கூறினால் மிகையாகாது. மிசனரிமாரின் அந்தக் கல்விச் சேவையை யாழ்ப்பாணம் என்றும் மறக்காது.

ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை தரம் 1 தொடக்கம் O/L வரை வகுப்புக்கள் தென்னித்தியத் திருச்சபையினால் நிர்வகிக்கப்பட்டு வத்தன. பின்னர் அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்று அரசுடமையாக்கும் நடவடிக்கையில் இப்பாடசாலை 1963ல் அரசினால் சுவீகரிக்கப்பெற்றது. தொடர்ந்து இப் பாடசாலை இயக்கிக் கொண்டிருந்த காலத்தில் 1990ல் இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து. 1995ம் ஆண்டில் மூடப்பட்டது. பின்னர் ஏழாலைப் பகுதியில் மீளக்குடியமரும் நட வடிக்கையின்போது எமது வலிகாம கல்வி வலயப் பணிப்பாளரும் GTZ நிறுவனமும் ஏனைய அரசசார்பற்ற நிறுவனமும் மாகாணக் கல்வி திணைக்கள அதிகாரிகளும் இணைத்து இப்பாடசாலையை 2003.02.14ம் திகதி அன்று மீண்டும் திறந்து ஆரம்பித்து நடவடிக்கை எடுத்தமையை அப்பகுதி மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளனர். இப்பாடசாலை கஸ்ரப் பிரதேசப் பாடசாலையாகக் கணிக்கப்பட்டு இப் பாடசாலையின்

அதிபராக திரு.த.வாமதேவன் அவர்களை நியமித்து அவருடன் ஆசிரியரான திரு.செ.யூட்ரவிநாத் ஆகிய இருவரும் இணைந்து தரம் 1ல் பத்து மாணவர்களை இணைத்து பாடசாலை ஆரம்பிக்கப் பெற்றது. தொடர்ந்து தற்போது 2008ல் தரம் 5 வகுப்புக்கள் உருவாக்கப்பெற்று 45 மாணவர்கள் தற்போது கல்வி பயில்கின்றமை மகிழ்ச்சியைத் தருகின்றது அதற்கான அடிப்படைதேவை வசதிகள், கட்டிடத் தேவைகள் யாவற்றையும் முழுமையாக முன்னின்று வலய கல்விப்பணிப்பாளர் அவர்களினால் முன்னெடுத்து செயற்பட்டு வருகின்றது. இப்பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களின் வழிகாட்டல்களினால் கல்விசார்ந்த செயற்பாடுகள் இணைபாட விதான செயற்பாடுகளில் பங்குபற்றி மாணவர்கள் முன்னிலையில் நிற்பது பாராட்டுக்குரிய அம்சமாகும். குறிப்பாக இவ்வருடம் (2008) தரம் 5 புலைமப் பரீட்சையில் 10 மாணவர்கள் தோற்றி இருவர் விசேட சித்தி பெற்றமை பாடசாலையின் வரலாற்றில் ஒரு சாதனையாக கல்விச் சமூகமும் அவ்வூர் மக்களும் பாராட்டுவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அதாவது அதிபரின் வழிகாட்டலும் ஆளுமைத் திறமைக்கும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்புச் சேவைகளுக்கு கிடைத்த வெற்றி என புகழாரம் சூட்டுகிறேன்.

மாணவர்களின் கல்வி அபிலாசைகள், நடத்தைகள், உளவியல் தேவைகள் என்பவற்னறக் குறிப்பறிந்து சிறப்பாக மாணவர்களின் கல்வியூட்டலில் விசேடகல்வி பயிற்சி பெற்ற திரு.ப.அருமைநாதன் ஆசிரியர் அவர்களின் சேவையும் இப்பாட சாலைக்கு பொருத்தமுடையது எனவும் குறிப்பிட விரும்புகிறேன். இப்பாடசாலை கல்வி அபிவிருத்தியிலும் வளர்ச்சியிலும் மென்மேலும் வளர்ச்சி பெற இப்பாடசாலைக் கல்விச் சமூகத்தை பாராட்டி வாழ்த்துகிறேன்.

**திரு.செ.குபேரநாதன்,**
**கோட்டக் கல்விப் பணிப்பாளர்,**
**உடுவில் கல்விக் கோட்டம்.**
**மருதனார் மடம்,**
**சுன்னாகம்.**

# உடுவில் கல்விக்கோட்டத்தின் முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து இலங்கையின் சிறப்பாக யாழ்.குடாநாட்டின் கல்வி வளர்ச்சிக்கு அமெரிக்க மிஷனரிமார் செய்தசேவை மகத்தானது. தமது சமயத்தினை பரப்பும் நோக்கில் பாடசாலைகளை கட்டி வளர்த்தாலும் அவை ஒருபுறம் கல்வி வளர்ச்சிக்கும் மிக்க உதவியாக விளங்கின என்றால் மிகையாகாது. தென்கிழக்கு ஆசியாவிலே முதன் முதலாக பெண்களுக்கென உடுவில் மகளிர் கல்லூரியை நிறுவிய பெருமை அமெரிக்க மிஷனரிமாருக்கே உரியதாகும். இலங்கையில் மிகச்சிறந்த கல்விமான்களான தேசிய வீரர்களையும் உருவாக்கிய யாழ்ப்பாணக் கல்லூரியையும் வட்டுக் கோட்டையில் அமைத்தவர்கள் இம்மிஷனரிமார்களே.

கிராமங்கள் தோறும் கல்விக்கூடங்களை ஆரம்பித்த பெருமை இவர்களுக்கு உண்டு. அந்த வகையில் 1888.10.11 ஆம் நாள் ஏழாலை வடக்கில் ஆரம்பிக்கப்பட்ட அமெரிக்க மிஷன் பாடசாலை இக்கிராமக்கல்வி வளர்ச்சிக்கு உதவிய தென்றால் மிகையாகாது. இங்கு ஆரம்பக்கல்வி கற்றவர்கள் கல்வியியலாளர்களாக விளங்கியுள்ளனர்.

கல்வியாளர்களையும் சமயவாதிகளையும் சமூகசேவையாளர்களையும் உருவாக்கிய இப் பாடசாலை இடப்பெயர்வினால் 1995 ஆம் ஆண்டில் தற்காலிகமாக மூடப்பட்டது. ஆயினும் பழைய மாணவர்களின் முயற்சியாலும் உடுவில் கல்விக் கோட்டம், வலிகாமம் கல்வி அலுவலகம் ஆகியவற்றின் அனுசரணையாலும் 2002 ஆம் ஆண்டில் மீளத்திறக்க முயற்சி எடுக்கப்பட்டது. அன்று காடடர்ந்து மூடிய நிலையில் இரு கட்டடங்களும் சிதைந்து இருந்ததைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றிய யான் நேரில் பார்க்கமுடிந்தது. அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவன உதவியுடன் புனரமைப்பதற்குப் பொருத்தமான அதிபராக திரு.த.வாமதேவன் அவர்களை நியமித்து அவர் மேற்பார்வையில் துரித கதியில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அதனால் 2003.02.14 ஆம் நாள் பாடசாலை திறந்துவைக்கப்பட்டது. தொடர்ந்து பாடசாலை நடத்துவதற்கு வேண்டிய வளங்களை சேர்ப்பதில் ஈடுபட்டார். 2004 ஆம் ஆண்டு சனவரியில் தரம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டு இன்று தரம் 5 வரை உள்ள ஆரம்பப் பாடசாலையாக மிளிர்கின்றது. அதிபர், ஆசிரியர்களின் விடா முயற்சியினால் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் குடும்பமட்டம், கோட்ட மட்டம், வலய மட்டம், மாவட்ட மட்டம் வரை போட்டிகளில் பங்குபற்றியும் இடங்களைப் பெற்றுவருவது பாராட்டுக்குரியது. இப்பாடசாலை மென்மேலும் வளர்ந்து வட ஏழாலை மக்களுக்குச் சேவை செய்ய வாழ்த்துகின்றேன். 120 ஆம் ஆண்டு அகவையில் வெளிவரும் சிறப்பு மலரையும் வாழ்த்தி பாடசாலைச் சமூகத்திற்கும் எனது வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். மேலும் இவ்வாண்டில் முதன்முதல் தோற்றிய 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வில் இருவர் தெரிவானது மகிழ்ச்சிக்குரியது. அம் மாணவர்களையும் போதித்த ஆசிரியர், அதிபரையும் மீண்டும் வாழ்த்துகின்றேன்.

**திரு. அ. தற்பரானந்தன்,**

**ஓய்வுபெற்ற கோட்டக்கல்வி பணிப்பாளர், கந்தரோடை, சுன்னாகம்.**

# ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



120ஆவது அகவையில் தடம்பதிக்கும் யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை இங்குள்ள இளம் உள்ளங்களின் அறிவுக் கண்களுக்கு ஒளியூட்டும் நிலையமாக மானிடவாழ்க்கைக்கு வள மூட்டும் நல்ல கல்விப் பணிசெய்துவரும் நீண்ட வரலாற்றுப் பெருமை மிக்க ஓர் ஆரம்பப் பாடசாலையாகும். வலிகாமம் கல்வி வலயத்தின் உடுவில் கோட்டத்தில் அமைந்துள்ள இப்பாடசாலை நாட்டின் பல்வேறு விதமான அசாதாரண சூழ்நிலைக்கு மத்தியிலும் எதிர்நீச்சல்போட்டு தனக்கென தனிமுத்திரை பதித்துள்ளது குறிப்பிடத்தக்கது. இப்பாடசாலையின் வளர்ச்சியில் அரும்பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

பாதுகாப்பு வலயத்துக்குள் அமைந்துள்ள இப்பாடசாலை பல்வேறு இன்னல்களுக் கும் மத்தியில் தற்போதய அதிபர் திரு.த.வாமதேவன் அவர்களின் அர்ப்பணிப்பும் தெளிந்த சிந்தனை கொண்ட வழிநடத்தலில் கல்வி, விளையாட்டு மற்றும் ஏனைய நிகழ்வுகளிலும் முன்னேற்றம் கண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. நீண்டதொரு கல்விப் பாரம்பரியமான இப்பாடசாலை எத்தனையோ சிறார்களுக்கு கல்வி புகட்டிய தாய்வீடு. இங்கு கற்றவர்கள் நாலா திசைகளிலும் புகழ்மிக்க பணிகளில் உயர்நிலையில் இருப்பது பாடசாலையின் பெருமைக்குச் சான்றாகும்.

இன்று பாடசாலைச் சமூகத்தினர் ஒன்றிணைந்து 120 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதும் அதனை ஒட்டி இம்மலரை வெளியீடு செய்வதும் பொருத்தமானதே. 2003 ஆம் ஆண்டு மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையில் இவ்வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் 20% மாணவர்கள் சித்தியடைந்தமை இங்கு குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

இதற்காக அயராது உழைக்கும் அதிபரையும், தோளோடு தோள் நின்று உழைக்கும் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும், மாணவர்களையும் ஏனைய நலன்விரும்பி களையும் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன்.

**திரு. சி. மாதவகுமாரன்**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி)**
**வலிகாமம் வலயம், மருதனார்மடம்.**

# குடும்பப் பாடசாலை தலைவரின் வாழ்த்துச்செய்தி



**"கல்விநலம் அறியாத கசடர்கள் வாழ்கின்ற**
**ஊர்களினை எரியினுக்கு இரையாக்கிட வேண்டும்"**

என்ற பாரதியின் வேகமிக்க வரிகள் ஒரு கிராமத்தில் கல்விச் சாலைகளின் முக்கியத்துவத்தை உணர்த்துவனவாய் உள்ளன. ஒரு சமூகத்தின் எதிர்கால வாழ்வியலுக்கு வழிகாட்டியாக அவ் வூர்ப்பள்ளிகள் இலங்கவேண்டும் அவ்வகையில் செயற்படும் பள்ளிக ளில் ஒன்றாக யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலையும் விளங்கு கின்றது எனப் புகழாரம் சூட்டுவதில் பெருமையுறுகின்றேன்.

ஐரோப்பியர் காலத்து கிறிஸ்தவ பாரம்பரியத்தில் வளர்ச்சி பெற்ற பாடசாலைக ளுடன் ஒப்பிடுகையில் 1888.10.11 இல் ஓர் ஆரம்பப் பாடசாலையாக அமெரிக்க மிச னரி நிர்வாகத்தவர்களின் தென்னிந்தியத் திருச்சபையால் இப்பள்ளி ஸ்தாபிக்கப்பட்டது.

**"நாட்டின் இதயம் கிராமம்**
**கிராமமப் பாடசாலைகள் வளர்ச்சி பெற்றால் தான் நாடு ஒளி பெறும்".**

என்ற காந்தீயவாதியின் சிந்தனைகள் கிராமங்களில் செயலுருப் பெறத் தொடங்கின. இவ்வகையில் இப்பாடசாலையின் உயர்ச்சியை அறிந்த அரசாங்கம் 1963 இல் தனது நிர்வாக ஆளுகைக்குள் இப்பாடசாலையை உள்வாங்கியது அன்றுதொட்டு படிப்படியான வளர்ச்சியை இப்பாடசாலை அடைந்து வருகையில், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1990 இலிருந்து மாணவர் வரவு குறைந்து கொண்டே சென்றதனால் 1995 இல் தற்காலிகமாக இப்பள்ளியை மூடவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

**"ஊருக்கு உழைத்திடல் யோகம்- நல்ல ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்"**

பலர் எடுத்த முயற்சியின் பயனாகத் தகுதியான அதிபர் ஒருவரைத் தெரிவு செய்வதில் கல்வி வலயம் ஈடுபட்டவேளை, நேரமறிந்து தேவையுணர்ந்து நேர்த்தி யுடன் வந்து தோன்றியவர் தான் திரு.த.வாமதேவன் எனும் நல்லதிபர் 2003.02.14 இல் மீள ஆரம்பிக்கபட்டு 2004. இல் தரம் 1 இல் 10 மாணவர்கள் சேர்ந்த நிலை யில் இன்று 45 மாணவர்களோடு மிளிரும் இப்பாடசாலையில் இவ்வருடம் 02 மாண வர்கள் புலமைச்சித்தியடைந்துள்ளனர் எனில் இவ்வதிபரின் அயரா முயற்சியே காரணம் எனலாம். கல்வியில் மட்டுமல்ல இதர செயற்பாடுகளிலும் இப்பள்ளி பல சாதனைகளை ஈட்டி வருகின்றமை கண்கூடு இவ்வருடம் 120ம் ஆண்டை நிறைவு செய்யும் வேளையில் சிறப்புமலர் வெளிவருவதையிட்டு நான் மனமார வாழத்துகின்றேன்.

காலத்தின் தேவையறிந்து ஒரு வரலாற்று ஆவணமாக இம்மலர் வெளிவருவது நாளை வரும் சமூகத்திற்கு ஓர் எடுத்துக் காட்டாய் அமையும். தூரநோக்குக் கருதி இம்மலர் வெளிவருவதையிட்டு உளமார வாழத்துகின்றேன்.

வாழ்க இப்பள்ளி! வாழ்க தமிழ்ப்பற்று!

**திரு.செ.சிவநடராசா**
**தலைவர், ஏழாலை குடும்பப் பாடசாலை,**
**அதிபர், யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை.**

# அயற் பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



பாரம்பரிய கல்விச் செயற்பாட்டிலிருந்து நிறுவன மயப்படுத்தப்பட்ட கல்விச் செயற்பாடு அமெரிக்க மிசனரிமாரின் வருகையின் பின் யாழ்ப்பாணத்தில் செயற்படுத்தப்பட்டது எனலாம். சமய அறிவுடன் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் நடைமுறைக்கு வந்தன.

இந்நிலையில் ஏழாலை வடக்கில் ஸ்தாபிக்கப்பட்ட இப்பாடசாலை ஏழாலை, ஊரங்குனை மக்களின் கல்வி வளர்ச்சியில ஆதிக்கம் செலுத்தியது. மிகவும் சிறப்புடன் இயங்கி வந்த இப்பாடசாலையில் ஊரங்குணையில் உள்ள எனது சித்தி, சகோதரி ஆகியோர் இப்பாடசாலையில் கல்வி கற்று தேர்ச்சி பெற்றமை இன்றும் நினைவு கூரத்தக்கது.

காலச் சக்கரத்தில் பல்வேறு காரணங்களால் இப்பாடசாலை சோபை இழந்து தற்காலிகமாக மூடப்பட்டு 2003ம் ஆண்டு மீண்டும் எமது முன்னாள் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனின் அயராத முயற்சியினால் மீண்டும் திறக்கப்பட்டு இளமையும், துடிப்பும், சமூக சேவையில் தன்னலமற்ற சேவையாற்றும் திரு.த. வாமதேவன் அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். அன்று பாடசாலையின் தேவைகளை யான் மனமுவந்து வழங்கி இப்பாடசாலை இயங்க உதவியுள்ளேன்.

எல்லைப்புறப் பாடசாலைகளின் வீழ்ச்சி ஏனைய பாடசாலைகளின் வளர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். இருப்பினும் அதிபர் திரு. த. வாமதேவன் அவர்தம் ஆசிரியர் குழாம், பெற்றோர் அவர்களின் விடாமுயற்சியினால் இன்று இப்பாடசாலை புத்துயிர் பெற்று கோட்ட, வலய மட்ட இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வெற்றிகளைக் குவித்துள்ளது.

பாடசாலை மீள ஆரம்பிக்கப்பட்டு முதன்முறையாக தரம் 5 மாணவர்கள் 2008ம் ஆண்டு புலமைப்பரிசிலுக்கு தோற்றி 2 மாணவர்கள் சித்தியடைந்தமை வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

இறுதியாக எல்லைப் புறப்பாடசாலையின் இவ் எழுச்சியானது ஏனைய எல்லைப்புறப் பாடசாலைகளுக்கு ஓர் உந்து சக்தியாகவும், விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளதுடன் சரித்திரம் மீளவும் வரும் என்பததை எடுத்துக்காட்டுகின்றது.

இந்நன்னாளில் அதிபர், ஆசிரியர், பெற்றோர், மாணவர்களிற்கு என் நல்வாழ்த்துக் களைத் தெரிவிப்பதுடன் இப்பாடசாலை மேலும் வளரும் என்ற திடமான நம்பிக்கை யுடன் உள்ளேன் என்பதையும் கூற விரும்புகின்றேன்.

**திரு. சி. சிவகுமாரன்,**
**அதிபர்,**
**யா/குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்.**

# முன்னாள் அயற்பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



பாடசாலைகளே சமூக அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. அந்த வகையில் ஏழாலை வடக்கு கிராமச் சிறார்களின் ஆரம்பக்கல்விக்கு யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை 11.10.1888 லிருந்து சேவையாற்றி வருகிறது. இப்பாடசாலை ஆரம்பத்தில் அமெரிக்கன் மிசனரிமாரினாலும், 1963லிருந்து இலங்கை அரசினாலும் நிருவகிக்கப்பட்டு வருகிறது. 1990களின் இடப்பெயர்வு இப்பாடசாலையை மூடவைத்தது.

இப்பாடசாலை மீண்டும் 2003.02.14ல் மீளத் திறக்கப்பட்டபோது பொருத்தமான ஒரு அதிபரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு எனக்களிக்கப்பட்டது. நேரடியான பரிச்சயமில்லாதபோதும், திரு.த.வாமதேவன் அவர்களின் பொதுப்பணியார்வம், சமூகசேவை வேலைத்திட்டங்களை நிறைவேற்றும் முகாமைத்துவப் பண்புகளைப் பலவருடங்களாக அவதானித்ததன் விளைவாக, அவரைச் சிபார்சு செய்தேன். எனது எதிர்பார்ப்பு வீண்போகவில்லை.

அவர் இப்பாடசாலைச் சமூகத்தை இசைவாக்கம் பெறச்செய்து; 2004லிருந்து இன்றுவரை பாடசாலைக்கல்வி, இணைப்பாடவிதான செயற்பாடுகள் அனைத்திலும் குடும்பமட்டம், கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்டமட்டம் வரை போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற உழைத்துள்ளார். சாதனைகள் தேசிய மட்டம்வரை வளர எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

**திரு. அ.நடராசசுந்தரம்,**
***J.P, B.A, Sp.Trd, SLPS -I.***
**ஓய்வு நிலை அதிபர்,**
**யா/ஏழாலை மகாவித்தியாலயம்**

# ஏழாலை வடக்கு கிராம சேவையாளர் அவர்களின் வாழ்த்துச்செய்தி



உடுவில் கோட்டத்தில் ஆரம்பப் பாடசாலைகளில் ஒன்றான யா/ஏழாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையானது தனது 120 ஆம் ஆண்டில் சிறப்பு மலரை வெளியிடுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சியடைவதோடு மலர் சகல சிறப்பும் பெற வாழ்த்துகின்றேன்.

பல வருடங்களாக இன்னல்களைச் சந்தித்து அழிவுற்ற நிலையிலே காணப்பட்ட இப்பாடசாலையானது தற்போது 5 வருடங்களாக சொந்த மண்ணிலே தலைநிமிர்ந்து நிற்கின்றது. பல பாடசாலைகளில் காணப்படும் வசதிகள் இங்கு இல்லாதபோதும் தனது தனிச்சிறப்பை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டி வருகின்றது. எண்ணிக்கையில் குறைந்தளவான ஆசிரிய மாணவர்களை கொண்டிருந்தபோதும் இப்பாடசாலை மாணவர்கள் பிரபல பாடசாலைகளுடன் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

பெருமைக்கும் புகழுக்கும் ஊன்றுகோலாக இருந்து செயல்புரியும் அதிபர், ஆசிரியர், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரின் உதவிகளினால் இப்பாடசாலை மென்மேலும் ஆல்போல் தழைத்து இம்மண்ணிலே அறுகுபோல் வேரூன்றி வளர்ந்திட இறையாசியை வேண்டிநிற்கின்றேன்.

**திரு. க. சிவானந்தம்.**
**கிராம சேவையாளர்,**
**ஏழாலை வடக்கு-J/205.**

# அதிபர் ஆசியுரை



யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை 1888 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 2008 ஆம் ஆண்டில் 120 ஆவது அகவையில் தடம்பதிக்கும் இப் பாடசாலையின் அடிச்சுவடுகளை மீள ஒருமுறை பார்ப்பதற்கு இம்மலர் ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. தற் போது உயர்பாதுகாப்பு வலய பிரதேசத்தில் சனத்தொகை குறைந்த பிரதேசத்தில் இருந்தும் இப்பாடசாலையானது நாட்டின் பல்வேறு இன்னல்களுக்கும் இடையூறுகளுக்கும் இடையில் எதிர்நீச்சல் போட்டு தனது இலட்சியத்தினையும் பாரம்பரியத்தினையும் கைவிடாது தனக்கென சிறப்பிடம் பெறுவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாறாக பழமை வாயந்த இப்பாடசாலையின் வரலாற்றினை எழுத்துமூலம் ஆவணப்படுத்தும் முயற்சிகள் இதுவரையும் கைகூடவில்லை என்பது பலரும் அறிந்த உண்மை. இப்பாடசாலையின் 120 ஆவது ஆண்டு நிறைவு விழாவிற்கு மலர் வெளியீடு செய்யவேண்டும் என்பது எனது நீண்டநாள் ஆசை. ஆயினும் இப் பாடசாலையின் வரலாறுகளோ தரவுகளோ வேறு தகவல்களோ எங்கு தேடியும் கிடைக்க முடியாததொன்றாகிவிட்டது. ஆயினும், நானும் பாடசாலைச் சமூகமும் சேர்ந்து எங்களால் இயன்ற தகவல்களைத் திரட்டி இம்மலரில் உள்ளடக்கியுள்ளோம்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலிகாம வலயக் கல்விப் பணிப்பாளர், உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர், அயல் பாடசாலை அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவரும் இந்நூல் வெளிவர பண உதவி செய்த செல்வரட்ணம் குடும்பத்தவருக்கும் வர்த்தகர்கள், அனைவரதும் ஒத்துழைப்பில் வெளிவருகின்ற இம்மலர் அனைவரதும் கைகளில் தவழ்ந்து மணம் பரப்பி தனது சாதனைகளை எல்லோரும் அறியச் செய்வதுடன் தொடர்ந்தும் சாதனைகள் படைக்க இறைவனின் அருட்கடாட்சத்தையும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திரு.த.வாமதேவன்,**

**அதிபர்,**

**யா/ஏழாலை வடக்கு, அ.மி.த.க. பாடசாலை.**

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையானது தனது 120 ஆவது ஆண்டு நிறைவு மலரை வெளியிடுவதையிட்டு பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இக் கிராமத்திலுள்ள மாணவர்கள் சொந்த இடத்திலேயே தமது ஆரம்பக்கல்வியை ஆரம்பிக்க வேண்டும் என்ற நோக்குடன் அமெரிக்கன் மிஷனரிமார்களால் ஸ்தாபிக்கப்பெற்ற இப் பாடசாலையானது ஏழை மாணவர்களுக்கு நன்னிழல் வழங்கிய கொன்றைமரம் போன்று விளங்கி வருகின்றது. பாடசாலைக்கேயுரிய பௌதீகவளங்கள் இல்லை. மாணவர்களின் அறிவுத்திறனை விருத்திசெய்யக்கூடிய நூலகம் இல்லை. அவர்கள் தமக்கேயுரிய உடற் திறமைகளை வெளிக்காட்டுவதற்குரிய விளையாட்டு மைதானம் இல்லை. கலை நிகழ்ச்சிகளை மேடையேற்றுவதற்குரிய ஒரு தனியிடம் இல்லை.

இப்படியிருக்கின்ற போதிலும் தமக்கேயுரிய சிறிய வளங்களைப் பயன்படுத்தி ஏனைய பாடசாலை மாணவர்களுடன் சளைக்காது போட்டியிட்டு வெற்றியீட்டி யாவராலும் பெருமையுடன் புகழப்பட்டு வருகின்றது. கற்றல், கற்பித்தற் செயற்பாடுகள், இணைபாடவிதானச் செயற்பாடுகள், ஐந்தாம்தர புலமைப் பரீட்சைப் பெறுபேறுகள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், கல்வித் திணைக்களத்தினர் ஆகியோரின் நல்லுறவுகள் நிறைந்த ஒரு பாடசாலையாகத் திகழ்கின்றது.

இன்றுபோல் என்றும் இப்பாடசாலையானது கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறப்புடன் வருடாவருடம் தொடர்ந்து வளர வாழ்த்துவதில் அகமகிழ்வடைகின்றேன்.

**திரு. இ. விஜயஜெயராசா**
**செயலாளர்,**
**பாடசால அபிவிருத்திச் சங்கம்.**

# மலராசிரியரின் உள்ளத்திலிருந்து...



ஏழாலை வடக்குப் பிரதேசத்தில் தற்போது ஆரம்பக்கல்விக்கான அடித்தளத்தை மிகவும் உறுதியான முறையில் வழங்கிக்கொண்டிருப்பது யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை என்பது யாரும் மறுக்க முடியாததாகும். இத்தகைய சிறப்புமிகு இப்பாடசாலை இன்று நூற்று இருபதாம் ஆண்டு நிறைவு விழா கொண்டாடு வதையிட்டு எமது கிராமமே பேருவகை அடைகின்றது எனலாம்.

சிறுவர்களுக்கு கல்விச் செல்வத்தை அளித்துக்கொண்டிருக்கும் இப்பாடசாலை வரலாற்றினையும் சிறப்பினையும் கூற இங்கு படித்து இன்று பல பதவிகளில் இருக்கும் அறிஞர்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம். வீடு கட்ட அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அதுபோல ஒரு மனிதனின் வாழ்வில் ஆரம்பக்கல்வியே சிறப்பாக அமைய வேண்டும். இத்தகைய அறிவுக் களஞ்சியமாக விளங்கும் இப்பாடசாலை வரலாற்றைத் தொகுத்து ஆவணப்படுத்தவேண்டும் என்ற பேரார்வம் எமது அதிபருக்கு ஏற்பட்டதனாலேயே இன்று இம்மலர் எழுந்துள்ளது எனலாம்.

நாட்டின் சூழ்நிலைக்கு ஈடுகொடுக்கும் முகமாக இப்பாடசாலை இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் இயங்கி பின்னர் மூடப்பட்டநிலையிலும் இருந்தது. இப்பாடசாலையை மீளவும் திறப்பதற்கு எமது அதிபர் திரு.த.வாமதேவன் அவர்களும் ஆசிரியர்களும் இவ்வூர்மக்களும் அயராதுபாடுபட்டனர். அவர்களது முயற்சி வீண்போகவில்லை. மீளவும் பாடசாலை திறக்கப்பட்டு இன்று கல்வியிலும் விளையாட்டிலும் ஏனைய துறைகளிலும் சிறப்பான முறையில் பாடசாலை முன்னெடுக்கப்படுவதையிட்டு இப்பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையிலும் மலராசிரியர் என்ற வகையிலும் நான் பெருமையடைகின்றேன்.

இம்மலரை வெளியிடுவதற்கு உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், நலன் விரும்பிகள், வெளிநாட்டிலுள்ள அன்பர்கள் அனைவரதும் ஒத்துழைப்புடன் இம்மலர் வெளிவருவது மகிழ்விற்குரிய செய்தியாகும். இவ்வாறான ஒப்புயர்வற்ற பணிமூலம் இம்மலர் வெளிவருகிறது எனலாம். இப்பாடசாலை என்ன நோக்கத்திற்காகக் கட்டி எழுப்பப்பட்டதோ அந்த நல்நோக்கம் நிறைவேற இம்மலரின் வெளியீடும் அமையும் என எண்ணுகிறேன். வாடா மலராய் நின்று நறுமணம் வீச எல்லாம் வல்ல சித்திவிநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**திருமதி சுஜந்தினி குருபரன்**
**ஆசிரியர்,**
**யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை.**

# மலர்க்குழு செயலாளரின் உள்ளத்திலிருந்து...



அன்பினொடு அறம் பேசும்
பண்பினொடு பார் புகழும்
இன்னமுது தேன் சுரக்கும்
ஏராளர் வாழ் பூமி ஏழாலை

எல்லாம் வல்ல இறைவனின் ஆசியோடு ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையின் நூற்று இருபதாவது ஆண்டு மலரினை உங்கள் முன் வைப்பதை எண்ணி பேருவகை அடைகின்றோம். பாடசாலைத் தாயவளின் கருணையால் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், சர்வமதப் பெரியோர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பின் பயனாக இந்நூல் மலர்வதையிட்டு முதற்கண் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

ஏழாலைப்பதி ஈன்றெடுத்த ஆசிரியரான திரு திருமதி செல்வரத்தினம் அவர்களின் பாசமிகு பிள்ளைகள் நன்றியுடையவர்களாகின்றனர். ஏனெனில் இவர்கள் செய்த பேருதவியினாலேயே இம்மலர் வெளியிடப்பெறுகின்றது. வெளிநாட்டிலிருந்து வருகை தந்ததும் எமது சங்க உறுப்பினர்களுடன் நாமும் அவர்தம் இல்லம் சென்றோம். இன்முகமான வரவேற்பு. உபசரணை எமது கோரிக்கைகளை முன்வைத்தோம். எதுவிதமான மறுப்புமின்றி மிகவும் சந்தோசமாக அவர்தம் உள்ளங்களிலிருந்து ஒப்புதல் வார்த்தைகள் தந்தனர். அதற்கான பணத்தை மிக விரைவில் அனுப்பியும் வைத்தனர். மேலும் எமது பாடசாலை அதிபரின் அயராத உழைப்பும் விடா முயற்சியும் இம்மலர் வெளியீட்டிற்கு உறுதுணையாக அமைந்தது.

மேலும் இம்மலர் வெளியீட்டிற்கான வாழ்த்துச்செய்திகளையும் ஆசியுரைகளையும் வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மலருக்கு ஆக்கங்கள் தந்த கல்வி சார் பெரியோர்கள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவச் செல்வங்கள், பழைய மாணவர்கள் ஆகியோர்க்கும் மனமுவந்து நன்றிகளை தெரிவிக்கின்றோம். மேலும் முதன் முறையாக எமது பாடசாலையில் மலர்கின்ற புதிய மேலைத்தேய இசைக்கருவி அணியை (பான்ட் வாத்தியம்) மிகக் குறுகிய கால இடைவெளிக்குள் மிகச் சிறப்பாக பயிற்றுவித்துத் தந்த திருமதி ஜெயலஷ்மி சிறிதரன் அவர்களுக்கும் அவரோடு உதவி புரிந்த அனைவருக்கும் இதயம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இம் மலரினை

மிகவும் பௌவியமாக அமைத்து கணினி வடிவமைப்பில் அச்சிட்டுத் தந்த யாழ். ACM பதிப்பகத்தினருக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளை தெரிவிப்பதில் அக மகிழ்கின்றோம்.

மேலும் இன்னும் இன்னும் எமது கல்லூரித் தாயவள் எமக்களித்த அரிய பொக்கிஷங்களாக இருந்து எம்மோடு தோளோடு தோள்நின்று எல்லாவழிகளிலும் எமக்கு ஆதரவாக நின்று உதவிய, உதவுகின்ற, உதவும் உள்ளங்களுக்கு இந்நேரமல்ல எந்நேரமும் நன்றிகளைத் தெரிவிப்பதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

எனவே இம்மலரினை ஆக்கபூர்வமான சிந்தனையோடு வெளியிடஉதவிய திரு.திருமதி செல்வரத்தினம் குடும்பத்தினருக்கு எமது மனம்முவந்த நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

**திரு. ப. அருமைநாதன்**
**ஆசிரியர், யா/ஏழாலை வடக்கு, அ.மி.த. பாடசாலை.**

# நூற்றி இருபதாம் ஆண்டு விழாக் காண விழைந்த ஏழாலை வடக்கு அ.மி.த.க அன்னையின் அடித்தளம் வாழ்க!

சீனிவாத்தியார் முதலாகச் சீர்பெற்ற அறிஞர் பெருமக்கள் அதிபர் ஆசிரியர்கள் தம் ஒத்துழைப்பால் ஆண்டு பலவாக அரசோச்சி தன் கல்விப் புலத்தின் மூலம் பல்கலைக்கழக துணைவேந்தர், வைத்தியர்கள், பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள், பல்துறைசேர்ந்த உயர் உத்தியோகத்தர்கள், நல்வாழ்க்கை திறனுடைய நற்பிரசைகள் என்ற வகையில் பெரும் தடத்தினைப் பதித்து; அரசியல் தளப்பங்களால் ஏற்பட்ட தாக்கம் காரணமாக ஆண்டு பன்னிரண்டு ஆக அங்கிங்கென்று அல்லல்பட்டு அலையுண்டு; காலச்சுழற்சி மாற்றத்தால் நடமாடும் கல்விச் சேவைப் பெருமக்கள் சேர கிராமத்துக் கல்வி மேம்பாட்டில் அக்கறை கொண்டு விழிப்புடன் இருந்த நலன்விரும்பிகள் துணையால் மீண்டும் தொடங்கியது மிடுக்கென.

ஆண்டில் தலைநிமிர்ந்த பள்ளித்தலம் இது. தானங்களில் சிறந்தது ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்ற நல்வாக்குக்கு அமைவாக இப்பள்ளித் தலம் தன்பணியைத் தொடர்கிறது.

இங்கோ

"குலனநன் தெய்வம் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம் மலை நிறைகோல் மலர் மாட்சியும்
உலகியல் அறிவொடு உயர்குணம் இயையவும்
அமைபவன் நூலுரை ஆசிரியன்னே"

என்ற நன்னூலார் நற்கருத்துக்கு அமைவான நிலம்போல் பொறுமை, மலைபோல் உறுதி, தராசு போல் நடுவுநிலை, மலர்போல் மங்கலம் அமைந்த ஆளுமை, வாண்மை ஆற்றல், அனுபவம், செயற்பாடு மிக்க அதிபரும் ஆசிரியகுழுவும் சிறந்த வழிநடத்தலைச் செய்கின்றனர். இதற்கு எல்லாம் பக்க பலத்துணையாக நிற்பவர்கள் பெற்றோர்கள். பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் ஆவார்கள்.

இந்தக் கட்டுக்கோப்புக்கு இருகைகொடுத்து இணைந்து செயற்பட நிற்கின்றன. பல்துறை சார்ந்த தாபனங்களும் இதற்கு மேலாக தெய்வ ஆசியை வேண்டி

நிற்கின்றார்கள். அறிவழிநிற்கும் அறிஞர் பெருமக்கள். எனவே இந்தக் கட்டுக்கோப்புடன் கல்வியெனும் பயிரை வளர்க்கும் பண்பாடு போற்றுதற்குரியது. இந்த நல்ல சூழ்நிலை சென்ற காலத்தின் பழுதிலாத் திறனுடன் எதிர்காலச் சிறப்பும் பெற்று இன்று போல் என்றும் எதிலும் ஏறுபோல் பீடு தடை போட்டு சமூக மூல வேரான கல்வித்துறையில் கலங்கரை விளக்காக நிமிர்ந்து நிற்கவும், செல்லும் நெறியெலாம் செம்மையாக செழுமை பெறவும் எல்லாம் வல்ல ஏழாலை வடக்கு புதுக்கிணற்றடி திருவாலங்காடு சித்தி விநாயகப் பெருமான் திருவருள் பொலிய வேண்டுமெனத் திரகரணசுத்தியுடன் வழிபட்டு இச்சஞ்சிகையில் வாழ்த்து என்ற வகையினை அ.மி.த.க. அன்னையின் திருப்பாதத்தின் முன் வைக்கின்றோம்.

**பாடசாலை வளர வேண்டும் என்ற ஆதங்கமுடன்**

**சின்னத்தம்பி கந்தசாமி**
**"பழமுதிர் சோலை"**
**ஏழாலை வடக்கு, ஏழாலை.**

மற்றவர் மகிழ்ச்சியாக இருக்க எப்போது வழிகாட்டுகிறோமோ அன்று முதல் நாம் மகிழ்ச்சியாக இருக்கத் தொடங்குகின்றோம்.

**- இங்கர்சால்**

சிலவேளைகளில் வாய்திறந்து பேசுவதைவிட பேசாமல் இருப்பதே மிக்க பயனை அளிப்பதாகும்.

Dr. **ராதாகிருஷ்ணன்**

# அதிபர் அறிக்கை

## பாடசாலைப் பதிவுகள் (14.02.2003......)

14.02.2003 அன்று வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. றெஜீனா இருதயநாதன் அம்மா அவர்களிடமிருந்து ஒரு அழைப்பு. அதைத் தெரிவிக்க வந்தவர் ஏழாலை மகா வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. அ. நடராஜசுந்தரம் அவர்கள். அன்றிலிருந்து உடனடியாக எனக்கு இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்டு முதன்முதலாக இப்பாடசாலையைத் தரிசிப்பதற்கு நானும் வலயக்கல்விப்பணிப்பாளரும் , அப்போதைய திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு.வி.சச்சிதானந்தம் அவர்களும் வந்தோம். கடுகு நாவல் பற்றைகளும், மஞ்சமுன்னா மரங்களும் நிறைந்த காணியே பாடசாலைக் குரிய பகுதியாக காட்சியளித்தது

ஒரு வாரத்தில் GTZ இன் IS அலகைச் சார்ந்தவர்கள் உடனடியாகவே துப்பரவு பணியினை தொடங்கி 50 x 20 அளவு கட்டடத்தினை அமைத்துத் தந்து 26.06.2003 அன்று திறப்புவிழா நடைபெற்றது. இங்கு கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் உட னடியாகத் தொடங்காமையால், நான் தொடர்ந்தும் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலையிலும், திரு.செ.யூட்ரவிநாத் அவர்கள் யா/ஏழாலை சைவ மகாஜனா வித்தியாசாலையிலும் கற்பித்தல் பணியில் ஈடுபட்டோம்.

யுனிசெவ் நிறுவனத்தால் தண்ணீர்த்தாங்கி கட்டித் தரப்பட்டது. பாடசாலை தொடங்கி யதிலிருந்து இடமாற்றம் பெற்றுச் செல்லும் வரை ஒவ்வொரு தவணை ஆரம்ப நாளன்று வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் அம்மா அவர்களும் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு.சு.சுந்தரசிவம் அவர்களும் வருகை தரு வது வழமை. ஏனென்றால் ஆரம்பித்த பாடசாலை சிறப்பாக இயங்க வேண்டும் என்பது அவர்களது ஆவல். முன்னாள் வலயக்கலவிப்பணிப்பாளர் அவர்கள் எமது பாடசாலைக்கு எது, எது தேவை யென்று உணர்ந்து, அத்தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்து தந்தவர். எமது பாடசாலைக் கடிதத் தலைப்பில் ஒரு வேண்டுதல் விடப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கு முன்னுரிமை கொடுத்து செயற்பட்டவர். அத்தோடு அக்காலப் பகுதியில் இருந்த கணக்காளர் திரு.யோகேந்திரராஜா அவர்களும் பெரிதும் எமக்கு உதவியுள்ளார்.

ஏழலை வடக்கு அ.மி.த.க பாடசாலைக்கு அதிபராக நியமனம் பெற்று வந்தபோது முதலில் எனக்கு அறிமுகமாகியவர்கள், பாடசாலைக்கு முன் உள்ள குருமனையில் இருந்த அருட்திரு. யோன்.லிங்கேஸ்வரன் அவர்களும் திரு. கஜன் அவர்களும், முதலாவது கட்டட தொகுதி கட்ட ஆரம்பித்து அதன் திறப்பு விழா வரையான சகல செயற்பாடுகளுக்கும் என்னுடன் சேர்ந்து செயற்பட்டார்கள்.

பாடசாலை மீள ஆரம்பித்தபோது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் முதலாவது செயலாளராக கடமையாற்றியவர் ஓய்வுபெற்ற கணக்குப் பரிசோதகர், விவேகானந்த பரீட்சைச் சபை செயலாளர் திரு.சி.கந்தசாமி ஆவார்.

2004ல் தரம் 1இல் மாணவர்களைச் சேர்ப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்ட போது இவ்வூர் கிராம அலுவலர் திரு.க.சிவானந்தம் அவர்கள் பங்களிப்பு மிகப் பெரியது. தன்னுடைய பிரிவிலுள்ள 10 மாணவர்களைச் சேர்த்து, கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. இதிலிருந்து படிப்படியாக வகுப்புகள் அதிகரிக்கப்பட்டு இந்த ஆண்டு தரம் 5 வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டு மொத்தமாக 45 மாணவர்கள் கற்கிறார்கள். இந்த ஆண்டு முதன்முறையாக தரம் 5 இல் 10 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 2 பேர் சித்தியடைந்துள்ளார்கள். அத்துடன் 2004லிருந்து இன்று குடும்பம், கோட்டம், வலயம், மாவட்டம் என்று பல படிகளில் முன்னேறி சாதனை படைத்து வருகின்றனர்.

அதேபோல வலிகாம வலயக் கலவிப்பணிப்பாளர் திரு. ப.விக்கினேஸ்வரன் அவர்கள் எமது தேவையை உணரந்து, 20 x 20 அளவு கொண்ட இரண்டு வகுப்பறைகள் சிறுவர் பாதுகாப்பு அனுசரணையுடன் பெற்றுத் தந்தார் அத்துடன் ஆசிரியர்களை எமது தேவைக்கேற்பவும் தந்துள்ளார. 2006ல் திரு. ப. அருமைநாதன் அவர்களையும், 2007ல் திருமதி சுஜந்தினி குருபரன் அவர்களைத் தற்காலிக இணைப்பிலும், 2008ல் திருமதி நகுலேஸ்வரன் கலைவாணியையும், தற்காலிக இணைப்பில் திருமதி. கௌசல்யா சிவசுதன் அவர்களையம் தந்து கற்றல், கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் உதவி வருகின்றார்.

அதேபோல உடுவில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு.செ.குபேரநாதன் அவர்களும் எமது வளர்ந்து வருகின்ற பாடசாலையின் தேவைகளை அறிந்து உரிய இடங்களுக்கு சிபார்சு செய்து தந்து கொண்டிருக்கிறார்கள்.

அயற்பாடசாலையான யா/ஏழாலை சைவமகாஜன வித்தியாலய அதிபர் திரு. நல்லையா சுப்பிரமணியம் அவர்கள் எமக்கு தேவையான போது தமது பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்களை அனுப்பி எமது விழாக்கள், நிகழ்வுகள் பலவற்றிலும் ஒத்துழைப்பு நல்கியவர் குறிப்பாக பாடசாலைச் சிரமதானப் பணிகளுக்கு மாண வர்களைத் தந்துதவியுள்ளார். 2004, 2005, 2007ல் நடைபெற்ற ஒளிவிழாக்களில் இரண்டு பாடசாலைகளும் இணைந்து சிறப்பாக செய்துமுடித்தோம். அத்துடன் எமக்கு வேண்டிய சரீர உதவிகளையும் அவர்கள் செய்து தந்தனர்.

அதுபோல் யாழ் குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய அதிபர் திரு. சி.சிவகுமாரன் அவர்களும் ஆரம்பத்தில் ஒரு தொகுதி தளபாடங்களைத் தந்து மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் தந்து எமது செயற்பாட்டை ஊக்கு வித்தார். அத்துடன் 2005 இல் ஒளிவிழாவினை எமது பாடசாலையுடன் இணைந்து யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம், யா/குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தி யாலயம் ஆகிய பாடசாலைகள் இணைந்து கொண்டாடினோம்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராஜா அவர்கள் 2006,2007ல் தொடர்ந்தும் எமது பாடசாலை வளர்ச்சி கருதி, பன்முகப்பட்ட வரவு செலவுத் திட்டத்தினூடாக நிதியுதவியை வழங்கி வருகின்றனர். குறிப்பாகக் கிணறு திருத்துவதற்கு ரூ. 50,000.00 தளபாடத்திற்கு ரூ. 100,000 தந்து உதவியுள்ளார்.

பாடசாலைக்கு கணனித் தொகுதி ஒன்றினை தென்னிந்திய திருச்சபைப் பேராயர் அதி. வண. கலாநிதி. டானியல் எஸ். தியாகராஜா அவர்கள் தந்து உதவியுள்ளார். அதற்கு இணைப்பாளராக நின்று செயற்பட்டவர் வண K.J.W. தேவசகாயம் அவர்கள். இதனை விட மாணவர்களுக்கு தேவையான கொப்பிகள் கலர்பெட்டி, கிளே, மருந்துப்பொருள்கள் போன்றவற்றை தென்னிந்தியத் திருச்சபையினர் பல தடவைகள் தந்துள்ளனர்.

இந்த ஆண்டு மேலைத்தேய (பாண்ட்) வாத்தியக் கருவித் தொகுதியை அறிமுகம் செய்துள்ளோம். உடுவில் கல்விக் கோட்டத்தில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளில் பாண்ட் வாத்தியத்தை அறிமுகம்செய்ததில் எமது பாடசாலை இரண்டாவதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலைக்கு மின்சாரத்தினைப் பெறுவதற்குரிய நிதியை பழைய மாணவர்கள், அயலிலுள்ளவர்கள் நலன் விரும்பிகள் ஆகியோரும் மின்வேலை செய்வதற்குரிய நிதியினை திரு. திருமதி கந்தசாமி குடும்பமும் செய்துள்ளார்கள்.

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினர் பாடசாலையை ஆரம்பிக்கும்போது இரண்டு தடவைகள் சிரமதானப் பணிகளைச்செய்து தந்தனர். அத்துடன் மாணவர்களுக்குப் புத்தகப் பைகளையும் தந்து உதவியுள்ளார்கள்.

நல்லூர் றோட்டரக்ட் கழகத்தினர் இடிந்த கட்டிடத்தை துப்பரவு செய்து தந்ததுடன், மாணவர்களுக்கான கழுத்துப்பட்டிகளை இலவசமாக தந்துதவியுள்ளார்கள்.

லீட்ஸ் நிறுவனம் மாணவர்களுக்குப் புத்தகப் பைகளைத் தந்து தவியுள்ளார்கள்.

யுனிசெவ் நிறுவனம் இரண்டு தடவைகள் கொப்பிகள் ,பென்சில், பேனைகளைத் தந்துதவியது. அத்துடன் மாணவருக்குச் சீருடைத் துணிகளையும் தந்துதவியுள்ளது.

ஓய்வுபெற்ற இலங்கை வங்கி மேற்தரக் கிளைமுகாமையாளர் திரு.சி.விக்னராஜா அவர்கள் "சிறுவர் கதைகள்" புத்தகத் தொகுதியினையும், மாணவர்களுக்குரிய சீருடைகளையும் தந்து உதவியுள்ளார்.

இப்பாடசாலையின் பழையமாணவர் திரு. தருமமூர்த்தி அவர்கள் 2008ம் ஆண்டு தரம் ஒன்றில் சேர்ந்த மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூபா500வீதம் வங்கியில் வைப்பிலிட்டுள்ளார் (ஒன்பது மாணவர்கள்) அத்துடன் இவ் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு (இருவர்) தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்க முன்வந்துள்ளார்.

2005ம் ஆண்டு தைமாதம் தொடக்கம் 14.02.2005 வரை கற்பித்தல் நடவடிக்கைக்காக கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆரம்பக்கல்வியை பூர்த்திசெய்த திரு.து.றமணன் ஆசிரியராக கடமையாற்றினார். (தற்காலிகமாக) பின்னர் நிரந்தர

நியமனம் பெற்று யா/ மத்திய கல்லுரிக்கு சென்றுள்ளார். அதனைத் தொடர்ந்து செல்வி த.சுஜிதா அவர்கள் தொடர்ந்து தொண்டர் ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

பாடசாலை 2004ல் தரம் , இல் தொடங்கப் பெற்று 2008ல் தரம் 5ல் காலடி எடுத்து வைக்கு முதாலது மாணவர் தொகுதியில் பத்து மாணவர்கள் பரிட்சைக்கு தேற்றியவர்களில் செல்வன் வி.பிரணவன், செல்வி இ.விதுசா ஆகிய இருவரும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். அத்துடன் குடும்ப, கோட்ட, வலய, மாவட்ட மட்டப் போட்டிகளுக்குச்சென்று சாதனை படைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

செல்வன் வி.பிரணவன் இந்த ஆண்டு 11 வயதின் கீழ் ஆண்களுக்கான சிறந்த வீரருக்குரிய விருதினை கோட்ட மட்டத்தில் பெற்றுள்ளார்.

## சாதனையாளர் விபரம்

**2008ல் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்**

1.செல்வி விதுஷா இராசசிறி (120 புள்ளிகள்)
2.செல்வன் விஜயஜெயராசா பிரணவன் (119 புள்ளிகள்)

**2008ற்குரிய சிறந்த வீர, வீராங்கனை.**

1.செல்வன் விஜயஜெயராசா பிரணவன்.
2.செல்வி லக்சிகா கணேசலிங்கம்.

**2008இற்குரிய நல்மாணாக்கர்.**

1.செல்வன் நா.துஜீபன். 2. செல்வி சு.பிரதீபா

**1.செல்வன் விஜயஜெயராசா பிரணவன்:**

⇨2005ல் உடுவில் கல்விக் கோட்டம் மனனப்போட்டி தரம் 2 - 5ம் இடம்.
⇨2008ல் கோட்டமட்ட விளையாட்டுபோட்டி.
11வயதின்கீழ் 100M - 2ம் இடம் 75M - 1ம் இடம்.
⇨2008ல் வலயமட்டப் போட்டி 100M , 75M – 2ம் இடம்.
⇨இந்துமயப் பொது அறிவுப் போட்டி - சித்தி
⇨பவள விழாவை முன்னிட்டு யா/சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை நடாத்திய பொது அறிவுப் போட்டி - ஆறுதல் பரிசு.
⇨2008 கோட்ட மட்டம் (விசேடம்) 100M, 75M. 3ம் இடம்.

**2. செல்வன் நாகராஜா துஜீபன்**

⇨கோட்டமட்ட தடகள விளையாட்டுப் போட்டி முடிவுகள்- 2008.
உயரம் பாய்தல் -3ம் இடம்.

⇨2007 வாய்பாடு மனனம், ஏழாலை குடும்பம் -3ம் இடம்
⇨இந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பொது அறிவுப் போட்டி - 2007 சித்தி

**3.செல்வி கணேசலிங்கம் லக்சிகா.**
⇨உடுவில் கல்விக் கோட்டம் 2007, 100 M 2 ம் இடம்
⇨உடுவில் கல்விக் கோட்டம் - 2008
100M - 2ம் இடம், நீளம் பாய்தல் - 2ஆம் இடம்.
⇨வலயமட்டம் - 2008, 100M -3ம் இடம்.
⇨2008 கோட்ட மட்டம் (விசேடம்)
நீளம் பாய்தல் - 3ம் இடம், 75M - 3ம் இடம்.

**4. செல்வன் செல்வராசா சஜீவன்**
⇨ 2007 தொண்டுபடு செய்முறை -5ம் இடம்.

**5.செல்வி சபாரத்தினம் கஜேந்தினி**
⇨கோட்டமட்ட தமிழ்மொழி தினப் போட்டி முடிவுகள் - 2008.
பிரிவு 1 ஆக்கத்திறன் வெளிப்பாடு 3ம் இடம்
⇨மாற்று ஆற்றலுள்ளோர் தினப்போட்டி - 2007
கவிதை - பிரிவு 1, 3ம் இடம்
⇨புண்ணிய நாச்சியம்மையார் தின திருக்குறள் மனனப் போட்டி-2008.
கீழ்ப்பிரிவு - 2ம் இடம் , வெண்கலப்பதக்கம்.
⇨இந்து சமயப் பொது அறிவுப் போட்டி- சித்தி
திருக்குறள் மனனம்- 2008 குடும்பமட்டம், 3ம் இடம்.

**6.செல்வி பிரதீபா சுதாகரன்**
இந்துசமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை- 2007 சித்தி

**7.செல்வன் இ.சிறிதரன்**
அகில இலங்கை பாடசாலை சிறுவர் சித்திரப் போட்டி (கண்காட்சி- 2005. **வலிகாம** வலயத்தில் தெரிவு செய்யப்பட்டவர்.)

**8.செல்வன் நித்தியானந்தம் தேனுசன்.**
⇨உடுவில் கல்விக் கோட்டம்- மனனம் 1ம் இடம்.
⇨மனனமுற்றோதல் தரம்3-3ம் இடம்
⇨பண்ணிசை- தரம் 3. 5ம் இடம்
**ஆங்கிலம் தனிப்பாடல் 2007**
⇨குடும்ப மட்டம் - 3ம் இடம்
**ஆங்கிலம் தனிப்பாடல் 2008**
⇨குடும்ப மட்டம் - 1ம் இடம்

➪கோட்ட மட்டம் - 2ம் இடம்
➪வலய மட்டம் - 3ம் இடம்

**2008ம் திருக்குறள் மனனம்**

➪குடும்பம மட்டம் - 1ம்இடம்

**2008ம் வாய்பாடு மனனம்**

குடும்ப மட்டம் - 1ம் இடம்

**கோட்ட மட்டம் தமிழ்மொழி தினப்போட்டி -2008**

➪இசைவும் அசைவும் 3ம் இடம்
➪குடும்ப மட்ட ஆங்கில சொல்வதெழுதல் 2 ஆம் இடம்

**9.செல்வி தெ.சுஜீபா**

நீதிச் செய்யுள் மனனம் கோட்ட மட்டம் - 5ம் இடம்

**10.செல்வி செல்வராசா கலக்சி**

ஆங்கிலம் தனிப்பாடல் குடும்ப மட்டம் - 1ம் இடம்

**11.செல்வி இ. டிலக்சனா**

பெரிய பந்தெறிதல் 3ம் இடம் (உப கோட்டம்)

**12.செல்வி உ.அபிதா**

குறிபார்த்து எறிதல், உபகோட்டம் - 1ம் இடம்.

**13.செல்வி க.கௌசல்யா**

2008 திருக்குறள் மனனம் - 2ம் இடம்

**ஆங்கிலம் குழுப்பாடல் குடும்ப மட்டம் 2007**

1. தரம் 2 - 3ம் இடம் 2. தரம் 3 - 3ம் இடம்

**ஆங்கிலக் குழுப்பாடல் குடும்ப மட்டம் 2008**

1.தரம் 3 - 2ம் இடம் 2. தரம் 4 - 2ம் இடம்

**கிளித்தட்டு குடும்ப மட்டம் -2008.**

ஆண், பெண் அணிகள் இரண்டும் மூன்றாமிடத்தை பெற்றுக்கொண்டது.

**அஞ்சலோட்டம் 4X50 M**

கோட்ட மட்டம் - பெண்கள் - 1ம் இடம்


**சிறுவர் அரங்கு 2007**

குடும்ப மட்டம் - 4ம் இடம்

**சிறுவர் அரங்கு 2008**

குடும்ப மட்டம் - 3ம் இடம்.

# ஆரம்பக் கல்வியில் புத்தாக்கத் தேர்ச்சிகளை பிரயோகிப்பதில் பெற்றார்களின் விழிப்புணர்வு



ஒருவரின் கல்வி பற்றிய தீர்மானம் அவர் அறிந்து வைத்துள்ளவற்றைக் கொண்டு எடுக்கப்படுவதில்லை. மாறாக அவரது செயற்பாட்டைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. கல்வியென்பது தகவல்களைத் தேடிப்பெறுதல் மட்டுமல்ல. வாழ்க்கையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தோன்றும் அறை கூவல்களை வெற்றிகரமாக எதிர் கொள்ளக்கூடிய சமநிலையான முழுமையான ஆளுமைப் பண்புகளையும் அடக்கமான மனதையும் கொண்ட ஒரு நற்பிரசை உருவாக்குவதாகும். இதற்கான அடிப்படைகளை ஆரம்பக் கல்வியிலிருந்தே வழங்குவதற்குப் புத்தாக்கத் தேர்ச்சிகள் துணைபுரிகின்றன. இப்புத்தாக்கத் தேர்ச்சிகள் என்பது ஆரம்பக்கல்வி மாணவர்களின் ஆக்கத்தின் செயற்பாடுகளை விருத்தியாக் களுடன் தொடர்புடையது இவ்வம்சம் ஆரம்பக்கல்வி பாடசாலைக் கலைத்திட்டத்தில் பிரயோகிக்கப்படுகிறது. இதனை வினைத்திறனாக்க பெற்றார்களின் விழிப்புணர்வும் படித்த மற்றும் படிக்காத பெற்றார்களுக்கான கல்வியும் இன்று முதன்மை பெறும் காரணிகளாகவுள்ளன.

ஆரம்பக்கல்வி என்பது உருமாறும் வல்லமை மிக்க மனித உரிமையாக அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஜனநாயகம், சுதந்திரம், மனிதவள மேம்பாடு யாவற்றிற்கும் அதுவே அத்திவாரம், கல்வி கற்பதற்கான உரிமை, வகுப்பறையை வழி நடாத்துகின்றது. பாடசாலைகளில் கற்றல் செயல்முறை சார்ந்த வெளிப்பாட்டு ஆக்கத் திறன்களை ஏற்படுத்தும் காரணியாகவுமுள்ளது ஆரம்பக்கல்வித்துறையே மனித வாழ்க்கையில் ஓர் உறுதியான ஆரம்பத்தை ஏற்படுத்துகின்றது. இன்று நவீன இத் துறை நோக்கிய ஆக்கத்திறன் அபிவிருத்திகள் பெற்றார் விழிப்புணர்வுகள் ஊடான செயலாற்றுகையாக சமூகமயமாகி எழுச்சியடைந்து வருகின்றன. இப்புதிய போக்குத் தொடர்பான எண்ணக்கருக்களை எமது ஆசிரியர்கள், பெற்றார்களிடையே ஏற்படுத்த வேண்டியிருக்கின்றது.

## மாணவர்களுக்கு புத்தாக்கத் தேர்ச்சிகளின் முக்கியத்துவம்.

1. அவர்கள் கற்றலினூடாக மகிழ்ச்சியாக இருப்பதற்கு வேண்டியவாய்ப்புக்களை வழங்குவதற்கு.
2 .புதியவற்றை ஆக்குதல் மூலம் கிடைக்கும் அனுபவத் தேர்ச்சிகளைப் பெற.
3. கற்பதில் ஆர்வத்தைப் பெறவும் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் கட்டியெழுப்பவும்.
4. நம்பிக்கையான வரவுகள் - உரித்துடைமையுணர்வுகள் சமூக ஒன்றிணைவு ஆகிய பண்புகளை விருத்தியாக்க



5. தன்னம்பிக்கை மற்றும் ஆளுமையை விருத்தியாக்க.
6. சமகால நிலைமைகளை உணர்தலும், சவால்களைச் சமாளிக்கும் உத்திகளையும் சரியான தீர்மானங்களை எடுக்கவும்
7. சுய வெளிப்பாட்டுக்கும் ஆக்கத்துக்கும் வேண்டிய வாய்ப்புக்களைப் பெற
8. மாணவர்கள் பாதுகாப்பு உணர்வைப் பெறுவதற்கும் இதன் விளைவாக தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் உணர்ச்சிகளை வெளிப் படுத்துவதற்குமான ஆதரவைப் பெற

என ஆரம்பக்கல்வி மாணவர்களுக்கு இப்புத்தாக்கத் தேர்ச்சிகள் மூலம் தலைமைத்துவ ஆற்றலும் சுயதிறன்களும் ஏற்படும். இவ் ஆக்கத்தின் தேர்ச்சிகள் விளையாட்டுக்கள் மூலமாகவும் முகிழ்கின்றன. விளையாட்டின்போது ஏற்படும் உடல் ரீதியான களைப்பும், மகிழ்ச்சியான உணர்வும் சேர்வதன் விளைவாக பிள்ளைகள் அமைதியையும், சமாதானத்தையும், புத்தாக்கத்தையும் அகத்தே உணர்ந்து கொள்வார்கள். எனவே அவர்கள் வெளியே செல்லவும் ஓடித்திரியவும் ஒருவருடன் ஒருவர் தொடர்பு வைக்கவும் கவலைகள் தீர்ப்பதற்கும் போதிய நேரத்தையும் வழிகாட்டல்களையும் பெற்றார்கள் வழங்கவேண்டும்.

மனிதர்களுடைய விரிசிந்தனைகளுடன் தொடர்புடைய ஆக்கதிறன் (Creativity) ஒரு புதிய பொருளை உருவாக்க புதிய வழிமுறைகளைக் காண ஒரு கவிதையை நாடகத்தை கதையை ஆக்க கருவிகளைக் கண்டுபிடிக்கவும் செய்யும் மனித ஆற்றலாக உள்ளது. கில்போட் என்ற அறிஞர் இவ் ஆக்கதிறனின் முக்கியமான 24 கூறுகளில் 7ஐப் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றார்.

1. பிரச்சினை பாரிய நுண்ணுணர்வு ( Sensitivity)
2. தடையினரித் துரிதமாகச் சிந்தித்தல் (Ideational Fluency)
3. சிந்தனையில் நெகிழ்ச்சி (Flexibility)
4. தனித்தன்மை (Onginality)
5. அகக்காட்சித்தகவல் (Intutive leap)
6. விடா முயற்சி (Persistance)
7. புதிய தொடர்புகளைக் காண விளைதல் (Seeking new relation ship)

இவ்வாறாகப் புத்தாக்கத்திறன் ஆயத்தம் உள்வளர்ச்சி உள்ளொளி தோன்றல், வெளிக்காட்டல் என்ற வகையில் ஆரம்பக்கல்வி மாணவர்களிடையே விருத்திகாணப் பின்வரும் செயற்பாடுகளும் வழிகாட்டுகின்றன.

## பாடுதலும் நடனமாடுதலும் (இசையும் அசைவும்)

இச் செயல்முறைகள் மாணவர்களிடையே புத்தாக்கத் தேர்ச்சிகளை விருத்தியாக்குகின்றன. இசையுடன் கூடிய அசைவுக்கல்வி (movement Education) பிரபல்யமாகியுள்ளது ஒத்திசையுடன் இணைந்த அசைவுகள் தாளத்தோடும்



இசையோடும் இணைந்த அசைவுகள் நடனமாடும் திறன்களைப் படி மலர்ச்சி கொள்கின்றன. தமது இடர்களை மறப்பதற்கும் மகிழ்ச்சியையும் புத் துணர்ச்சியையும் புதிய உணர்வுகளை வெளிக் காட்டவும் இவ் இசையும் அசைவும் உதவுகின்றன.

சூழலுடன் இடைவினைகளை விருத்தி செய்தல் சூழலை விளங்கிக் கொள்ளல், சூழலுடன் பொருத்தப்பாடு கொள்ளல் உடல் உள பலங் கைளக் கூட்டாகவும் தனியாகவும் பிரயோகிக்க ச்மூக இசைவாக்கம் பெற்று ஆக்கத் தேர்ச்சி களை விருத்தியாக்கபாடுதல் ஆடுதலூடான அசைவுக்கல்வி வழியேற்படுத்திக் கொடுக்கின்றன. இதனை மாணவர்களுக்கு வீட்டில், சமூகத்தில் கோவிலில் வழங்கும் செயன்முறைகளை விருத்தியாக்க வேண்டியுள்ளது. எழுதுதல் வரைதல், பேசுதல். பாடுதல் என்பவை நுண்ணிய அசைவுகளுடன் தொடர்புடையவை. ஊடலை இயக்கி உற்பத்தியைப் பெருக்கும் நடவடிக்கைகள் எல்லாவற்றிலும் அசைவுகளே அடிப்படையாகின்றன. அழகியல் ஆக்கச் செயற்பாடுகள் அனைத்தும் அசைவுகளினால் பிறப்பிக்கப்படுகின்றன. இவ்வாறான அசைவுக்கல்வி செயற்பாடுகள் மூலம் பின்வரும் புத்தாக்கத்திறன் அடிப்படைகள் வெளிவரும்.

1. கருத்து வெளிப்பாடு – சுதந்திரமாகக் கருத்து வெளியிடல்
2. கலைப்பொருள் உற்பத்தி – புதிய நுட்பத்தைப் பயன்படுத்தி பொருள் ஒன்றைச் செய்தல்
3. புதுக்கண்டுபிடிப்பு – தனது சுய செயலாற்றுகை மூலமான கண்டுபிடிப்பு
4. புதுமைச் சேர்க்கை – நடைமுறைகளில் புதிய சுவாரஸ்யமான தேவையான விடயங்களைச் சேகரித்தல்.

இவ்வாறு கல்வியின் சகல அம்சங்களையும் புத்தாக்கச் செயற்பாடுகள் மேம்படையச் செய்கின்றன. மாணவர்கள் தமது உணர்வுகளை மெதுவாக வெளியிடுவதற்கான சிறந்த ஊடகங்களாக ஆக்கத்திறன் வெளிப்பாடுகள் அமைகின்றன. அவர்களது வெளிப்பாடுகளுக்கும் சுதந்திரமாக அனுமதி கொடுங்கள் தீர்ப்புக் கூறாதபடி சகல செயற்பாடுகளையும் முதலில் ஏற்றுக்கொள்ளுங்கள். இது மாணவர்களின் ஆளுமையை விருத்தியாக்கும். ஆரம்பக்கல்வி மாணவர்களின் சார்பில் பங்களிப்புச் செய்யும் வகுப்பறையின் சமூக மனவெழுச்சிச் சூழ்நிலையானது ஆசிரியரின் ஆளுமையுடன் பெருமளவு பெற்றார்களின் வழிகாட்டலுடன் தங்கியுள்ளது. மாணவர்களின் நடத்தைப் பண்புகள் செய்யக் கூடியவை செய்ய முடியாதவை விருப்பு வெறுப்புகள் மனப்பாங்குகள் இடைத் தொடர்புகள் போன்ற அனைத்தும் ஆளுமையைச் சேர்ந்த அம்சங்களாகும். இவ் ஆளுமையானது புத்தாக்க தேர்ச்சி விருத்திகளோடு வளர்ச்சியடையக் கூடிய ஒன்றாகும்.

ஆரம்பக்கல்வி மாணவர்களின் புத்தாக்கத் தேர்ச்சிகள் அவ்வாறு ஆளுமைப் பண்புகளில் தாங்கங்களை ஏற்படுத்துகின்றது. அதிக கவனம் - கவனக்குறைவு, ஆர்வம் - ஆர்வமின்மை, ஒத்துழைத்தல் ஒத்துழையாமை, சுயாதீனமாக இருத்தல் சார்ந்திருத்தல், இணக்கம் - எதிர்ப்பு, பொறுப்புக்களை ஏற்றல் நழுவுதல், முன்வரல் - பின்நிற்றல், அடக்கம் - அடக்கமின்மை, மாணவர் களிடத்தே இவ்வாறான நடத் தைப் பண்புகளை இனம் கண்டு, அவர்களிடத்தே புத்தாக்கத் திறன்கள் மூலம் சிறப்பாக ஆளுமையை விருத்தியடையச் செய்ய பெற்றார்கள் முயற்சிக்க வேண்டும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவ்விடயம் தொடர்பாக ஆலோசனை – வழிகாட்டல் செயன்முறைகள் தொடர்ச்சியாக வழங்கப்படுகின்றன. ஆனால் எமது நாட்டில் இது தொடர்பான அக்கறை போதாமல் உள்ளதுடன் படித்த/படிக்காத பெற்றார்களிடையே இவ்விடயம் தொடர்பான வழிப்புணர்வே அற்றுக் காணப்படுகின்றது. இது ஆரம்பக் கல்வி மாணவர்களின் எதிர் கால வாழ்வைப் பாதிக்கச் செய்யும். எனவே பெற்றார்கள் பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளுடன் பொருத்தமான வழிகாட்டலைப் பெற பாட சாலை அதிபர் ஆசிரியர்களுடன் இடையறாத தொடர்பைப் பேண வேண்டி உள்ளதுடன்,

1. தமது பிள்ளைகளின் புத்தாக்கத்திறன்களை இயல்பாக வெளியிடசந்தர்ப்பங்களை வழங்குதல்.
2. விளையாட்டு பொழுதுபோக்கு விருப்பமான ஆக்கப் பொருட்களைச் செய்ய வழிகாட்டல்.
3. சனசமூகநிலையங்கள் பொது நிறுவனங்கள், சமூக நிறுவனங்களின் நிகழ்வுகளில் பங்குபற்ற வைத்தல்.
4. ஆலயத்தில் அதன் ஆன்மீக செயற்பாடுகளில் பிள்ளைகளை ஈடுபடுத்தல்.
5. சாரணர், லியோக் கழகங்கள் செஞ்சிலுவைச் சங்கத் தொண்டர் சேவைகள் , முதலுதவி சேவைகள் பெற்று பயிற்சிகளை பெற உதவுதல்.
6. புத்தாக்கப் போட்டிகள், நிகழ்வுகளில் பங்குபற்றவும், பயிற்சிகளைப் பெறவும் ஒத்துழைத்தல்.

என எமது பிள்ளைகளின் புத்தாக்கத் தேர்ச்சிகளை விருத்தியாக்கப் பல செயலாற்றுகைகளைச் செய்ய வேண்டியுள்ளது. பெற்றார்களுக்கு வழிகாட்டலை மேற்கொள்ள பாடசாலைகளில் இவ்விடயம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற் திட்டங்களை அதிபர் ஆசிரியர்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆரம்பக் கல்வி மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி விட்டால் தமது கடமை முடிந்துவிடும் என்ற மனப்பான்மைப் பெற்றோரிடமிருந்து நீங்க வேண்டியுமுள்ளது. இதற்கான புதிய செயற்திட்டங்களைப் பாடசாலையும் - சமூகத்தையும் ஆதாரமாக வைத்து மேற்கொள்ளுகின்ற போது ஆசிரியர்களுக்கு வேலைச்சுமை குறைவதுடன் மேலும் பல புதிய காரிய செயற்பாடுகள் மேற்கொள்ள வழிபிறக்கும் என்ற வகையிலேயே தற்போது பெற்றார்களுக்கான விழிப்புணர்வுகள் முதன்மை பெறுகின்றன.

**பா.தனபாலன்,**
**உபபீடாதிபதி,**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**

# எமது பாடசாலை அன்றும் இன்றும் ஒரு நோக்கு

யா/ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் பாடசாலையானது இன்று தனது 120 ஆவது அகவையை கொண்டாடும்வேளையில் இந்தப் பாடசாலையின் பழைய மாணவி என்ற வகையில் எனது மனதில் இடம்பிடித்த காட்சிகள் சில இம்மலரில் உலாவருகின்றன.

அத்திவாரம் சரியாகவும் பலமாகவும் இருந்தால் மட்டுமே கட்டடத்தின் மேற்பகுதி உறுதியாக இருக்கும். ஆரம்பக் கல்வியும் இந்த அத்திவாரம் போன்றதே. இந்த அத்திவாரத்தின் அடிக்கல் ஆசிரியர்கள் ஆவர். இவர்களின் வாண்மையே ஆரம்பக்கல்வியை உயர்த்தும் தூண்களாகும். இந்த வகையில் அன்று அ.மி.த.க. அன்னையின் ஆரம்பக்கல்வியை தொட்ட யான் அன்று ஆசிரியம் பேணிய ஆசிரியர்களை நினைவு கூருகையில் க.யோகர் அவர்கள் அதிபராக இருந்தார். ஆசிரியர்களாக திருமதி மு.செல்லம்மா, திருமதி யோ.நாகம்மா, திருமதி பொ. குலமணி, திருமதி த.சுகிர்தம், திரு.அருட்பிரகாசம், திருமதி ச.லில்லிமலர், த.கந்தசாமி ஆகியோர் பாடசாலையின் முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக நின்றுதவினார்கள். இவர்கள் சேவை ஒழுக்கம், அறிவு, திறன், மனப்பாங்கு, நுட்பப் பயிற்சிகள் கொண்டவர்களாக மிளிர்ந்ததுடன் இவர்களின் வழிநடத்தலினால் சிறந்த பழைய மாணவர் பரம்பரையை உருவாக்கினார்கள்.

இப்பாடசாலையில் அன்று மூன்று கட்டடங்கள் காணபெற்றதுடன் இன்றுபோல் சமயப் பெரியோர் குருபூசை, நவராத்திரி, சமய அறிவுப் போட்டிகள், தமிழ்த்தினப் போட்டி, ஆங்கிலதினப்போட்டி, விளையாட்டுப்போட்டி என்பன நடைபெற்றன. இவற்றுடன் கற்றல் செயற்பாடுகள், இணைப்பாடவிதான செயற்பாடுகள் யாவும் காணப்பட்டன. இங்கு ஆரம்பக்கல்வியைத் தொடர்ந்து மாணவர்கள் பலரும் புத்திஜீவிகளாக பல்வேறு தொழில்களிலும் அங்கத்துவம் வகிப்பதுடன் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராகவும் உள்ளனர். இந்து, கிறிஸ்தவம் என்ற இரு மதங்களும் ஒருசேர வளர்ச்சிபெறும் இப்பாடசாலையில் கிறிஸ்தவப் பெருநாளான ஒளிவிழா அன்றுபோல் இன்றும் சிறப்பாக கொண்டாடப் பெற்று வருகின்றது.

எனது ஆரம்பக்கல்வி காலமே இடம்பெயர்வு என்ற இன்னல்பிடியில் எம்பாடசாலை அன்னையும் சிக்கினாள். மீண்டும் தனது மிடுக்குடன் தற்போது ஐந்து ஆண்டுகளாக

வீறுடன் பீறுநடை போட்டிடு என்பதற்கமைய வளர்ச்சியடைந்து வருகின்றது. தனக்கேயுரிய மிகக்குறைந்த வளங்ளைப் பயன்படுத்தி கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டபோதிலும் ஏனைய பாடசாலைகளுடன் போட்டியிட்டு முதனிலையில் வெற்றி பெறுவது இன்றுள்ள அதிபர், ஆசிரியர், பெற்றோர்களின் விடாமுயற்சியி னாலேயாகும்.

மிகக்குறைந்த எண்ணிக்கையான மாணவர்களைக் கொண்டிருந்த போதிலும்இவ்வாண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வன், வி.பிரணவன், செல்வி இ.விதுஷா ஆகியோர் சித்தியடைந்தமையை மகிழ்வுடன் ஏற்ற யான் எனது சிந்தனையை 1989, 1991 களிலும் மீட்டிப் பார்க்கிறேன். எத்தனையோ இடர்பாடுகளின் மத்தியிலும் இடம்பெயர்ந்து இயங்கிய வேளையிலும் செல்வன் திருமாறன் பாலசிங்கம் (151), செல்வி சிவயாழினி பாலசிங்கம் (184) ஆகியோர் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

எனவே எங்கள் பாடசாலையானது அன்றுபோல் இன்றும் பல துறைகளிலும் முன்னணியில் காணப்படுகின்றது என்றால் மிகையாகாது. இத்தகைய உத்வேகத்துடன் வளர்ச்சிபெற்று ஓர்தரம் உயர்ந்த ஆரம்பப் பாடசாலையாக மிளிரவேண்டும் என்பதே எனது பேராசையாகும்.

**த.சுஜீதா**
**(பழைய மாணவி)**

## மலர் வெளியீட்டிற்கு ஆதரவளித்தோர்

**துர்க்கையம்மன் தேவஸ்தானம் (தெல்லிப்பழை)**
**தபோதரன் படமாளிகை (சுன்னாகம்)**
**தம்பிப்பிள்ளை அமிர்தலிங்கம் (குரும்பசிட்டி)**

# சிறுவர் உள்ளத்தில் அழகியற் கல்வியும் ஆக்கத்திறனும்

**சேர் இது நான் கீறின் படம் சேர் பாட்டுப் பாடுவமே...**
**நீங்கள் பாடுங்கோ நாங்கள் அபிநயம் செய்யிறம்**
**இல்லை என்னால் பாடமட்டும்தான் முடியும்**

ஆம். இவ் உணர்வுகளைத்தான் சிறுவர்கள் உள்ளத்திலிருந்து நாம் கேட்கின்ற வாசகங்கள்.

மனிதனுடைய ஆளுமையையும் திறனையும் வெளிக்கொணர்வது அழகியற்கலையும் ஆக்கச் செயற்பாடுகளும் என்றால் மிகையாகாது. இதைப் பல கல்வி உளவியலாளர் களும் மேலைநாட்டு ஆங்கிலக் கவிஞர்களும் தமது உணர்வுகளால் வெளிக் கொணர்ந்தும் உள்ளனர். அழகியல் உணர்வுப் பண்பை வெளிப்படுத்தும் தான் சார்ந்த சமூகத்தில் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது வெள்ளிடைமலை. இக் கருத்துக்கள் சிறுவர்களது வஞ்சமில்லா உள்ளத்திலிருந்து அவ்வப்போது வெளிக்கொணரப்படுவதை நாம் பல சந்தர்ப்பங்களில் அவதானிக்கின்றோம். கண்ணால், காதால் யாதேனுமொரு பொருளை அல்லது இசையை அல்லது அசைவை நாம் உணரும்போது எமது உடல் நரம்புகளை வருடிச் செல்லும் சந்தர்ப்பங்களை அவதானிக்கின்றோம். இந்நிலையில்தான் எமக்கு அழகியல் ஆக்க உணர்வுகள் எம்முள் நரம்புகளை பதம் பார்க்கின்றது.

வளர்ந்த பெரியவர்கள் அனுபவிக்கும் இவ் உணர்வுகளை விட சிறுவர்கள் காட்டும் உணர்வுகள் மிகைத்தன்மையானதாக இருக்கும். இதை நாம் (ஆசிரியர்கள்) வகுப்பறைச் செயற்பாடுகளில் காண்கின்றோம். சிறுவர்கள் தாம் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடும்போது யாதேனுமொரு பக்குவ நிலைக்கேற்பவே தமது செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். அந்நிலையில் அவர்களது செயற்பாடுகளைக்கண்டு நாம் சந்தோசமடைகின்ற சந்தர்ப்பங்கள் பல உள்ளன.

அவ்வாறன சந்தர்ப்பங்களில் அவர்களின் செயற்பாடுகளை இன்னும் மேம்படச் செய்தல், அவ்வுணர்விற்கு அவர்களை இட்டுச்செல்லுதல் எமது கடமை. ஏனெனில் அந்நிலை அவனது உள்ளத்தில் பெரிதும் ஒரு மாற்றத்தினை நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

மேலும் தொட்டு உணர்ந்து செய்யப்படுகின்ற ஆக்கங்களும் நரம்பு வழிகளால் உணரப்படுகின்ற அழகியற் செயற்பாடுகளும் சிறுவர்களின் கல்விக்கு அடிநாதமாக விளங்குகின்றது. இதன்மூலம் சிந்தனை, செயல், மன ஒருமைப்பாடு என்பன அவர்களது மனதில் பதிகின்றது. எவ்வாறு எனில் ஏனையோரது பரிந்துரையோ புத்திமதி கூறலோ இங்கு இல்லை. தன்னாலான ஒரு பொருளை ஆக்கிமுடித்தேன். தான் இரசித்த ஒன்றைக் கேட்டேன் என்ற ஆத்ம திருப்தி சிறுவர்களின் உள்ளத்தில் ஏற்படுகின்றது. அதையே அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

எனவே, சிறுவர் உள்ளத்தில் நல்ல சிந்தனை வளர்ந்திட அவர்களின் அழகியல், ஆக்கச் செயற்பாடுகள் பெரிதும் உதவுகின்றன என்பது உண்மை.

**பிள்ளைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வெளிக்காட்டுகின்ற மானசீகமான பண்புகள் அவர்தம் ஆளுமையை வெளிக்கொணர்கின்றது**

**திரு. ப. அருமைநாதன்**
**(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)**
**யா/ஏழாலை வடக்கு அ. மி. த. க. பாடசாலை**

# பாடசாலையின் பெருமை

ஆங்கிலேய ஆட்சியின் காலத்தில் மக்கள் தாம் விரும்பும் எம் மதத்தையும் அனுட்டிக்கலாம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட சட்டத்தை வைத்து 1816 காலப்பகுதியில் பொதுப்பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதனால் திண்ணைப் பாடசாலைகள் மூலம் கல்விக்கு உயிரூட்டிக் கொண்டிருந்த பெரியார்களை அமெரிக்க மிசனறிமாரின் உதவிபெற்று தம் கல்விப் பயிரை மேநிலைப்படுத்தும் ஆசையை ஊட்டியது இத்தகைய நோக்கில் உருப்பெற்றதே ஏழாலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை ஆகும். இதன் ஸ்தாபகராக விளங்கிய ஆசிரியரே சீனிவாசகம் என்ற பெயர்கொண்ட சீனிச் சட்டம்பியார் ஆவார்.

வீடு வீடாகச்சென்று மாணவர்களைக் கூட்டி வந்து கற்பித்தல் நடவடிக்கையை மேற்கொண்டார். இந்த ஊக்கமும் ஆக்கமும் வளர்பிறை என வளர்ந்து ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை ஆரம்பக்கல்விக்கு ஏழாலையில் முன்னோடிப் பாடசாலையாக மிளிர்ந்தது. சிறுகச் சிறுக மாணவர் வளமும் பெருகியது. படித்த ஊர் மக்கள் பலர் கற்பித்தலில் ஈடுபட்டனர். கற்பித்தல் கடமையில் கண்ணும் கருத்துமாக மிளிர்ந்த ஆசிரியர்கள் பலர் மிக அண்மைக் காலம் வரை உயிர்வாழ்ந்துள்ளனர். 1938 இன் பின்னர் இப்பாடசாலையில் கற்று இன்று துணைவேந்தராக பேர் புகழ்பெற்ற பேராசிரியர் குணரத்தினம் இப் பாடசாலையின் பழைய மாணவர் என்பதும் இப்பாடசாலையின் அக்காலப் பெருமையைக் காட்டுவதாகும்.

இவ்விதமாக 1991 வரையான காலப் பகுதியில் நல்லதிபர் பலரையும் நல்லாசிரியர் பலரையும் தன்னகத்தேகொண்டு ஆரம்பக்கல்வியைச் சிறந்த முறையில் மாணவர்க்கு வழங்கிய பெருமை இப்பாடசாலைக்கு உண்டு. ஆண்டு 8 வரை வகுப்புக்கள் நடைபெற்ற இப் பாடசாலையில் ஆண்டு தோறும் தவறாது ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற பல மாணவர்கள் பிரபல பாடசாலைகளில் முன்னணி மாணவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். 1988 இல் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் இப்பாடசாலை மாணவி ஒருவர் 184 புள்ளிகள் பெற்று மாவட்ட ரீதியில் 4 ஆம் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இத்துடன் சகல இணைப்பாடச் செயற்பாடுகளிலும் வட்டாரப் போட்டி, மாவட்டமாகாணப் போட்டிகளிலும் முன்னிடம் பெற்ற மாணவர் பலர் இருந்தனர். இங்கு படித்த பல மாணவர்கள் பட்டதாரிகளாக எம் கிராமத்தை அலங்கரிக்கிறார்கள். இத்தகைய முன்னேற்றங்களுக்கு முன்னின்று உழைத்த அதிபர், ஆசிரியர்களின் ஆக்கபூர்வமான செயற்பாடுகளை அறக்கடவுள் வாழ்த்திய படியால்தான் 1991-

2000 ஆம் ஆண்டு வரை சேதமடைந்த நிலையிலிருந்த கட்டடம் இன்று புத்தெழில் பெற்றது. 1991 முதல் 1995 வரை இணுவிலிலும் ஏழாலை இசிதோரிலும் இணைந்து இயங்கி மீண்டும் இங்கு கல்விச் சுடர் தூண்டல் பெற்றது என்று கூறின் மிகையாகாது. 2003ஆம் ஆண்டு நடமாடும் கல்விச் சேவைக் குழுவின் தலைவர் அக்காலக் கல்விக் கோட்டப் பணிப்பாளராக மிளிர்ந்த திரு.அ.தற்பரானந்தம், திருமதி றெஜினா இருதயநாதன் அம்மையார் ஆகியோர்களிடம் இப்பாடசாலை நிலையை ஏழாலை மகாவித்தியாலயத்தில் வைத்துக்கூறிய வரலாற்று உண்மைகளும் வேண்டுகோள் விண்ணப்பமுமே இப்பாடசாலை இன்று புதுப்பொலிவு பெற்று மிளிர்கின்றது. மிளிர்வு மேன்மை கொளவென வலிகாமம் கல்வி வலயத்தார் துடிப்பும் துரித செயற்பாடும் மற்றய அதிபர்களுக்குரிய தற்கால வாண்மைக் குறிப்பான தலமைத்துவப் பண்பையும் கொண்ட அதிபராம், திரு.த.வாமதேவன் என்ற பெருமகனையும் அவருடன் இணைந்து கல்விச்சுடர் ஏற்றும் ஆசிரியர் குழுவையும் தந்துதவியுள்ளார். இவர் தமக்கு ஆக்கம், ஊக்கம் நல்கும் பெற்றோர், நலன்விரும்பிகளையும் பாடசாலை மாதா பெற்றுள்ளாள். இதனால் மீண்டும் தொடங்கியது. மிடுக்கென பாடசாலை சகல செயற்பாடுகளிலும் வெற்றிப் பாதையில் வீறுநடைபோடுகிறது. பரிசில், சான்றிதழ், வெள்ளிப் பதக்கம் பெற்று விளங்கும் இக்கிராம மாணவச் செல்வங்கள் மேலும் வளர பாடசாலைச் சமூகம் ஆற்றும் பணி அறக்கொடைப் பணியாகும் என அனைவரும் வாழ்த்துவோம். 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அமைக்கப்பட்ட இப்பாடசாலையின் ஆரம்பக்கல்வி கற்றவர்களுள் கிங்ஸ்பெரி தாமோதரனாரின் (சி.வை.தா) அன்னை பெரியையும் அவர் உறவினர் சுவிச் சயில்ட் தங்கம் என்பவரையும் புகழ்பூத்த ஆங்கிலம் கற்று முன்னேறிய மாணவர்களாகக் குறிப்பிடலாம்.

பேராசிரியர் குணரத்தினம் அவர்கள் சமகாலத்தில் கந்தையா சுகிர்தரத்தினம் என்பவரும் பழைய மாணவர். இவர் பின்னாளில் அரச பொறியியலாளராக மிளிர்ந்தவர்.

**திரு. சி. கந்தசாமி**

## சமூகத்தில் சினிமாவின் தாக்கம்

ஓர் அலசல்

மக்கள் வாழ்வோடு பின்னிப்பிணைந்து உலகை தன்னகத்தே ஈர்க்கின்ற ஒரு ஜனரஞ்சக ஊடகமாக சினிமா என்னும் ஊடகம் திகழ்கின்றது. சிறியோர் பெரியோர் என்ற வேறுபாடின்றி அனைத்து நிலையினரின் மனங்களையும் ஆக்கிரமித்து தன் செல்வாக்கை நிலைநாட்டி வருகின்றமை வெள்ளிடை மலை.ஆசிரியர்கள் மாணவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல பரந்துபட்ட உலகின் பண்பாட்டு விழுமியங் களை திரைக்குள் இருந்து கண்களுக்கு விருந்தாக்கி நினைவில் தாங்கி வைத்து ஜீரணிக்கச் செய்து சுவைஇன்பம் பெறும் கலையாக வளரும் இது கற்றல் உலகில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது எனலாம். ஆயிரமாயிரம் தத்துவங்கள் பல தேசங்கள் பல்லினத்தன்மை என்பவற்றை உள்ளடக்கி உள்ளத்தின் உணர்வுகளை தட்டி எழுப்பி சிந்தனையை தூண்டும் ஔடதமாக இது காணப்படுகிறது அரசியல் கலை கலாச்சாரம் அறிவியல் தொழில்நுட்பம் என்னும் கலவைகளை ஊடகத்தூடே உட்செலுத்தி சமூகத்தை வந்தடையும் உன்னத படைப்பாற்றலாக துலங்குகின்றது

ஒரு கருத்தை மக்கள் மத்தியில் பதிய வைப்பதற்கு இவ் ஊடகம் சிறப்புப் பெற்றதாக திகழ்வதால் நன்மையோடு தீமைகளும் கலந்துவிடுகின்றது. மூன்று தசாப்தங்களுக்கு முற்பட்ட திரைப்படங்கள் மக்கள் மனங்களில் பல்வேறு கருத்துக் களையும் பாடல்களையும் உள்ளத்தில் தாங்கி தம் இன்ப துன்ப நிகழ்வு களை மீட்டிப்பார்க்கும் உன்னத உணர்வுகளை இவ் ஊடகம் தந்ததை பலரும் சொல்வதும் உணரத்தக்கதுமாகும். பல்வேறுவிதமான தத்துவ உணர்வுகளோடு இதிகாசங்கள் புராணங்கள் வரலாற்றுநிகழ்வுகளை தத்துருபமாக வெளிப்படுத்துவதில் மிகவும் செல்வாக்குப் பெறுகின்றது. கடவுளுக்கு உருவம் கொடுத்து நிஜத்தில் காட்டியதும் இந்த சினிமாதான்

**'இந்திரன் வந்ததும் சந்திரன் வந்ததும் இந்தச் சினிமாதான்**
**நம்ம எம்ஜியார் வந்ததும் நம்பியார் வந்ததும் இந்தச் சினிமாதான்**
**காதல் வந்ததும் இங்கேதான்**
**கலை வளர்ந்ததும் இங்கேதான்'**

எனத் தொடங்கும் ஓர் பாடலில் சினிமாவின் பரிமாணம் காட்டப்படுகின்றது கட வுள் முதல் திருவள்ளுவர் ஔவையார் பாரதி காந்தி என அடுக்காகத் தொடரும் வரலாற்று மனிதர்களை படம் பிடித்து சிந்தையில் தங்க வைத்ததும் இவ்ஊடகமாகும் கட்டப்பொம்மனை நாம் நேரில் பாத்திருக்க முடியாது ஆனால் சிவாஜியின் நடிப்புத் திறமையைப்பார்த்து அவனின் வீரம் செறிந்த வரலாறு நம் நெஞ்சங்களில் நிழலாகும்

நீதி மன்றங்கள் முதல் சமூகத்தின் பல்வேறு நிலைகளை சமூகத்திற்குகாட்டி அதை அறியச்செய்யும் மாபெரும் சக்தியாக இது உருப்பெற்றிருக்கிறது

இத்தகைய சக்திவாய்ந்த ஊடகம் மனித அழிவிற்கும் வாழ்வின் பின்னடைவிற்கும் உந்து சக்தியாக இருக்கின்றது என்னும் கருத்து மறுக்க முடியாத ஓர் உண்மையாகும் தற்காலப் படங்களும் சின்னத்திரைகளும் பல்வேறு நல்ல செய்திகளை சொல்வதிலும் பார்க்க எதிர்மறையான விடயங்கள் பல சமூகத்தை சென்றடைந்து நெறி பிறழ்விற்கும் உள்ளாகியுள்ளன. பாடல்கள் பல சிலேடைத்தன்மை வாய்ந்ததாக வும் வெளிப்படையாகவும் பண்பாட்டை கொச்சை படுத்தி நாகரீகம் என்னும் போர்வையில் கலாச்சார சீரழிவுகளை ஏற்படுத்துவதற்கு வழிவகுக்கின்றது. காட்சி அமைப்புகளும் சொல்லும் செய்தியும் கிலேச உணர்வுகளைத்தூண்டுவதாக அமைகின்றது. அதுவும் விடலை பருவத்தில் உள்ள மாணவர் சமூகம் அதன்பால் தூண்டப்பெற்று தப்பிதமாக செய்தியை உள்வாங்குகின்ற நிலையில் அவர்களது கற்றல் தூண்டல் பின்னடைகின்றது. நீண்ட நேரப் பொழுதுபோக்கு அம்சமாக சினிமா இடம்பிடித்துள்ளது. இதனால் உடல் சோர்வடைந்து ஆரோக்கியம் குன்றுகின்றது. வாசிப்புப் பழக்கம் பின்னடைகின்ற சூழலுக்கு உள்ளாகின்றது. அது மட்டுமல்லாது பாடல்களின் பால் ஈர்க்கப்பட்டு கிண்டல் கேலியுடன் படித்து பிறரைப் புண்படுத்தும்நிலை காணப்படுகின்றது. இன்று எத் திரைப்படங்களையும் சுதந்திரமாகப்பார்க்கும்நிலை தோன்றியுள்ளது. நல்ல செய்தியைச் சொல்கின்ற திரைப்படங்களில் கூட பாடல் காட்சிகள் நகைச்சுவைகள் என்பன குடும்பமாக அமர்ந்து அதைப் பார்த்து மகிழும் நிலையை மாற்றியுள்ளது. முப்பது வருடங்களுக்கு 'முன்னர் ஒரு திரைப்படம் வெளிவந்தால் அதைப் பெரியயோர் பார்த்து விட்டு பின் பெற்றோரும் பார்த்து அது குடும்பமாக அமர்ந்து பார்க்கலாமா என தீர்மானித்து பின் பிள்ளைகளுடன் சேர்ந்து பார்க்கும் நிலை இருந்தது. ஆனால் தற்காலத்தில் பிள்ளைகளிடமே படத்தின் தன்மையை பெற்றோர் கேட்டு அறியும் நிலை காணப் படுகிறது' என ஒருவர் ஆதங்கப்படுகிறார்.

மேலும் இன்றைய சிறுவர்களின் சிகை அலங்காரங்களும் திரைப்படத்தில் வரும் கதாநாயகனைத் தழுவியே மேற்கொள்ளப்படுகிறது. தீனா கட் (cut) சத்தியா (cut) என அமைவதைக் காணலாம். இதற்கு பெற்றோர்களும் தாராள மனதைக் காட்டுகின்றனர் என்பது வருந்தத்தக்கது. மாணவர்கள் தமக்கிடையே வைக்கும் பட்டங்களும் கிண்டல்களும் திரைப்படங்களையும் சின்னத்திரைகளையும் தழுவியதாக அமைகின்றன.

உ+ம் படையப்பா கில்லி, தலை. மேலும் குத்துச்சண்டை வீரர்களின் பெயர்களையும் வைத்து தமக்குள் வன்முறை உணர்வுகளின் பால் தூண்டப்படு கின்றனர். குழு மோதல்கள் சினிமா பாணியில் பின்பற்றப்படுகின்றன. தடயம் இல்லாமல் குற்றங்கள் செய்வது எப்படி? என்னும் வினாக்களுக்கு விடைகளாக சில சினிமாக்கள் அமைகின்றன. உரையாடல்களில்கூட இவை செல்வாக்குச்செலுத்துகின்றன ஓர் ஆசிரியர் பாடசாலைக்கு வராது ஊர்சுற்றித்திரிந்த மாணவர்களை கண்டுவிடுகின்றார். மீண்டும் அவன் பாடசாலைக்கு வருகிறான், ஆசிரியர் அவர் வீதியில் கண்ட விடையத்தை வினாவுகிறார். அதற்கு அந்த மாணவன் 'நான் அவனில்லை சேர்' என்று பதிலளிக்கிறான். மேலும் என்வழி தனி வழி எனக்கூறும் நிலை காணப்படுகின்றது.

இத்தகைய பாதக நிலை இருந்தபோதும் ஆங்காங்கே நல்லகதை அம்சங்களுடன் கூடிய படங்கள் வெளிவந்துகொண்டுள்ளது என்பதை மறுக்கமுடியாது அது மட்டுமல்லாது தணிக்கைகளை மேற்கொண்டு நல்ல கருத்துக்கள் சமூகத்தை வந்தடைவதை அரசு ஊக்குவிக்கவேண்டும். வருமான நோக்கத்தோடு மட்டும் நின்றுவிடாது சமூக விழிப்புணர்வை ஆரோக்கியமான சூழலை தம் படைப்புகள் ஊடாக கொண்டுவர தயாரிப்பாளர்கள் முன்வரவேண்டும் பலரது நெறிபிறழ்ந்த வாழ்வை திருத்தி புத்துயிர் பெறவும் சில திரைப்படங்கள் வழிகாட்டியுள்ளன. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கவியரசு கண்ணதாசன் வைரமுத்து வாலி போன்றவர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்கள் கருத்துக்களில் சுவை நயம் பெறவைத்ததும் இத்திரையுலகே வரலாற்று நிகழ்வுகளை பசுமரத்தாணிபோல் பதியவைத்ததும் இந்த அரங்கே ஆகும் தீமையை அகற்றி நல்லதை பெறுவதற்கு பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோர்கள் வளர்ந்து வரும் மாணவர் சமுதாயத்துக்கு நல்வழி காட்டிகளாக அமைகின்றபோது ஆரோக்கியமானசூழல் தோன்றும் இந்நிலை ஏற்படும்போது திரைப்படத்தின் நற்பயன்கள் இச்சமூகத்தை வாழ்விக்கும் என்பது வெளிப்படை.

'பார்க்கத் தெரிந்தால் பாதை தெரியும்.
பார்த்து நடந்தால் பயணம் தொடரும்.
பயணம் தொடர்ந்தால் கதவு திறக்கும்.
கதவு திறந்தால் காட்சி திறக்கும்.
காட்சி திறந்தால் கவலை தீரும்.
கவலை தீர்ந்தால் வாழலாம்' **(கவிஞர் கண்ணதாசன்)**

என்ற சிந்தனை தோன்றும்போது சினிமா சமூகத்தைப் புலப்படுத்தும் காலக் கண்ணாடியாகத் திகழும்.

**திரு.செ.யூட்ரவிநாத், ஆசிரியர்.**

## மலர்க் குழு



## ஆசிரியர் குழாம்



# இன்றைய உலகில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள்

இன்றைய உலகில் கல்வி அறிவு ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாததாகும். சென்ற நூற்றாண்டைப் போலல்லாமல் இன்றைய நூற்றாண்டில் ஒவ்வொரு மனிதனும் சவால்களையும் பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவேண்டியவனாக காணப்படுகின்றான். இப்புதிய நூற்றாண்டில் சகல துறைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் கல்வித்துறையிலும் ஏற்படத் தவறவில்லை. கல்வியினூடாக மனிதனை முழு மனிதனாக மாற்றவேண்டிய பொறுப்பு ஆசிரியருடையதாகும். இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் வீறுநடை போடும் கல்விப்புலத்தின் சவால்களை எதிர்நோக்க வேண்டியவராகவும் எதிர்நீச்சல் போட்டு மீளவேண்டியவராகவும் திகழ்பவர்கள் ஆசிரியர்களே.

ஆசிரியர் சேவையானது இன்று பல சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்நோக்க வேண்டிய ஒரு துறையாக மாறிவிட்டது. இதற்கான காரணம் என்னவென நோக்குகின்றபோது காலத்தின் தேவைக்கு ஏற்ப ஆசிரியர் சேவையானது மெருகூட்டப்படாமையும் அவர்கள் தொழில்சார் ரீதியில் தம்மை வளர்த்துக்கொள்வதில் ஆர்வமின்றி இருத்தலுமாகும். எமது நாட்டைப் பொறுத்தவரை இன்று அதிக சவால்களை எதிர்கொள்ளும் துறையாக ஆசிரியத்துறை அமைந்துள்ளது.

இன்றைய சூழலில் எமது நாடானது கொடிய யுத்தத்தின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றது. இதனால் மோதல்களும் பூசல்களும் பிணக்குகளும் கோரத்தாண்டவமாடுகின்றன. இதனால் இக்காலத்தில் வாழும் மாணவச் சமுதாயத்தின் கல்வி அவர்களை அறியாமலேயே பின்தள்ளப்பட்டுச் செல்கின்றது. இவற்றை நன்குணர்ந்த ஆசிரியர்கள் கால மாறுதல்களிற்கேற்ப தம்மை தயார்ப்படுத்தி சேவையாற்ற வேண்டிய கடப்பாடுடையவர்களாக காணப்படுகின்றனர்.

ஒரு சமுதாயத்தினால் ஒப்படைக்கப்படுகின்ற பிள்ளையை முழு மனிதனாக சமுதாயத்திற்கு பொருத்தப்பாடுடையவனாக ஆக்கி அனுப்புவதே ஓர் ஆசிரியரின் தலையாய கடமையாகும். இவ்வாறு செயற்பட வேண்டிய ஆசிரியன் முதலில் தான் ஒரு முழு மனிதனாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஒளியுள்ள ஒரு தீபத்தினாலேயே இன்னொரு தீபத்திற்கு ஒளியேற்றமுடியும். இத்தகைய செயற்பாட்டிற்கு பல பிரச்சினைகளை எதிர்நோக்கநேரிடினும் தனது குறிக்கோளிலிருந்து விலகாதிருப்பது ஓர் ஆசிரியரது முக்கிய கடப்பாடாகும்.

ஆசிரியர்கள் தாம் எதிர்கொள்ளும் சவால்களில் இருந்து விடுபடுவதற்கான

முதற்படியாக அமைவது அவர்கள் தமது தொழில்வாண்மையை விருத்திசெய்து கொள்வதாகும். இன்று ஆசிரியர் வாண்மையை விருத்தி செய்வதில் பல்வேறு நுட்பமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய நுட்ப முறைகளை அறிந்துகொள்ளவேண்டியது ஆசிரியரின் முக்கிய கடப்பாடாகும்.

இருபத்தோராம் நூற்றாண்டில் கொண்டு வரப்பட்ட புதிய கலைத்திட்டத்தினை பூரணமாக விளங்கிக்கொள்ளமுடியாது, பாடத்திட்டம் பாடக் குறிப்பு என்பவற்றை சுயமாக அமைத்துக்கொள்ளாத கற்பித்தற்சாதனங்களை தயார்செய்துகொள்ள முடியாமல் தனது சேவையை ஆற்ற முற்படுகின்ற ஆசிரியர் ஒருவர் எதிர்பார்த்த இலக்கினை அடையமுடியாது. இவை மட்டுமின்றி இந்நூற்றாண்டில் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் கணனி பற்றிய பூரண அறிவைப் பெற்றிருப்பது மிக அவசியமாகும். இல்லையெனில் கணனியைப் பயன்படுத்தி அதிக விடயங்களை பெற்றுக்கொள்ள முடியும் என்ற நிலைக்கு மாணவர்கள் தள்ளப்படுவர். இதனால் ஆசிரியர் சேவை கேள்விக்குறியாக மாற்றமடைந்து விடுவது தவிர்க்கமுடியாததாகிவிடும்.

பல்வேறு சிரமங்களின் மத்தியில் ஆசிரியரை நம்பி தம்பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பிவிட்டு பல எதிர்பார்ப்புக்களுடன் காத்திருக்கும் பெற்றோர்களுக்கு வகைகூற வேண்டியவர்களாக ஆசிரியர்கள் காணப்படுகின்றனர். எனவே, இன்றைய உலகில் தம்மிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவர்களை சமுதாயத்திற்கு ஏற்ற நற்பிரசையாக சமுதாயத்துக்கு பயன்பாடுடையவனாக ஆக்கவேண்டிய சவாலை எதிர்கொள்ள வேண்டியவராக ஆசிரியர் காணப்படுகின்றார்.

இவை தவிர தரம் 1இல் இருந்து மாணவர்களின் அனைத்து செயற்பாடுகள், முன்னேற்றங்கள் தொடர்பான பதிவேட்டினை பேணுவதுடன் எந்த நேரத்திலும் பெற்றோர் கண்காணிப்புக்கு உட்படுவதற்கும் தயாராக வைத்திருத்தல் வேண்டும். இதனால் பெற்றோர் ஆசிரியர் தொடர்பு வலுவடைவதுடன் நேர்மையான திறமையான பக்கச்சார்பற்ற கணிப்பிட்டாளனாக தன்னை கட்டுப்பாடுடையவராக மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலைக்கு ஆசிரியர் தள்ளப்படுகின்றார்.

இன்றைய கல்விமுறையை நோக்குகின்றபோது ஆசிரியர் மையக் கல்வியானது முற்றாக மாற்றமடைந்து மாணவர் மையக கல்வியே மேலோங்கி நிற்கின்றது. இதனால் ஆசிரியர்கள் தமது செயற்பாடுகளைக் குறைத்து மாணவர்களின் செயற்பாடுகளுக்கும் சுய சிந்தனைக்கும் கருத்து வெளிப்பாட்டிற்கும் இடமளிப்பதாய் அமைய வேண்டும். இந்நிலமையானது மாணவர்களின் புதிய கண்டுபிடிப்புகளுக்கும் ஆராய்வுகளுக்கும் இடமளிப்பதாக அமைகின்றது. இவ்வேளையில் மாணவர்களிற்கு ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களை ஊக்குவிக்கும் திறன்கொண்டவராக செயற்பட

ஆசிரியர் தன்னை தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டியது மிகமிக அவசியமாகும்.

இன்றைய ஆசிரியர்களது ஆசிரியர்சேவையானது அவர்களது செயற்படும் திறன் நடத்தை பாடத்திட்டம், பாடக்குறிப்பு, கற்பித்தல் உபகரணம் ஆகிய சகலதுறை களையும் மேற்பார்வை செய்து தமது கடமையை சரிவரச் செய்கிறார்களா என அறிந்து அதற்கேற்ற வகையில் புள்ளிகள் வழங்கப்படும் திட்டம் நடை முறைப் படுத்தப்படுகின்றது. இதனால் ஆசிரியர் தனது நலனையும் மேம்படுத்திக்கொள்ள வேண்டியவராக காணப்படுகின்றார். இந்த வகையில் நோக்குகின்றபோது ஆசிரியர் தனது நலன், மாணவர் நலன், சமூக நலன், நாட்டு நலன் பேணுபவராக மாறவேண்டிய கடப்பாடு உடையவராக காணப்படுகின்றார்.

தொகுத்து நோக்குமிடத்து இன்றைய சமூக கலாசார பொருளாதாரத் தேவைகளை ஒட்டி சமகாலத்தின் நவீன சிந்தனைகளிற்கு முகம்கொடுத்து சேவையாற்றக் கூடியதாக ஆசிரியர் தன்னை தயார்படுத்திக்கொள்வதோடு இவற்றை சவாலாக எடுத்து கல்விச் சமூகத்தின் பல்வகை தடைக்கற்களை படிக்கற்களாக மாற்றி இன்றைய சமூகம் எதிர்பார்க்கும் மாணவரை உருவாக்குவதே தமது கொள்கையாகக் கொண்டு பாடுபடவேண்டும்.

ஆகவே நேரிய எண்ணம், சீரிய சிந்தனை, தூரநோக்கு, போதிய அறிவு, போதிய வளம், மனவலிமை, கடமை நோக்கு, மனித நேயம் ஆகிய பண்புகளைக் கொண்ட ஆசிரியர்களால் மட்டுமே இன்றைய உலகின் சவால்களிற்கு முகம்கொடுக்க முடியும். எனவே, மேற்கூறிய பண்புகளை தம்மில் வளர்த்துக் கொண்டு சவால்களை வெற்றிகொண்டு கல்வி உலகிற்கு ஒளிகாட்டுவது ஆசிரியர்களது முக்கிய கடமையாகும். இதுவே புனிதமானதும் உண்மையானதுமான ஆசிரியத்துவமாகும்.

வளர்க ஆசிரியர் சேவை!

ஓங்குக அவர் புகழ்!

**திருமதி கௌசல்யா சிவசுதன்,**

**ஆசிரியர்.**

# ஆன்மிக வள்ளல் ஆத்மஜோதி நா.முத்தையா

ஈழநாட்டின் வடபால் அமைந்திருப்பது யாழ்ப்பாணம். செந்தமிழர் வாழும் பிரதேசம் இது. போத்துக்கேயர் இங்கு காலடி வைக்க முன்னர் இங்கு வாழ்ந்தவர்கள் அனைவரும் சைவசமயத்தவர்களாகவே இருந்தனர். தமிழரும், சைவரும் ஒன்றென்றி ருந்த காலம்.இவ்விரண்டும் ஒன்றிக் கலந்த வாழ்க்கைப் பண்புகள் செறிந்த பொன்னொளி பரந்த காலம் சைவத்தமிழ் நெறி பிறழாச்சான்றோர்கள், பேரறிஞர்கள் பலர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து வந்தனர். இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்படியான சைவ, தமிழ்ப் பண்பாடுகள் நிரம்பப் பெற்றபாரம்பரிய ஊர்கள் பலவற்றைக் கொண்டது யாழ்ப்பாணம். அவற்றிலே ஒன்று ஏழாலை. வலிகாமம் தெற்கில் அடங்கியது. இது வடக்கே கட்டுவனையும் கிழக்கே புன்னாலைக் கட்டுவன், குப்பிளானையும், தெற்கே ஊரெழு, சுன்னாகத்தையும், மேற்கே சுன்னாகம், மல்லாகம் ஆகிய கிராமங்களையும் எல்லைகளாகக் கொண்டது.

இவ்வூரில் திருநெறித்தமிழ்வல்லோர், சிவகாமங்கள், வேத உபநிடதங்கள் விளங்கியோர், இலக்கண இலக்கியங்களைப் பழுதறக்கற்ற பெரியவர்கள், பல தொழில் வித்தகர்கள், உழுதூண் பெருக்கும் வளம் மிக்க கோழைபடா மேழிச் செல்வர் பெருமளவில் வாழ்பதியும் இதுவாகும். இத்தோடு உலகம் உவாக்கும் நல்லறிஞர்களையும், கலாவித்தகர்களையும், அறிவியலாளர்களையும், கணிதமேதை களையும், உருவாக்கிக்கொடுக்கும் நல்லாசிரியர்களையும், பன்மொழிப்புலவர்களையும், பண்டிதர்களையும், வித்துவான்களையும், ஞானவான்களையும் அன்றும் இன்றும் கொண்ட ஊர் இது. இவ்வாறு பல் துறைப்பட்டவர்களையும் கொண்டுவிழங்கும் இவ்வூரில் முதன்மையாகப் பேசப்படுபவர்கள் சைவச்சான்றோர்கள். இச்சான்றோர் வரிசையிலே சி.வை.தாமோதரம்பிள்ளை, சடைவரதசுவாமிகள், பொன்னையா அரு ளானந்த சிவம், கார்த்திகேயர், ஆறுமுகம், சமயப் பெரியார் ஞானப்பிரகாசம், ஆத்மஜோதி நா. முத்தையா, பண்டிதர் மு.கந்தையா போன்றோரைக் குறிப்பிடலாம். இப்பெரியார் வரிசையில், ஆத்மயோதி நா.முத்தையா அவர்களின் சமய, சமூகப் பணிகள் நோக்குமிடத்தில்,

சைவ ஜோதியாக 25.05.1918ம் ஆண்டு முத்தையா திரு அவதாரம் செய்தார். ''வளரும் பயிரை முளையில் தெரியும்'' என்பதுபோல இளமைப்பருவம் முதலிலே சமய உணர்வுடன், ஆன்மீக அறிவுரைகளையும் பெற்றார்.

''ஊருக்குழைத்திடல் யோகம் நலம் ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்.'' என்ற பாரதியின் கூற்றிற்கு அமைவாக இளமையிலேயே சேவை செய்ய வேண்டுமென்ற பக்குவம் பெற்றிருந்தகர்ம வீரரான திரு. நா முத்தையா அவர்களின் ஆசிரியப்பணி ஆன்மீகப்பணிக்கு அச்சாணியாக விளங்கியது. 1939ம் ஆண்டுக்காலப்பகுதியில்

நாவலப்பிட்டியில் இவர் ஆசிரியராகக் கடமையேற்ற காலப்பகுதி. நற்சிந்தனை முத்துக்களை வாரி வழங்கும் நன்நிலமாய் அமைந்து விளங்கியது மலையகம். ஏனைய ஆசிரியர்கள் உடற்கல்வி, உளக்கல்வி போன்றவற்றை மாணவர்களுக்கு வழங்கிய போது, இவர் அவற்றிற்கும் மேலாக மனிதன், மனிதனாக வாழ்வதற்கு உற்றதுணையாக இருக்கின்ற ஆத்மீகக்கல்வியைப் போதித்தது மட்டுமன்றி அதனைச்சாதனையிலும் காட்டினார்.

சமயம் தமிழ்க்கல்வி போன்றவற்றை மேம்படுத்தும் பொருட்டு மாணவரிடையே மாணவமன்றங்களை ஏற்படுத்தினார். "இந்து மாணவர்மன்றம், தமிழ் மாணவர் மன்றம்" போன்றன குறிப்பிடத்தக்கன. இம்மன்றங்களினூடாக சைவவினாவிடைப்போட்டி, சமயப் பேச்சுப் போட்டி, பண்ணிசைப்போட்டி, கட்டுரைப்போட்டி போன்றவற்றை ஏற்படுத்தி திறமையும், புலமையும் மிக்க முதன்மையான மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கினார். இதனூடாக புதியதொரு மாணவ சமூகத்தை உருவாக்கும் பாரிய பணியில் ஈடுபட்டார்.

திரு.க.இராமச்சந்திரன் அவர்களும், திரு.நா.முத்தையா அவர்களும், தமக்கிடையே இருந்த உறவை வலுப்படுத்தும் நோக்கிலும் பத்திரிகைப்பணியை மேற்கொள்ளும் நோக்கிலும் 1948ம்ஆண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் மாதம்தோறும் "ஆத்மஜோதி" என்ற பெயரில் மாதவெளியீட்டைமேற்கொண்டனர்.

இலங்கையில் ஓர் இல்லற ஞானி, திருமறைக்காட்சி, திருமுறைச்செல்வம், பன்னிரு மாத நினைவுகள், ஈழத்துச்சித்தர்கள், கந்தனே கலியுகத்தில் கண்கண்டதெய்வம், ஆகிய நூல்கள் இவருடைய நூல்களில் சிறப்பானவை. இவரின் நூல்கள் மாணவர் கட்கு நல்லறிவு, நல்லொழுக்கம் என்பவற்றைப் போதித்தல், சைவ அபிமானிகளுக்கும், ஏனையவர்களுக்கும் இந்துப் பண்பாட்டம்சங்களைத் தெளிவுபடுத்துதல் ஆகிய இரு இலக்குகளை முதன்மையாகக் கொண்டது.

"அரிது அரிது மானிடராவது அரிது" என்பார் ஔவையார். எமக்குச் சரீரம் கிடைத்தது கடவுளைவணங்கி முத்தியின்பம் பெறுவதன் பொருட்டே என்பர் நாவலர் பெருமான். சத்சங்க வழிபாடுசெய்வதன் மூலம் உயர் பேறு அடைய முடியும் என்றும் நாவவப்பிட்டியிருந்த காலத்தில் கொழும்பு சென்று வழிபாடு ஆற்றினார். திரு.இராமச்சந்திரனார் அடிச்சுவட்டினால் இவருக்கு ஞானவான்கள் ஆத்மீகவான்களின் தொடர்பும் அருளாசியும் கிடைத்தது இதற்கு மிக்கதுணையாய் இருந்தது அருட்பிரகாசமான ஆத்தமஜோதி வெளியீடாகும்

நாவலர் பெருமான் சைவசமையத்தை எழுச்சி பெறச் செய்வதற்கு கையாண்ட வழிகளில் சிறப்பானது சொற்பொழிவாகும் அவரின் வழிநின்று பணிபுரிந்து ஆத்மாேதி

முத்தையா அவர்களும் எளிய இனிய தமிழில் சொற்பொழிவாற்றி பல்லாயிரம் உள்ளங்களை கவர்ந்தார். சமய குரவர்கள் ஊர் ஊராக சென்று திருத்தல பாதயாத் திரைகள் முலம் இறைவனின் புகழை மக்களுக்கு பரப்பினர் இத்திருத்தொண்டினை ஆற்றி சைவத்தமிழரிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த உளங்கொண்டவர் திரு.ஆத்ம ஜோதி அவர்கள். தமது இளம் பராயத்திலிருந்து இத்தெய்வப்பணியை ஆற்றத்தொடங்கினார். யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் இவரது திருத்தல பாதயாத்திரை 1993 வரை நடைபெற்றது

மக்கள் சேவையே மகேசன்சேவை என சமூகத்துக்கு சேவைபுரிவதையே இவர் தனது வாழ்க்கையின் இலட்சியமாக கொண்டு வாழ்ந்தவர்எமது கிராமத்தில் சிறுதெய்வ வழிபாட்டில் ஆரம்பகாலங்களில் உயிர்பலிகொடுப்பது இருந்துவந்துள்ளது இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான மனித நேயமற்ற செயல்களிருந்து இந்து சமூகத்தை விடுவிக்கப்பாடுபட்டார். 1998 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் இந்துசமைய பேரவையின் தலைவராக ஆத்மஜோதிஅவர்கள் தெரிவுசெய்யப்பட்டது குறிப்பிடத்தக் கது ஏழையின் சிரிப்பிலே இறைவனை காணமுடியும் என்ற என்ற உறுதிப்பாடு கொண்ட இவர் பிரமச்சாரியாக இருந்தாலும் எல்லோருடைய குழந்தைகளையும் தனது குழந்தையாகவே எண்ணுவார். 1992 ஆண்டு காலப்பகுதியில் கைதடி அனாதைச் சிறுவர் இல்லத்தை சைவச் சிறுவர் இல்லம் எனப்பெயர்மாற்றி தானே பொறுப்பேற்றார்.

இப்பெரியார் தன்னை ஓர் குறுகிய வட்டத்துள் அடக்காது உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று தனது பணியை மேற்கொண்டார் பலர் தம் இனம் மொழி கலாச்சாரம் என்பவற்றைமறந்து புதுமைவிரும்பிகளாக மேலைத்தேய மோகத்தில் சிக்குண்டு தடுமாறுகிறார்கள் இவ்வாறான அவல நிலையை நாட்டிற்கு நாடு சென்று நீக்கிய பெருமை பெரியாருக்கு உரியதே இவ்வாறாக வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்ட ஆத்மஜோதி அவர்கள் கனடாவில் 08.09.1995 அன்று எதிர்பாராத விதமாக மொன்றியல் துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு சென்றிருந்தவேளையில் உயிர் பிரிந்தது. உலகத்தமிழர்கள் மத்தியில் பல ஆண்டுகளாகச் சைவத்தமிழ் பண்பாடுகளை பாதுகாத்து வளர்த்துவந்த ஆத்ம ஜோதியாக குன்றிலிட்ட தீபம்போல மிளிர்ந்துவந்த பெரியாரை தமிழ்கூறும் நல்லுலகம் இழந்துவிட்டது இப்பெரியாரின் ஞாபகார்த்தமாக அவருடைய பிறந்த கிராமத்திலேயே அவரது குல தெய்வமாகிய இலந்தைகட்டி சிறீ பாதாள ஞான வைரவர் கோயிலுக்கு அண்மையில் தியான மணிமண்டபம் அமைக் கப்பட்டது.

அவரது நாமம் கொண்ட ஒரு மணிமண்டபம் காலத்தின் நாட்டின் சந்ததியினரின் தேவையாகும் வணங்குவதற்கும் தியானம் செய்வதற்கும் ஒரு அமைதியான இடமாக இது விழங்கவேண்டும் இவருடைய பெருமையையும் பணிகளையும் உணர்ந்தவர்கள் உறவினர்கள் ஊரவர்கள் அன்பர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஆத்மஜோதி

ஞாபகார்த்தமண்டபத்தினை பேராசிரியர் செ.சிவஞான சுந்தரம் (நந்தி) தலைமையில் திறந்து வைத்தனர் இம்மணிமண்டபத்தில் எமது கிராமத்தில் உள்ள சிறார்களுக்கு பண்ணிசை வகுப்புகளும் சனி ஞாயிறுதினங்களில் கூட்டுப்பிராத்தனை சொற்பொழிவு களும் இலவச பாடவகுப்புகளும் இம்மண்டபத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. இவருடைய குரு பூசைதினத்தன்று மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது

பேராசிரியர் நந்தி இவர் பற்றி கருத்துக் கூறும்போது யாழ்ப்பாணத்திற்கும் மலையகத்திற்கும் பாலமாக இருந்தவர் திரு ஆர்மஜோதி முத்தையா அவர்களே என்றும் தனது சிந்தனையை திசை திருப்பியவர் என்று கூறுவதிலிருந்தும் இவருடைய சிறப்பினை அறிய முடிகின்றருது.

**திருமதி சுயந்தினி குருபரன்**
**ஆசிரியர்.**

# மனித வாழ்விற்கு அவசியமானது கல்வி

கல்வியானது மனித வாழ்க்கையில் பல செயற்பாடுகள் பலவற்றிற்கு உதவுகின்றன. 'கண்டது கற்பவன் பண்டிதன் ஆவான்' என்பது போல நாம் எந்நூல் களையும் கற்பதால் கல்வி வளர்ச்சி பெற்று மனிதனுக்கு பெரிதும் உதவுகின்றது.

. கல்வி என்று சொல்லும்போது அறிவு எனப் பொருள்படும். கல்வியானது எடுக்க எடுக்க குறையாதது. கள்வரால் கவரப்படமாட்டாது. வெள்ளத்தால் அழியாது பிறருக்கு கல்வியை புகட்டும் தோறும் கூட்டிக்கொண்டே செல்லும்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது போல் இளமையிலே கற்பது சிறந்ததாகும். முதுமையில் கற்பதால் ஒரு நன்மையும் கிடைப்பதில்லை. இளமையில் கற்பதால் ஒருவன் அக்கருத்துக்களை ஏற்று அந்த ஒழுங்கில் நடப்பான். கற்கை நன்றே என்று கூறியதுபோல் நாம் கல்வியை பிச்சை எடுத்தாயினும் கற்பதால் அது பிற்காலத்தில் ஒரு அறிஞனாவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.

இவ்வாறே, நாலடியாரில் கல்வியைப் பற்றி பல விடயங்கள் சிறப்பாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இதன்படி ஆண்களது குடுமியினது அழகும் மடித்துக் கட்டிய உடையின் கரை அழகும் பெண்கள் பூசும் மஞ்சளின் அழகும் அழகல்ல. நடுநிலை உடையவராய்த் தமது மனத்திலே நல்லது என்றும் கருதும் ஒருவரைஆக்க வல்ல கல்வி அழகே அழகாகும்.

இப்பிறப்பிலே அடையவேண்டிய நற்பயன்களை கருதுவதும் பிறருக்கும் வழங்குவ தாலும் குறைவுபடாததும் கல்வியுடையவராகிய தம்மைப் புகழில் விளங்க வைப்பதும் தாம் உயிருடன் வாழும் அளவு தீமை பயக்காததும் அழிவுபடாததுமாகிய கல்வியை போல் சிறந்த ஒன்றையும் எவ்வுலகத்திலும் கண்டதில்லை. அதுவே அறியாமையாகிய மயக்கமாகிய இருளை போக்கவல்ல மருந்தாகும்.

ஒருவன் எச்சாதியினைச் சேர்ந்தவனாயினும் அவன் கல்வி அறிவு உடையவனாக இருப்பின் அவனே மேலான இடத்தில் வைத்துப் போற்றப்படுகின்றான். கல்வியின் பல துறைகளும் மனத்தின் கண் சேமித்து வைக்கப்படின் அவை எவராலும் கவரப்படமாட்டாது. அரசர் கற்றோரைத் தம்மிலும் சிறந்தார் என்று பொறாமை கொண்டாலும் கோபித்தாலும் அவர்களாலும் இக்கல்வி கொள்ளப்படுவனவல்ல. ஆகவே கல்வியாளன் ஒருவன் தன் மக்களுக்கென எஞ்சியன என வைக்கத்தக்க செல்வம் கல்விச் செல்வமேயாகும். கல்வியானது அழிவில்லாத நிலையான பொருளாக இருப்பதால் ஒவ்வொருவரும் நம் சந்ததியினருக்கும் கல்வி எனும் செல்வத்தையே

தேடி வைத்தல்வேண்டும்.

கல்வி முடிவில்லாதவை. கற்பவர்கள் வாழும் நாள்கள் மிகச் சிறியதாகும். மெல்ல இருந்து ஆராய்ந்து கற்போம் என்றால் உடலுக்கு இடையில் உண்டாகும் நோய்கள் பலவாகும். ஆகவே, நீரினை நீக்கிப் பாலை அருந்தும் அன்னத்தைப்போல நூல்களின் தன்மைகளை தெளிவாக பகுத்தறிந்து கற்போமானால் அறிஞராகக் கற்ற ஒருவன் தாழ்ந்த குலத்தினனாயினும் அவருடைய சாதியைப் பற்றிச் சிந்திக்காது அவருடைய துணையுடன் பலவற்றையும் கற்றல் படகோட்டி துணைக்கொண்டு ஆற்றினை கடப்பதற்கு சமனாகும்.

இவ்வாறு கல்வி அறிவுடையவனாக இருந்தால் பல செயற்பாடுகளும் எமது வாழ்வில் நிகழ்கின்றன. கல்விப் பண்பும் அன்பும் வாய்க்கப் பெற்றவர்களுடன் செய்து கொள்ளும் நட்பே நீண்டகாலம் நிலைத்திருப்பதோடு தொடர்ச்சியான இன்பத்தை கொடுக்கும். கல்வியறிவு இல்லாதவராயினும் கற்றவர்களுடன் சேர்ந்து அவர்களைப் போல் வாழுவதன் மூலம் அறிவுபெற்று திகழ்கின்றது. ஏராளமாக இருக்கும். நூல்களும் அறிவு சார் நூல்களை கற்பதன் மூலமே பிறவித் துன்பத்தில் இருந்து நீங்க முடிகின்றது.

குற்றம் அற்ற பழைமைவாய்ந்த நூல்களை கேட்டறிந்து கற்றும் அறிஞரான பண்புடையவர்களும் தம்மிடையே பகைமை இல்லாதவர்களும் கூர்மையான அறிவுத் திறன் பொருந்தியவர்களுமான அறிஞர் கூட்டத்திலேயே கூடியிருந்து மகிழ்வது மேலுலகை விட இனிமையானதாகும். ஆகவே, அறிஞர்கூட்டத்தில் கூடியிருந்தாலே இன்பங்கள் யாவுள்ளும் பேரின்பமாகும்.

கல்வியானது கற்கத் தொடங்கும்போது சுவை குறைந்ததாகவும் நாட்செல்லச் செல்ல சுவை கூடியதாகவும் காணப்படுகின்றது. கல்வியறிவு இல்லாதவரும் கற்ற அறிஞரைக் கூடி ஒழுங்கினால் நாள்தோறும் நல்ல அறிவினை அடைந்து சிறப்பர்.

மேற் கூறப்பட்ட பல செயற்பாடுகள் மூலம் மனித வாழ்விற்கு அவசியமானது கல்வி என்பதை உறுதியாக அறிய முடிகின்றது.

**திருமதி கலைவாணி நகுலேஸ்வரன்**
**ஆசிரியர்.**

# சிறுவர் நாடகமும் உளசத்தியும்

பொதுவாக கலை என்பது என்ன? என்பது பற்றி பல்வேறு அறிஞர்களும் பல நிலை நின்றுவிளக்குகின்றனர். அவற்றில் ஒன்று "உணர்வுகளை வெளிக்கொணர்வதில் மனிதத்திறன் வெளிப்படும் முறை: கலை இது இங்கு குறிப்பிடப்பட வேண்டிய தொன்றாகும். மனத்தடை அகன்றிட அவர்தம் ஆற்றல்களை வெளிக்கெண்டுவர வழி அமைத்து நிற்கும் ஆற்றுகைக் கலை வடிவமாகிய நாடகத்திற்கான வரையறை கள் பலவும் உள்ளன. அவற்றுள் "கொண்டாடவும் குணப்படுத்தவும் கடவுளுடன் இடைத் தொடர்பு கொள்ளவுமான சடங்குகளில் இருந்து நாடகம் பிறந்தது" என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஒவ்வொருவரிடமும் உள்ள ஆழ்மனப் பதிவுகளை வேறுவேறு நிலைகளில் வெளிப்படுத்திவிடும் பொழுது அல்லது வெளிப்படுத்தப்படு வதை பார்கின்றபோது அவர்களுக்கு ஒருவகையான மன ஆறுதல் கிடைக்கின்றது. சிறுவர்களுக்கான நாடக அரங்க செயற்பாடுகள் ஏற்றவாறு திட்டமிட்டு கட்டமைக் கப்படுவனவாக அமைத்திருக்கின்றன. ஏற்றவாறு திட்டமிட்டு கொள்ளுவதில் பல்வேறு விடயப்பரப்புகள் சிறுவர்களுக்காக ஒன்றிணைக்கப்படுகின்றன. பின்பற்றுதல், நடத் தையை உருவாக்குதல், வெளிப்படுத்துதல் போல செய்தல் கூட்டாக இயங்குதல் என்றவாறாக இணைந்திருக்கும் பல்வேறு செயல்வடிவங் களினுள்ளும் உளத்தடை நீங்கும் உபாயங்கள் இருக்கின்றன.

எல்லோரும் இயல்பில் உளசத்தி நிறைந்தவர்கள் என்பது உளவியலாளர்களின் கருத்து. எதிர்மறை நடத்தைகள் எதிர்மறையாக சிந்திக்கும் முறைமைகள், எதிர்மறையான எண்ணங்களினால் உளசத்தி அடக்கப்பட்டு வெளிவரமுடியாத நிலையில் வைக்கப்படுவதனால் உளசத்தி குறைந்து பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொள்ள முடியாதவர்களாகி விடுகின்றனர். சிறுவர்களைக் பொறுத்தவரையில் எதிர்மறையான நடத்தைப் பண்புகள் எதிர்மறையான சிந்தனைப் போக்குகள் எதிர்மறையான எண்ணங்கள் அவர்களிடம் தோற்றுவிக்கப்படும் நிலைமைகளே அதிக மாகும். இதில்பங்குகொள்ளும் காரணி சூழல் காரணியே ஆகும். சூழல் நிலைமைகள் சிறுவர்களிடத்தே வாழ்வியல் ஒவ்வாமையை அறிவிக்கும்போது சிறுவர்களின் உள சத்தி குறைந்து போகின்றது. சிறுவர்களிடத்து நேரான சிந்தனை முறைமையை நேரான நடவடிக்கை கோலங்களை நோரான எண்ணங்களை உருவாக்கும் செயல் ஒழுங்கினை சிறுவர் நாடக அரங்க செயற்பாடுகள் வெளிக்கொணர்ந்து விடுகின்றன.

சிறுவர்கள் தப்பான எண்ணங்களுக்குள் அமுங்கி போகவிடாதவாறு சிறுவர்களின் கருத்துக்களுக்கும் மதிப்புத் தந்து கூட்டாக பங்கேற்று முழுமையாகச் செயற்படும் வாய்ப்பினை ஒவ்வொரு சிறுவர்களுக்கும் தருவதாக சிறுவர் அரங்க செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

மனிதர்களிடம் அளவிட இயலாத அளவில் உள்சத்தி உள்ளடக்கமாக இருப்பதாக உளவியலாளர்கள் கூறுகின்றனர். பொதுவாக தம்மிடமுள்ள உளசத்தியின் அளவில் நடைமுறை வாழ்வில் சொற்ப அளவினையே பயன்படுத்துகின்றனர். ஒருவர் தம்மிடமுள்ள நேரான விடயங்களையும் மறையான விடயங்களையும் சுயமதிப்பிடு செய்துகொள்வதும் மறையான விடயங்களை தவிர்க்கும் போக்கும் நேரான விடயங்களை ஆதரித்து வளர்க்கும் போக்கும் கொள்ளவேண்டும். இதுஉளசத்தியை பயன்படு நிலையில் அதிகரித்துகொள்ள வாய்பைத்தரும். சிறுவர்களிடத்து மறையான பண்புகளை இடம்குறிப்பதை விடுத்து அதை கவனியாமலும் நேரான பண்பினை இடம்குறித்து பாராட்டும் வெளிப்படையான ஆதரவும் தருவது சிறப்பானதாகும். சிறுவர் அரங்க செயற்பாடுகளில் ஈடுபடும் சிறுவர்கள் தமக்கான சிறப்பு செயற்பாடுகளுக்கான பாராட்டுதல்களை உடனடியாக பெற்றுகொள்ள கூடியதாக இருப்பதனால் அவர்களால் நல்லபேறுகளை எட்டமுடிகின்றது

சிறுவர்களின் உளசத்திமட்டத்தினை ஒரு எல்லைக்கு கீழே குறையாதவாறு அவர்களை கவனித்துக்கொள்வது சிறுவர்கள் வாழும் சமூகத்தினது கடமையாகும். இன்றைய சூழலில் சிறுவர்களின் சத்திமட்டத்தை குறைக்கும் சமூகக்காரணிகள் குடும்பத்தில் என்றாலும் பாடசாலையில் என்றாலும் அதிகமாக உள்ளன என்ற கருத்தும் இருக்கின்றன. இவற்றிற்கு புறம்பாக பாடசாலையில் சிறுவர்களுக்கான ஆரோக்கியம் பேணும் செயற்பாடுகளும் அதிகமாக நடைமுறைக்கு வந்துள்ளன. சிறுவர் நாடக செயற்பாடுகள் கலைத்திட்ட செயற்பாடுகளினுள்ளும் சிறுவர் அரங்கியற் செயற்பாடுகள் கலைத்திட்டற்கு சமாந்தரமான செயற்பாடுகளினுள்ளும் விரிவாக்கம் பெற்றுவருகின்றமை சிறுவர்களுக்கான நல்ல சகுனமாகவே பார்க்கப்பட வேண்டும். இவ்வாறு சகுனம் பார்க்கும் நிலையிலேயே இன்றும் இருப்பது என்பது ஒருபுறத்தில் கவலை தரும் நிலையுமாகும். சிறுவர்களை பேணவும் அவர்தம் ஆற்றல்களை வெளிக்கொணரவும் முழுமையான திட்டமிடப்பட்டகட்டமைப்புடன் கூடிய சிறுவர் நாடக அரங்க பயன்பாட்டு நடைமுறைகள் எதிர்வரும் காலங்களில் உருவாகவேண்டும்.

போதுமான அளவில் சிறுவர்களின் உளசத்தியை வெளிக்கொணர்வதில் சிறுவர் களில் ஈடுபாடு உள்ள அனைவரும் திட்டமிட்டு செயலாற்றவேண்டும். சிறுவர்கள் தாம் வாழும் சூழலுடன் இசைவுபெற அவர்களுக்கு பலவிதத்திலும் உதவவேண்டும் இதுவும் அவர்கள் உளசத்தியை பேண உதவும் செயற்பாடாக அமைந்துவிடும். சூழலுடன் இசைவு பெறவைக்கும் முயற்சியில் சிறுவர்களுக்கான நாடகமுறைமை சிறப்பான ஊடகமாகி விடுகின்றது. சூழல்பற்றிய அவதானிப்பு வினாக்களை எழுப்பாமை காணவிளைதல் போலச்செய்து பார்த்தல் பிறருடன் தொடர்பு கொள்ளும் மாதிரிகளை அறிதல் போன்ற அனைத்து சூழல்சாந்த தெளிவையும் சிறுவர்களுக்கு நாடகங்கள் வாயிலாக ஏற்படுத்தி விடுவது இலகுவாகும்.

சிறுவர்களிடத்து தண்டனையின் மூலம் நடத்தை மாற்றத்தை உண்டுபண்ணுவது சுருக்கமான வழிமுறையாக அமைந்துவிடுகிறது. இது சிறுவர்களிடத்து உளசத்தி மட்டத்தை குறைத்துவிடுவதனால் அந்நடத்தை மாற்றம் நிரந்தரமாக அமைந்து விடுவது பெரும்பாலான நிலைகளில் குறைவாகவே இருக்கின்றன. சிறுவர்களிடத்தில் சுயமான சிந்தனையின் மூலம் நடத்தை உருவாக்கத்தை ஏற்படுத்துமிடத்து உளசத்தி மட்டம் உயர்வடைகின்றது உளசத்திமட்டதை உயர்வாகபேணும்போது சிறுவர்களிடத்தே சட்ட ஒழுங்கு விதிகளை அறிமுகப்படுத்துவதும் நடைமுறைபடுத்துவதும் இயல்பாக நடந்து அவர்களிடம் நல்ல நடத்தைக் கோலங்களை உருவாக்கிவிடுகின்றன. சிறுவர்களை மகிழ்விப்பதும் அவர்களிடத்தே நேராக சிந்திக்கும் முறைமையை கட்டமைப்பதும் கூட்டாக செயல் இயக்கம் கொள்ளவைப்பதும் மறையான எண்ணங்கள் மறையான உணர்வுகள் போன்றவற்றை வெளியேற்றி நோக்கிக் கொள்ள களமமைத்து நிற்பதும் சிறுவர் நாடக அரங்க செயற்கபடுகளுக்குள் சிறப்பாகக் கட்டமைக்கப் பட்டிருப்பதனால் இவை சிறுவர்களிடத்தில் உளசத்தி மட்டத்தை உயர்வாக பயன்தகு விதத்தில் பேணி பயன் கொள்ளவைக்கின்றன.

**திரு. த. சிவகுமாரன்**
**முகாமையாளர்,**
**ஆசிரியர் நிலையம்,**
**மானிப்பாய்.**


JERLALAI NORTH
SCHOOL

# சிறப்பு மலருக்கு நிதியுதவி செய்தவர்கள்



**நிற்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

1. திரு.பெஞ்சமின் செல்வரட்ணம் கேராபீன்
2. திரு.பெஞ்சமின் செல்வரட்ணம் விக்ரர் செல்வச்சந்திரன்
3. திரு.பெஞ்சமின் செல்வரட்ணம் ஜெபச் செல்வன்

**அமர்ந்திருப்பவர்கள் (இடமிருந்து வலமாக)**

1.திருமதி றெஜீனா தேவஜெயந்தி குகாநந்தன்
2.திருமதி எஸ்தர் ஜோதினி பிறேம்குமார்
3.அதிபர் திரு. த.வாமதேவன்
4.திருமதி றோஸ் செபரத்தினம் பெஞ்சமின் செல்வரட்ணம் (முன்னாள் ஆசிரியை)
5.திருமதி டெய்சி பத்மினி சாந்திக்குமார்

# நீங்காத நினைவில்...

மலர்வு:
10.12.1999

உதிர்வு:
01.06.2008



## அமரர் வி.தர்சன்

எழுவான் திசையில்
எழுகின்ற நேரம்
கங்குல் மறைந்து
கதிரவன் எழுநேரம்...

கையடக்கத் தொலைபேசி
மணி ஒலிக்கத் தடவியெடுத்து
தட்டிப் பார்த்தேன்
தேடிய தென்றல் தெறித்த செய்திதான்...

பொறிவைத்த கொடியவரின்
குண்டுபட்டு தவறிவிட்டான் தர்சன்
பொடிப்பொடியாகி பொற்கிளி
இறந்து போனான்

பட்டென வரும் மின்னல்போல்
பட்டான உடலைக் குண்டு துளைத்ததுவோ
பச்சைப் பாலகன் தர்சன்
பிச்செறியப் பட்டதனால்
செவி ஒலி இழந்தது

உணர்வுகள் இழந்ததுவோ
என்னடா தர்சன்? ஏனடா இப்படியானாய்!
ஒன்றுமே புரியவில்லை
பால் மணம் மாறாத பச்சிளம் பாலகனாய்
பள்ளியிலே வந்து குதூகலித்தாய்
துள்ளித் திரிந்து துடுக்குத் தனம் காட்டி
கல்வியிலே கவிபாடி வல்லவனாய் நீ திரிந்தாய்

நீ திரிந்த ஊரும் அயலும்
உனைத் தினம் தேடுதடா
நீ படித்த கூடத்தில் உன்
உறவுகளும் நினைக்குதடா

நீ நிறுத்திப்போன சுவாசத்தை
தேடுகின்றோம்
எங்கே?......... எங்கே.........
எம் தர்சன்
உன் மரணம்........
விதைக்கப் பெற்றதனால்
மீண்டும்.....

**பாடசாலைச் சமூகம்**

# அறிவமுதை ஊட்டிய என் அன்னைக்கு...



ஏழாலையென்கின்ற எழில் மிகு
சோலையிலே
அறிவுச்செடியாக நீயும்
வாசம் வீசும் மலர்களாக ஆசான்களும்
வரப்பிரசாதமாக உனையேற்று தேனீக்களாம் எங்களுக்கு
அறிவுத் தேனை ஊட்ட வழி
காட்டியாக நீயிருந்து இன்று
நூற்றியிருபதாவது அகவை கண்டு
இப்பூமியில் பெருமை பெற
வாழ்த்திடுவோம் நீ வளர்த்த
மாணவர் நாம் வாழிய நீ

எழாலை வடக்கெனும்
வளமான சிற்றூரில்
கள்ளமில்லா மாணவர் நாம்
அள்ளிக்கல்வி கற்கவென
பள்ளி ஒன்று தோன்றிடவே
துள்ளிச்சென்று கற்றிட்டோம் இன்று
அகவை பல கண்டு
வெற்றி நடை போடுகின்ற எம் பள்ளித் தாயே
நீ பல்வாண்டு காலம்
பார் போற்ற வாழியவே!

அன்னையே உனக்கு
பெருமை சேர்க்கும்
பணியதனில் உன் சேய்களின்
பயணம் தொடரும்...
காத்திரு தாயே உன்
புகழ்மாலை
வளர்ந்து வானம் வரை
ஓங்கி ஒலிக்கும் நாள் தொலைவிலில்லை

**வ. திருச்செல்வன்,**
**தரம் 03.**

மாணவர்கள்



பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



# சிறுவர்கள் நாங்கள்



சிறு சிறு குற்றங்கள் புரிந்தாலும்
சில்லென்று சிலிர்க்கவைக்கும்
சிறுவர்கள் நாங்கள்

வானுயர வளர்ந்து நாமும்
வளம்பெற வேண்டுமானால்
பெரியோர் சொற்கேட்டு
புகழ்தேடி வாழவேண்டும்

ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது
இதேபோல சிறுமையிலே பெருமைதேடி இன்பமாக வாழ்ந்திடுவோம்

இளமையில் கல்வி சிலையில் எழுத்து
என்பதற்கிணங்க இளமையிலே கற்று
ஏற்றமுற வாழ்ந்திடுவோம்
தடயங்கள் பல தாண்டி
தரணியிலே உயர்ந்திடுவோம்

அன்பு தர அம்மா உண்டு
அறிவுதர ஆசானுண்டு
இருவருடைய ஊக்கத்தாலே
அவனியிலே உயர்ந்திடுவோம்



இனியனவற்றை செய்து
இரக்கமுடன் வளர்ந்து
இவ்வுலக மேடையிலே
இன்பமாக நடித்து நாமும்
மலர்போல நாளும் மலர்ந்து
மணம் வீசி வளமுடன் வாழ்ந்திடுவோம்

**கி. வைஷ்ணவி**
**தரம் 01**

# கற்றுக்கொள்




நன்மை செய்யப் கற்றுக்கொள்
நலமாய்வாழக் கற்றுக்கொள்
உண்மைபேசக்கற்றுக்கொள்
உயர்வாய்வாழக்கற்றுக்கொள்
துயரைபோக்ககற்றுக்கொள்
துணிந்து செயற்படக் கற்றுக்கொள்
உழைத்து வாழக் கற்றுக்கொள்
உலகை ஆளக் கற்றுக்கொள்
இனிதாய் பேசக்கற்றுக்கொள்
இன்பம் பயக்ககற்றுக்கொள்
வறுமைவந்தால் வாழ்வினில்
தாங்க ஏற்கக் கற்றுக்கொள்



நா.துஜீபன், தரம் 5.

# புலர்ந்தது காலை



*வையகம் விழித்தெழவே*
*வாரணங்கள் கூவின*
*வைகறைப் புற்கள் எல்லாம்*
*வசந்த கீதம் பாடின*

*வான் முகில்கள் கூட்டமாக*
*வாழ்த்துச் சொல்லிச் சென்றன*
*வானத்துக் கதிரவன்*
*கீழ்த்திசையில் தோன்றினான்*

*வண்ண வண்ணப் பூக்களெல்லாம்*
*மலர்ந்து மணம் பரப்பின*
*வண்டினங்கள் வட்டமிட்டு*
*மகிழ்ந்து தேனைக் குடித்தன*

*சோலையில் இளந்தென்றல்*
*இனிய செய்தி சொன்னது*
*மாந்தரவர் தம் கடமை*
*மகிழ்வுடனே ஆற்றுகிறார்*

வ.திருச்செல்வன்,
தரம் - 3.

விழா நிகழ்வுகளின் பதிவுகள்










# இரும்புச்சத்து குறைபாடும் கற்றலுக்கு தடையாயமையும்!


இரும்புச் சத்து குறைவினால் பாதிப்படைந்த பிள்ளைகளுக்கு அதனை நிவர்த்தி செய்ய மாத்திரை (tablets) அல்லது பாணியை (Syrup) வழங்குவதன் மூலம் அவர்களின் அறிவினை வளர்ச்சியடைய செய்ய முடியுமென அமெரிக்க ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. இரும்புச்சத்து குறைவினால் பாதிப்புற்ற 9 வயதையுடைய பாடசாலைச் சிறார்களுக்கு மேலதிக இரும்புச்சத்தினை வழங்குதலானது அவர்களது ஞாபக சக்தியினை வளர்ச்சியடைய செய்வதில் எவ்வித தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை தீர்மானிப்பது இந்த ஆய்வின் நோக்கமாக இருந்தது. இப்பிள்ளைகள் இரு குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். ஒரு குழுவினருக்கு 100 மில்லி கிராம் (100 mg) இரும்புச் சத்து மாத்திரைகள் ஒரு நாளுக்கு ஒன்று வீதம் 10 வாரங்களுக்கு வழங்கப்பட்டது. மற்றைய குழுவினருக்கு போலியான மாத்திரைகள் வழங்கப்பட்டது. ஆய்வின் முடிவில் ஒரு லீற்றரில் 100 – 119 வரையிருந்த ஈமோகுளோபினின் (Hb) அளவு ஏனைய மந்த போசனை, பாதிப்புறாத பிள்ளைகளுக்கும் கூட அறிவாற்றலை அதிகரித்துள்ளதெனத் தெரியவந்துள்ளது. (Nutrition and Health) வாழ்க்கையின் எந்தப் பருவத்திலும் ஏற்படும் இரும்புச் சத்துக் குறைபாடு காரணமாக ஏற்படும் குருதிச் சோகை ஞாபக சக்தியில் தற்காலிக தாக்கத்தினை உண்டு பண்ணுவதுடன் மேலதிகமாக இரும்புச் சத்தினை வழங்குவதன் மூலமாக அதனை மீளப்பெறும் நிலையினை அடிப்படையாக கொண்டு இந்த ஆய்வினை செய்துள்ளனர். ஆயினும் பாரிய அளவிலான இரும்புச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் குருதிச்சோகையானது ஞாபக சக்தியினை பாதிப்படைய செய்யும் தாக்கம் நிரந்தரமானதாகும். அந்நிலை குறைவாக இருப்பின் மேலதிக இரும்புச்சத்தினை வழங்குவதன் மூலம் சரிசெய்ய முடியும் என ஆய்வுகள் கூறுகின்றன. பிரச்சனை யாதெனில் வயதுக்கேற்ற நிறையுடன் மந்த போசாக்கினால் பாதிக்கப்படாத பிள்ளைகளுக்கும் கூட இக்குருதிச்சோகை காரணமாக ஞாபக வளர்ச்சியில் தடை ஏற்படும் என்பதாகும்.

பாடங்களில் திறமை, கவனத்தினை செலுத்தும் தன்மை, ஞாபக நிலை, மீள ஞாபகப்படுத்தக் கூடிய திறமை போன்ற சகல நடவடிக்கைகளிலும் சிறந்த நிலையினை பெறுவதற்கு இரும்புச்சத்துக் குறைபாட்டிலிருந்து மீட்சி பெறுவது அவசியமாகும் என இந்த ஆய்வுகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## குருதிச் சோகை எனப்படுவது யாது?

ஈமோகுளோபின் மூலமாக குருதிக்கு சிவப்பு நிறம் கிடைக்கிறது. நுரையீரலில் இருந்து ஒட்சிசனை ($O^2$) எடுத்துச் செல்ல குருதியில் ஈமோகுளோபின் இருப்பது அவசியமாகும். இரும்புச்சத்து குறையும்போது ஈமோகுளோபினின் அளவும் குறை வடையும். இந்நிலைமை குருதிச்சோகை என அழைக்கப்படுகிறது.

## ஈமோகுளோபின் (Haemoglobin = Heme + globin)




ஈமோகுளோபின் எனும் சிக்கலான புரதம் செங்குழிய கலங்களில் காணப்படுகின்றது. இது குளோபின் (globin), கீம் (Heme) எனும் பதார்த்தங்களினால் ஆனதாகும்.

ஈமோகுளோபினின் அளவு → ஆணில் 13 – 18G / dl
→ பெண்ணில் 11.5 – 16.5 g / dl
(dl – deciliter, 1dl = 1/10 litre)

ஈமோகுளோபினி கனவளவு → 27 – 32 Pg
(Pg = Pico gram, $10^{12}$ Pg = 1 gram)

குருதியில் ஈமோகுளோபினின் செறிவு → 30 – 35 g / dl
(Source – Biological Science)

செங்குழிய கலங்கள் 120 நாட்கள் மாத்திரமே உயிருடன் இருக்கும் பின்னர் அவை ஈரலில் அழிக்கப்பட்டுவிடும். எனவே தொடர்ந்தும் ஒவ்வொரு நாரும் இரும்புச் சத்தினை உள்ளெடுக்க வேண்டிது அத்தியாவசியமானதாகும்.

## இரும்புச் சத்து குறைபாட்டினை எவ்வாறு கண்டுபிடிப்பது?

இரும்புச்சத்துக் குறைபாட்டினை பின்வரும் அறிகுறிகள் மூலம் கண்டு பிடிக்கலாம்.

01. விரைவில் களைப்படைதல்

02. அவதானிப்பு ஞாபகசக்தி குறைதல்
03. வளர்ச்சி குறைதல்
04. சோம்பல்த் தன்மை
05. குறைப் பிரசவம்
06. நோயெதிர்ப்பு சக்தி குறைதல் அடிக்கடி தொற்றுநோய்களுக்கு ஆளாதல்
07. பொருத்தமற்ற உள, நடத்தை மாற்றங்கள்

அத்துடன் குழந்தைகள், சிறுபிள்ளைகளின் நரம்பு வளர்ச்சி மற்றும் அதனுடனான தொடர்புகளையும் குறைத்து விடக்கூடுமென தெரிய வந்துள்ளது.

ஒரு பிள்ளையினை பரிசோதிக்கும்போது கண்மடலின் உட்புறம் வெளிறி (வெண்நிறமாக) காணப்படுதல், உடல் வெளிறிக் காணப்படுதல், நாக்கின் மேற்பகுதி அழுத்தமாகி நோ ஏற்படுதல் என்பவற்றினை கொண்டு (clinical examination) இரும்புச்சத்து குறைபாடு ஏற்பட்டுள்ளது என்பதனை கண்டறியலாம். குருதியினை எடுத்து ஆய்வு கூடத்தில் பரிசோதிப்பதன் மூலமாக (FBC – Full Blood Count) இதனை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

## வளரும் பிள்ளைகளில் இரும்புச்சத்தின் அவசியம்

வளர்ச்சிப் பருவத்தில் இரும்புச்சத்து அதிகம் தேவையாகும். பிறப்பிலிருந்து 18 வயது வரை 4 – 5 g வரை இரும்புச்சத்து உடலில் சேமிக்கப்படும். வளர்ந்த பெண் பிள்ளைகளுக்கு இரும்புச்சத்து அதிகம் தேவை. மாதவிடாய் ஏற்படும்போது குருதி வெளியேற்றம் போன்ற காரணிகளால் இரும்புச்சத்து குறைவடையும். (3 mg / dny) குறையும் இரும்புச்சத்தினை வழங்காவிட்டால் உடலுக்கு பாதிப்பு ஏற்படலாம். அநேகமான பெண் பிள்ளைகள் குருதிச் சோகைக்கு ஆளாவது இதன் காரணத்தாலேயாகும். இதனைவிட கர்ப்பகாலம், பாலூட்டும் காலங்களிலும் மேலதிக இரும்புச்சத்து தேவைப்படும். போதியளவு எடுக்காதபோது குருதிச் சோகை ஏற்படும்.

இரு காரணங்களால் இரும்புச்சத்து குறைபாடு ஏற்படல்.

01. அன்றாட உணவில் தேவையான அளவு இரும்புச்சத்தினை பெற்றுக்கொள் ளாமை

02. குருதிப் பெருக்கு - இது திடீர் விபத்தின்போது அல்லது மலேரியா, மூலநோய், கொழுக்கிப்புழுநோய், மாதவிடாய் போன்ற காரணங்களால் உண்டாகலாம்.

## இரும்புச்சத்தின் தேவையினை தீர்மானிப்பவை

அன்றாட உணவு மூலம் உடலுக்கு கிடைக்கும் இரும்புச்சத்தின் அளவினை பின்வரும் காரணிகள் தீர்மானிக்கின்றன.

01. உணவில் காணப்படும் இரும்புச் சத்தின் மொத்த அளவு
02. உணவில் உள்ள இரும்புச் சத்தின் தன்மை
03. ஒருவரது உணவு மற்றும் இரும்புச் சத்து தேவையின் அளவு

இரும்புச்சத்து அதிகமாகவுள்ள உணவுகளை உண்பதன் மூலம் கூடிய அளவு இரும்புச்சத்தினை பெற்றுக் கொள்ள முடியும். அதேபோல உணவிலுள்ள இரும்புச் சத்தின் தன்மையும் இதற்கு காரணமாகும். உணவிலுள்ள இரும்புச்சத்தின் தன்மைக் கேற்ப இரண்டு வகையாக பிரிக்கலாம்.

01. நிரம்பிய இரும்புச்சத்துள்ள உணவுகள் → இறைச்சி, மீன் போன்றனவாகும். ஒரு நேர உணவின் மூலம் 15 – 20% வரை உடலுக்கு பெறப்படும்.

◆ ஆட்டின் குருதியில் அதிகளவு இரும்புச்சத்து உள்ளபோதிலும் அது இலகுவாக கிருமித்தொற்றுக்கு உள்ளாக கூடியதென்பதால் உண்பதை தவிர்த்துக் கொள்ளல் நல்லதாகும்.

02. நிரம்பாத இரும்புச் சத்துள்ள உணவுகள் → தானியங்கள், பச்சை இலைகள், காய்கறிகள், முட்டை, பால், பழங்கள் (மஞ்சள் பழங்கள்)

இலங்கையில் அதிகமாக நிரம்பாத இரும்புச்சத்துள்ள உணவு வகைகளே மக்களால் உள்ளெடுக்கப்படுகின்றன. இவற்றில் இருந்து ஒருவேளை உணவின் மூலம் 5% மான இரும்புச் சத்தே பெறப்படுகின்றது. எனவே எமது உணவுடன் இரும்புச்சத்து அதிகம் உள்ள இறைச்சி, மீன் போன்றவற்றினை சேர்த்துக் கொள்ளவேண்டும். அசைவ உணவுகளை சாப்பிடாதவர்கள் நிரம்பாத இரும்புச் சத்தினை பெறக்கூடிய ஏனைய உணவுகளை உதாரணமாக பச்சை இலைகறிகள், மஞ்சட்பழங்களை அன்றாட உணவில் அதிகமாக சேர்த்துக்கொள்ளவேண்டும்.

## இரும்புச்சத்தினை அதிகமாக உறிஞ்சிக் கொள்ள நாம் என்ன செய்ய வேண்டும்?

01. புதிய காய்கறிகள், பச்சை இலைவகைகள், பழங்களை எடுத்தல்.

02. உணவு சமைக்கும்போது புளி, தக்காளி, பிம்பிலிக்காய் போன்ற அமிலவகை உணவு வகைகளை சேர்த்துக் கொள்ளல். விட்டமின் C அதாவது இவ்வுணவு களிலுள்ள சித்திரிக் அமிலம், மலிக் அமிலம், தாத்தாரிக் அமிலம் போன்றவை இரும்புச்சத்தினை கூடிய அளவில் உறிஞ்ச உதவும்.

03. கடலை, பயறு போன்ற வித்துக்களை சிலமணிநேரம் நீரில் ஊற வைத்து முளைகட்டிய பின்னர் உணவுக்கு பயன்படுத்துவதன் மூலம் இரும்புச்சத்து அகத்துறிஞ்சுவதை குறைக்கும். ஏனைய பொருட்களை அகற்ற முடியும்.

04. அப்பம், தோசை தயாரிக்கும்போது நொதிக்க வைப்பதன் மூலம் இட்டலி இரும்புச்சத்து உறிஞ்சுவது இலகுவாக்கப்படும்.

05. இறைச்சி, மீன், கருவாடு, சிறிதளவாவது சேர்க்கப்பட்டால் உணவு சமிபாட்டின் பின்னர் இரும்புச்சத்தினை உறிஞ்சும் அளவினை இவை அதிகரிக்கும்.

06. இரும்புச்சத்தினை உறிஞ்சுவதற்கு தடையினை ஏற்படுத்தும் உணவுகளை தவிர்த்தல். அஃதாவது தேயிலை, கோப்பியினை உணவுடன் அல்லது அதற்கு சற்று முன் பின்னராக (ஏறத்தாழ 2 மணித்தியாலம்) அருந்துவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

07. கறிகளுக்கு தேசிப்புளி விடும்போது அடுப்பிலிருந்து இறக்கி கறி ஆறியபின்னரே விட வேண்டும். ஏனெனில் விட்டமின் C அதிக வெப்பத்திற்கு பதனிழந்து போய் விடும்.

**அத்துடன் கீழ்வரும் நடவடிக்கைகளும் இரும்புச்சத்து அதிகம் உடலால் உறிஞ்சப்பட அல்லது உடம்பிலிருந்து இழக்கப்படாமல் இருக்க உதவும்.**

01. கர்ப்பகாலம், பாலூட்டும் காலங்களில் உணவின் மூலம் பெறும் இரும்புச்சத்து போதுமானதல்ல. இவ்வாறானவர்கள் இரும்புச்சத்துள்ள மாத்திரைகள், பாணி என்பவற்றினை உள்ளெடுக்க வேண்டும். சிலருக்கு இவற்றினை உள்ளெடுக்கும்போது வாந்தி, குமட்டல், வயிற்றுப்பிரட்டல் என்பன ஏற்படலாம். இதனை தவிர்க்க இரவு உணவின் பின் உள்ளெடுப்பது நல்லதாகும். அத்துடன் Vitamin C மாத்திரையினையும் சேர்த்து உள்ளெடுக்கவேண்டும்.

02. கல்சியம் இரும்புச்சத்து அகத்துறிஞ்சலை குறைக்குமாதலால் இரும்புச்சத்து மாத்திரையுடன், கல்சியம் மாத்திரையினையும் உள்ளெடுத்தலை தவிர்க்கவேண்டும்.

03. மலேரியா, மூலநோய் என்பன ஏற்படின் உரிய சிகிச்சையினை, உரிய வைத்தியசாலைகளில் பெற்றுக்கொள்ளவேண்டும்.

04. புழு வியாதிக்கான சிகிச்சை – குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு தடவை யாவது பூச்சி குளிசைகளை உள்ளெடுக்கவேண்டும். உங்களுக்கு அருகிலுள்ள அரச வைத்தியசாலைகள், பொது சுகாதார பரிசோதகர் (PHI), குடும்ப நல சேவை உத்தியோகத்தர் (PHM) ஆகியோரிடம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

**"இன்றைய குழந்தைகள் நாளைய எமது நாட்டின் தூண்கள்"**
**"ஆரோக்கியமான, கல்வியிற் சிறந்த நற்பிரசைகளை நாளைய நாட்டிற்காக உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து உழைப்போம்"**

**பரமானந்தம் சதீஸ்குமார்,**
**பொது சுகாதார பரிசோதகர், ஏழாலை.**

**உசாத்துணை**

01. Biological Science
02. Nutrition and Health
Health Education Bureau, Colombo – 2.

# பாரதியாரும் பாலர் நாமும்





- பாட்டுக்கு ஒரு புலவர் பாரதியார்
  பாப்பா பாட்டுத் தந்துள்ளார்
- ஓடி விளையாடு பாப்பா என்றார்
  ஓய்ந்திருக்கலாகாது என்று சொன்னார்
- கூடி விளையாடு பாப்பா என்றார்
  குழந்தையை ஏசாதே என்று சொன்னார்
- பாலைப் பொழியும் பசுவை நல்லதென்றார்
  வாலைக்குழையும் நாயை நல்லதென்றும் சொன்னார்
- வண்டி இழுக்கும் நல்ல குதிரையுடன்
  வயலை உழுதிடும் மாடும் நல்லதென்றார்
- அண்டிப் பிழைக்கும் நல்ல ஆட்டையுமே
  ஆதரிக்க வேண்டும் என்று சொன்னார்
- எத்தித்திருடும் காக்கைக் கூட்டம்
  அதற்கும் இரக்கப்படும்படி சொல்லிவிட்டார்
- காலை எழுந்தவுடன் படிப்பு என்றார்
  கனிவு கொடுக்கப்பாடு என்றும் சொன்னார்
- மாலை முழுதும் விளையாடச் சொன்னார்
  எல்லாம் வழக்கமாகச் செய்யச் சொன்னார்
- பாலர் எங்கள் பள்ளிதனில்
  பாரதி பாட்டில் கூறியதை
- நாளும் பொழுதும் கைக்கொள்வோம்
  நல்லவர் நாமென வளர்ந்திடுவோம்

**செல்வி விஜயகுமார் - யாதவி**

**தரம் -1**

பாடசாலைத் திறப்பு விழா (2003)










# ஏழாலை என்பது எமதரும் ஊராம்

ஏழைலை என்பதும் எமதரும் ஊராம்
ஏரலை மாந்தர் அதனது மைந்தர்
வாழ்வதும் இங்கே வளமுடன் காண்பீர்
வானுறை தெய்வம் வாழ்ந்திடும் ஊராம்.

ஏழ்வகை ஆலயம் ஓரிடம் சேர்ந்து
எமதரும் ஊரின் பெயருடன் இணையும்
தோள்வலி கொண்டெமர் ஆடவர் உழைப்பால்
தோட்டங்களெங்கும் நிறைபொலி சொரியும்

பருப்புடன் பாலது பெருகிடும் ஊரில்
பனையது பெருகி நிறைபொலி சோலை
விருப்புடன் மாதர் பெருமிகு விருந்தால்
விருந்தினர் மனங்களில் களிவெறி கொள்ளும்.

பழவகை மரக்கறி பனம் பொருளோடு
பருமிகுநீரும் சுவையுடன் தேறும்
உழுபடை வீரர் உறுமிகு தோழர்
ஆவினம் பெருகும் ஆயிடைபூமி

செம்மை கொண்டொரு செம்மண்பூமி
செழிப்புடன் கொழித்து செல்வமாய் சொரிவாழ்
இம்மையில் சொர்க்கம் பார்த்திட வேண்டில்
ஏழாலைத் திருப்பதி வாழ்ந்திட வாரும்

சி.வை. என்றொரு சிறப்புற அறிஞர்
சீரொடு வாழ்ந்த சீரிய ஊராம்
பைந்தமிழ்க் கதைகள் பாங்குடன் படைத்த
பார்புகழ் இலங்கையர் கோனது மண்ணாம்.

கற்றவர் நிறைந்த கவிபுனை ஊரில்
கலாநிதிப் பட்டம் பெற்றவர் இருவர்
கொற்றவர் துணையது வேந்தர் குணரத்தினத் தொடு
கணி(த) மதின் மேதை கனகசபாபதியாம்.

அரியநாயகம் என்றொரு நீதி
பதியது தந்த பண்புடை ஊராம்
சரிநிகர் என்றொரு சமத்துவம் சாற்றும்
சான்றோர் வாழும் சாத்வீக பூமி

எதிர்க்கட்சித் தலைவரின் ஏற்புறு செயலர்
பேரின்பநாயக பெருந்தகையோடு
மெடிக்கல் சேர்ஜன் ஜெயமனோகரனும்
ஆளுநர் செயலர் அமிர்தலிங்கமும்

வாசம் செய்யும் வனப்புறு ஊரில்
வளரும் தலைமுறை புகழ்பல காட்டும்
வீசும் காற்றில் கல்வியின் வாசம்
விருப்புடை ஊரில் என்றுமே கமழும்.

சாதுகள் பலரைக் கண்டதெம் பூமி
போது மென் மனங் கொண்ட போதகுசித்தர்
அருளானந்த சிவமென்ற ஆன்மீக வள்ளல்
ஆத்தும ஜோதி முத்தையாவோடு

பண்டிதர் கந்தையா ஆனந்தக் கூத்தர்
புனை கதை உலகின் வைத்தியலிங்கம்
வண்ணார் பண்ணைச் சுப்பையனாரும்
வாசம் செய்த வளமிகு ஊராம்.

ஈரின் நான்கு இணையற்ற பள்ளி
இளையோர்க்கிங்கு கல்வியை வழங்கும்
மார்தட்டிச் செல்வோம் மாண்புறு பூமி
மலை மேலிட்ட தீபமாய் மிளிரும்

அமெரிக்க மிசனது தமிழ்கல(வன்) பள்ளி
எடுத்தோர் விழாவும் ஏற்பட வேண்டும்
அடுத்தோர் நூறும் கண்டிட வேண்டும்
அகிலம் போற்ற வாழிய வாழி!

**வடகோவை வரதராஜன்,**
**ஏழாலை வடக்கு.**






ஒளிவிழா





புதிய கட்டடப் பால் பொங்கு நிகழ்வு

## பூக்கள்



சின்னச் சின்னப் பூக்கள்
சிறந்த நல்ல பூக்கள்
வண்ண வண்ண பூக்கள்
வாசம் வீசும் பூக்கள்

கண்ணைகவரும் பூக்கள்
பட்டுப்போன்ற பூக்கள்
காற்றில் அசையும் பூக்கள்
கொடிகொடியாய் பூக்கள்

மனங்களை கவரும் பூக்கள்
கடவுள் விரும்பும் பூக்கள்
எதிர்த்த காற்றையும் ஏற்று நிற்கும் பூக்கள்
விடியலை காக்கும் பூக்கள்

காலையில் மலரும் பூக்கள்
பக்குவமாய் மிதந்து செல்லும் பூக்கள்
காலமெல்லாம் பூத்திருக்கும் பூக்கள்
என்றும் மனிதர் மனங்களில் இடம்பிடிக்கும் பூக்கள்

**ச.சிவசங்கர்,**
**தரம் 2.**

# *Sri Lanka*

Sri lanka is our country It is a beautiful island in the indian ocean . Some times it is called the Pearl of Indian ocean. The capital of Srilanka is Sri Jeyawardenapura Kotte colombo is its business centre. Srilanka has a population of more than eight million people.

***S.Kajenthini, Grade 5.***

**மிகக்கடினமானது**

இரகசியம் காப்பது
இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது
ஓய்வை உயர்வழியில் பயன்படுத்துவது
மெதுவாகப்பேசு அது உன் இரகசியங்களை பாதுகாக்கும்
நல்ல நண்பனை தேடு அது உன் நடத்தையை பாதுகாக்கும்

# யாரும் கவனிப்பார் அற்றுக் கிடக்கும் வானொலிப் பெட்டியின் சுயசரிதை




எனது வீட்டிலுள்ள பழைய பொருட்கள் வைத்த அறையை திறந்த போது ஒருமூலையிலிருந்து அழுகுரல் கேட்டது. உடனே அத்திசை நோக்கி பார்த்தபோது உடைந்து நொருங்கிய வானொலிபெட்டி அழுது கொண்டே என்னை வருமாறு அழைத்தது. நான் அதன் அருகேசென்று தூசுதட்டி எடுத்தபோது தனது கதையை கூறத்தொடங்கியது.

நான் இற்றைக்கு 20 வருடங்களுக்கு முன் பல பாகங்கள் கொண்டு யப்பானில் உருவாகினேன். என்னைப் போல மேலும் நூறுபேருடன் இலங்கைக்கான விமானத்தில் ஏற்றப்பட்டோம். பின்னர் யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலம் ஏற்றப்பட்டு பிரபல்யமான யாழ்நகர் கடை ஒன்றின் கண்ணாடிப்பெட்டிக்குள் அழகாக அடுக்கப்பட்டோம். எனது அழகில தரத்தில் கவரப்பெற்ற உனது தந்தை சொன்ன பணம் கொடுத்து கடைக் காரரிடம் என்னை வாங்கி வீட்டிற்கு கொண்டுவந்தார்.வீட்டிலிருந்த உனது தாய், பாட்டி, பாட்டன், அண்ணன் எல்லோரும் எனது சத்தத்தையும் அழகையும் கண்டு ஆனந்தப்பட்டார்கள். உனது வீட்டிற்கு வருவோர் போவோர் யாவரும் பாடல்கள் கதைகள் செய்திகள் நாடகங்கள் எல்லாவற்றையும் கேட்டு ரசிப்பார்கள் நானும் எனது சேவையை அவர்களுக்கு வழங்குகினேன் என எண்ணி மகிழும் காலத்தில் எனக்கு இவ்வாறு துன்பம் வரும் என நினைக்கவில்லை. வெளிநாட்டிலுள்ள உனது பெரிய தந்தையார் உனது வீட்டிற்கு வரும்போது உயர்தரக தொலைக்காட்சி பெட்டி யொன்றை கொண்டுவந்து அன்பளிப்பாகக் கொடுத்தார் நான் இருந்த இடத்தில் அந்த இராட்சசன் அமர்ந்து கொண்டான்.

உங்கள் வீட்டில் உள்ளவர்களும் ஏனையோரும் இப்பொழுது அவனை சுற்றியே இருக்கிறார்கள் என்னை ஒரு மூலையில் வைத்து இனி இந்த றேடியோ தேவையில்லை பழைய மொடல் என்று ஒதுக்கிவிட்டனர் சில நேரங்களில் மட்டும் உபயோகிக்க பட்டுக் கொண்டிருந்த என்னை பக்கத்து வீட்டுப் பையன் மூலையில் கீழேகிடந்த என்னைத் தூக்க எத்தனிக்ககையில் பாரம் தாங்காது கீழே விழுந்து சுக்குநூறாகி விட்டேன். நான் முன்னால் இருந்தால் அழகில்லை எனறும் என்னால் இனி ஒரு பயனும் இல்லை என்றும் எனது எஜமான் இந்த குப்பையில் போட்டுவிட்டார். அன்று தொடக்கம் நான் இந்த மூலையில் தேடுவாரற்ற பொருளாக இருக்கிறேன் என்று அழுகை யுடன் தனது கதையை கூறியது நானும் துக்கத்துடன் அவ்விடம் விட்டு அகன்றேன்.

**ச.சுயானுஜா, தரம் 4.**


இலைக் கஞ்சி அறிமுக விழா






முதலாவது விளையாட்டுப் போட்டி-2006

# வாழிய எங்கள் அமெரிக்கன் மிஷன்



செந்தமிழ் வள்ளார் வாழ்த்திடும் பூமி
செல்வம் சிறக்கும் செம்மண்பூமி
வந்தனர் அமெரிக்கன் மார்கள் - இங்கு
வடித்தனர் கல்வித்தாயாய் உன்னை

ஏழாலையில் குடி கொண்டாய்
இடம் பெயர்ந்து சிதைவுற்றாய்
இடர்களின் மத்தியிலும் இன்றுவரை
எம்முடனே வாழ்கின்றாய்

கல்விச் செல்வத்தை சிறுவர்களிற் களித்தாய்
கலை மானிடனாய் வாழவைத்தாய்
பள்ளிப்பராயத்தில் துள்ளி விளையாடிட
பண்புகள் பலவற்றை சொல்லித்தந்தாய்

சமூகம் எம்மை போற்றி வணங்கிட
சரித்திரம் பலவும் படைத்தாய் தாயே
கல்விக்கு அறிவேதுணை என்று சொல்ல
கற்றனைத்தூறும் அறிவு என்னும் வாசம் கொண்டாய்

நல்ல இரு மதங்கள் நாழுமே வளர
நற்பண்பினை என்றும் வளர்க்கும் தாயே
நன்மை எனக்கு நீ செய்திட
நன்றிகள் பற்பல கூறிடுவேன்

அறிஞர்கள் பலரும் வாழ்த்திடவே
அறிவினை என்றும் ஊட்டி வளர்த்தாய்
போட்டி போட்டு வெற்றிகள் பெற்றோம்
போட்டி யின்றி வகுப்பறையில் கற்கவும் செய்தாய்

வளமுடன் நீ வாழவே நான் வாழ்த்திடுவேன்
நீ வாழும் காலமெல்லாம்
வளர்ந்து நின் புகழ் அவனியில் பரப்ப
வாழ்த்திடுவேன் வாழ்க அமெரிக்கன் மிசனே!

**நீ. தேனுஜன்,**
**தரம்-4.**

# காச நோய் என்றால் என்ன?

- மைக்கோ பக்ரீரியம் (Mycobacterium Tuberculosis) பக்ரீரியாவினால் ஏற்படும் தொற்றுநோய்
- இது ஒரு பரம்பரை நோயல்ல
- Tuberculosis (TB) எ-ம். இந் நோய் காற்றின் மூலம் பரவுகின்றது
- சுவாசத்தின் மூலம் தொற்றும் இந் நோய்க்கிருமி பெரும்பாலும் சுவாசப்பையில் நோயை ஏற்படுத்துகிறது.
- உலகில் 1/3 பங்கினர் காசநோய்க் கிருமித் தொற்றுக்கு ஆளாகியுள்ளனர்.
- காசநோய்க் கிருமித் தொற்றுக்குள்ளான அனைவருக்கும் காசநோய் ஏற்படுவது இல்லை.
- ஒருவரது நோயெதிர்ப்பு சக்தி குறைவடையும் சந்தர்ப்பத்திலேயே அனைவருக்கும் காசநோய் ஏற்படுகிறது.

## காசநோயின் அறிகுறிகள்

- தொடர்ச்சியாக 3 வாரங்களுக்கு மேலான இருமல்
- இரவு நேரக் காய்ச்சல்
- சளியுடன் இரத்தம் வெளியேறல்
- உடல் நிறை குறைவடைதல்
- உணவில் விருப்பமின்மை
- இரவு நேரத்தில் வியர்த்தல்
- களைப்பாகக் காணப்படல்
- நிணநீர் கணுக்கள் வீங்குதல். நெஞ்சுவலி போன்ற நோயறிகுறிகளும் காணப்படும்.

## காச நோயினால் பாதிக்கப்படும் அங்கங்கள்

1. நுரையீரல் 80%
2. ஏனைய அங்கங்கள் 20%
   - நுரையீரல் சுற்றுச்சவ்வு
   - மூளை
   - சிறுநீரகம்
   - சூலகக்கான்
   - குடல்விதை
   - கழுத்து நிணநீர்கணு
   - இதயச் சுற்றுச் சவ்வு
   - என்பு தோல்
   - கண்மார்பு

## காசநோய் பரவும் விதம்

காசநோயால் பாதிக்கப்பட்டவர் சிகிச்சை பெறாது உள்ளபோது இருமும்போதும் தும்மும்போதும் கதைக்கும் போதும் எச்சில் சளியினைத்துப்பும் போதும் கிருமிகள் காற்றினை அடைகின்றது.

- ஒருவருக்கு நோய் தொற்றுவது அவர் காச நோய்க் கிருமிகள் உள்ள காற்றினை எவ்வளவு நேரம் சுவாசிக்கிறார் என்பதிலும் காச நோய்கிருமிகளின் செறிவிலும் தங்கி உள்ளது.
- எனவே காற்றோட்டமான சூரிய ஒளி உள்ள இடத்தில் வாழ்வதால் காசநேய்க் கிருமிகள் தொற்றும் வாய்ப்புக்குறைவு

## காசநோய்க் கிருமி பரவாது பாதுகாக்க

- நோயாளி இருமும்போதும் தும்மும்போதும் கைக்குட்டையால் முகத்தை மூடிக்கொள்ளவேண்டும்
- கண்ட கண்ட இடங்களில் துப்பக்கூடாது. நோயாளியின் சளியினை புதைக்க வேண்டும் அல்லது எரிக்கவேண்டும்.
- நோயாளி ஆரம்பத்திலேயே இனங்காணப்படடு பூரணமாக உரிய சிகிச்சை பெறவேண்டும்.
- நோயாளியுடன் நெருங்கிய தொடர்புடைய அனைவரும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்.
- போசாக்கினை நல்ல நிலையில் பேணுவதுடன் உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.
- குளிரூட்டப்பட்ட இடங்களில் காசநோய்க்கிருமிகள் அதிகநேரம் உயிர்வாழும்.

எனவே, அவ்விடங்களிலும் சனக்கூட்டம் அதிகமாக உள்ள இடங்களிலும் அதிகமாக நிற்பதைத் தவிர்க்க வேண்டும்.

## காசநோயினால் பாதிக்கப்படக் கூடியவர்கள்

- காச நோயாளிகளுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள்
- போசாக்கு குறைபாடு உடையோர்
- நெருங்கிய இடங்களில் வாழ்பவர்கள்
- காற்றோட்டம் சூரிய ஒளி குறைந்த இடங்களில் வாழ்பவர்கள்
- எயிட்ஸ் நோய் சலரோகம் புற்று நோயுடையோர்
- மதுபானம் போதைப்பொருள் பாவிப்போர்
- புகைப்பிடிப்பவர்கள்

## காச நோய்க்கான சிகிச்சை

### சிகிச்சை அளிப்பதன் நோக்கங்கள்

- காச நோயாளியைப் பூரணமாகக் குணமாக்குதல்
- காச நோயாளியை இறப்பில் இருந்து பின்விளைவுகளிலிருந்தும் பாதுகாத்தல்
- சமூகத்திற்கு நோய் பரவுவதைத் தடுத்தல்
- காச நோயக் கிருமிகள் மருந்துக்கு எதிர்ப்புத் தன்மை பெறுவதைத் தடுத்தல்

இவை குறுகிய காலத்துக்கு (பொதுவாக 6 மாதங்களுக்கு) ஒழுங்காக பூரணமாக மருந்தை உட்கொள்ளச் செய்வதன் மூலம் அடையப்படுகிறது.

இலங்கையில் எல்லாப் பாகங்களிலும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் மார்புநோய் சிகிச்சை நிலையங்களிலும் காச நோய்க்கான சிகிச்சை இலவசமாக வழங்கப்படுகின்றது.

## காச நோயும் கர்ப்பிணித் தாய்மாரும்

- ⇨ கற்பிணித் தாய்மாராக இருந்தாலும் காசநோய்க்கான மருந்தினை நோய் ஏற்படின் எடுக்கவேண்டும்
- ⇨ பாலூட்டும் தாய்மாரும் நோய் ஏற்படின் காச நோய்க்கான மருந்தை எடுப்பதுடன் குழந்தைகளுக்கு தொடர்ந்து தாய்ப்பாலூட்டல் அவசியம்

## மருந்துகளை ஒழுங்காக எடுக்காதவிடத்து ஏற்படும் பாதிப்புக்கள்

- ⇨ சரியான அளவு மருந்துகளை உரிய காலத்திற்கு உபயோகிக்காது விடுமிடத்து மருந்திற்கு எதிர்புத்தன்மை உடைய காசநோய்க்கிருமிகள் உருவாகும்.
- ⇨ இதனால் தனது குடும்பத்தினருக்கும் அயலவர்கள் நண்பர்களிற்கும் நோய்த் தொற்றை ஏற்படுத்துவார்.
- ⇨ மருந்துகளை சரிவரப் பாவிக்காதவர்கள் 50% மானோர் 5 வருடங்களிற்குள் இறந்துவிடுகிறார்கள்.
- ⇨ இடைநடுவே சிகிச்சையினைக் கைவிடுபவர்களுக்கு மிகவும் சிகிச்சையினை ஆரம்பித்தல் பொருளாதார ரீதியிலும் உளரீதியிலும் சுமையாக அமையும்.

## காச நோய் தொடர்பான சமூகவடு

- ⇨ நோய் பற்றி அறியாமையே சமூக வடுவிற்கான பிரதான காரணம்
- ⇨ காச நோயினை முற்றாகக் குணப்படுத்தலாம்.
- ⇨ காச நோய் ஒரு பரம்பரை நோயல்ல என்பதை அறிதல்வேண்டும்.
- ⇨ மருந்துகள் எடுப்பதால் நோய் தொற்றும் தன்மை இரண்டு கிழமைகளில முற்றாக இல்லாது போகும்.
- ⇨ தொடர்ச்சியாக 3 கிழமைகளிற்கு மேல் இருமல் இருப்போர் சளிப் பரிசோதனைக்கு முன்வரவேண்டும்.

## BCG தடுப்பு மருந்து ஏற்றல்

- ⇨ BCG தடுப்பு மருந்து குழந்தை பிறந்து 24 மணிநேரத்தினுள் சுகதேகியாகக் காணப்படுமிடத்து ஏற்படுகின்றது
- ⇨ காசநோய் ஏற்படுவதை இது முற்றாக தடைசெய்யாது.
- ⇨ இது 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளில் மூளைக்காசம், மில்லியறி காசம் போன்ற காச நோயின் ஆபத்தான நிலைகளிலிருந்து பாதுகாக்கின்றது.

- BCG போடப்படும் இடது கையின் மேற்புறத்தில் 6 மாதத்தில் அடையாளம் வராவிடின் மீளவும் தடுப்பு மருந்து ஏற்றல் அவசியம்

## காச நோயும் எயிட்ஸ் நோயும்

- எயிட்ஸ் நோயாளிகளில் 50% மானோர் காசநோய்த் தொற்றாலேயே இறக்கின்றனர்.
- காச நோயாளிகளுக்கு எயிட்ஸ்நோய் வரும் சாத்தியம் இல்லை. ஆனால், எயிட்ஸ் நோயாளிக்கு காசநோய் வரும் சாத்தியம் அதிகம் உண்டு. எனவே காசநோயாளிகளை எயிட்ஸ் நோய்ப் பரிசோதனைக்கு உட்படுத்தல் அவசியம்.
- காசநோயாளிக்கு எயிட்ஸ் நோய் காணப்படும்போது முதலில் காசநோயிற்கே சிகிச்சை அளிக்க முன்னுரிமை அளிக்கப்படும்.

## காசநோயும் போசாக்கும்

- போசாக்கும் காசநோயும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை போசாக்கு குறைபாடு உடையோரில் காசநோய் இலகுவாகத் தொற்றிக்கொள்ளும். காசநோய் ஏற்பட்டோரில் போசாக்கு குறைபாடு ஏற்படும்.
- புரதக்கலோரிக் குறைபாட்டால் காசநோய் ஏற்படலாம். BMI 20 ஐ விடக் குறைந்தால் காசநோய் தொற்றுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.
- நுண்போசனைக் குறைபாட்டால் அதாவது விற்றமின் A,C,D மற்றும் zn. selenium குறைபாட்டாலும் காசநோய் ஏற்படும்.

# சலரோகம்

### அதிகரித்து வரும் காரணம்

- உணவுமுறை
- உடற்பயிற்சியின்மை
- வயதானவர்களின் எண்ணிக்கை
- எமது உடற் சுகம் பற்றி சிந்திக்க நேரம் ஒதுக்காமை
- மனதிற்கு அமைதியும் ஓய்வும் போதாமை
- கூடியளவு நோயாளர்கள் இனங்காணப்படுதல்

## சலரோகம் வருவதற்கான காரணம்

கருவிலே - குழந்தைப்பருவம் - மாணவர்கள் - இளைஞர்கள்

- நிறை அதிகரிப்பு
- இரத்தக் கொழுப்பில் அளவில் ஏற்படும் மாற்றம்
- குருதியமுக்கம் அதிகரிப்பு
- பரம்பரை சம்பந்தமான தாக்கங்கள்
- இன்சுலின் தொழிற்பாடு குறைவடைதல்.
- குளுக்கோசின் அளவில் ஏற்படும் ஆரம்பத் தளும்பல்

⇨HDL கொலஸ்ரோல் குறைவடைதல்
⇨இன்சுலினின் அளவு அதிகரித்தல்
⇨இன்சுலின் சுரக்கும் கலங்கள் அழிவடைதல்

## சலரோகத்தின் 3 நிலை

⇨ இன்சுலின் தொழிற்பாடு குறைவடைதல்
⇨ குளுக்கோஸ் தளம்பல்
⇨ சலரோகம்

## தடுப்பு முறைகள்

⇨ சலரோகம் ஏற்படுவதைத் தூண்டும் காரணிகளை தவிர்த்தல்.
⇨ சலரோகம் ஏற்பட்ட நிலையில் இதனைக் கண்டறிந்து
⇨ தகுந்த நடவடிக்கை எடுத்து சலரோகம் ஏற்படுவதைத் தடுத்தல் or தாமதித்தல். சலரோக நோயாளர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து அதனால் ஏற்படும் தாக்கத்தைத் தடுத்தல் or குறைத்தல்.
⇨ சலரோக நோயினால் அதிகம் பாதிப்படைந்த நிலை மேலும் ஏற்படாது தடுத்தல்

## சலரோகம் ஏற்படுதைத் தூண்டும் காரணிகளைத் தடுத்தல்

1. கருத்தரித்தல் காலத்தின் போதிய உணவு ஓய்வு பிள்ளைகள் நிறைகுறைந்து பிறப்பதைத் தடுத்தல்.
2. குழந்தைகளுக்கு உணவு முறை சம்பந்தமாகவும் உடற்பயிற்சி சம்பந்தமாகவும் ஒரு பூரண அறிவைப் புகட்டல்.
3. மாணவர்கள் சரியான பாதைமுறையில் பயிற்றுவித்தல்.
4. இளைஞர்களுக்கு உடல்நிலைப் பராமரிப்பிலும் உடற்பயிற்சியிலும் ஆர்வத்தை ஏற்படுத்தல்.
5. பெற்றோர் ஆசிரியர் பங்கு முக்கியமானது.

## சலரோகம் முற்றிய நிலையில் இதனைக் கண்டறிந்து தகுந்த நடவடிக்கை எடுத்து சலரோகம் ஏற்படுவதைத் தடுத்தல் அல்லது தாமதித்தல்

⇨ இன்சுலின் சம்மந்தமான பரிசோதனைகள்
⇨ Metolin symptom [HDL குறைவு Vit கூட BP கூட Blood suger கூட
⇨ சலரோகத்திற்கான இரத்தப் பரிசோதனைகள்
⇨ தகுந்த நடவடிக்கை மூலம் நிரிழிவு நோய் ஏற்படுவதை தடுக்கலாம் அல்லது தாமதிக்கலாம்.

## சலரோக நோய்க்கான அறிகுறிகள்

⇨ எந்த அறிகுறியும் அற்றநிலை பரிசோதனை முறைமூலமே அறியலாம்.
⇨ அதிகரித்த தாகம்
⇨ சிறுநீர் அடிக்கடி கழித்தல்

⇨ களைப்பு
⇨ அடிக்கடி கிருமித் தொற்றுகைக்கு உள்ளாக்குதல்

**உணவு முறை**

⇨ சீனி or இனிப்பு வகைகளைத் தவிர்த்தல்
⇨ நார்த்தன்னமயுடன் கூடியமாப்பொருள் or தானியங்களை அதிகம் சேர்த்தல்.
⇨ கொழுப்பு எண்ணெய் குறைத்தல் தேங்காய்ப் பாவனையைக் குறைத்தல்
⇨ கொழுப்பு நீக்கிய பால்
⇨ பழவகைகள் (பப்பாசி) மரக்கறிகள் Vit நிறைந்தது.
⇨ உப்பைக் குறைத்தல்

**உடற்பயிற்சி செய்யும்போது**

⇨ உடல்உறுப்புத் தாக்கம் பெறுகிறது
⇨ எங்கள் வாழ்நாள் அதிகரிக்கிறது.
⇨ மனதிற்கு அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகிறது.
⇨ பலவேறுபட்ட நோய்களிலிருந்து எங்களிற்கு பாதுகாப்புக் கிடைக்கின்றது.
⇨ இன்சுலின் தொழிற்பாடு அதிகரிக்கிறது.
⇨ குளுக்கோசின் அளவு குறைகிறது.
⇨ உடல்நிறை கட்டுப்பாட்டில் இருக்கும்.

**நீங்கள் அவசியமாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியவை**

⇨ புகைத்தல் கூடாது
⇨ கண்களில் தாக்கம்
⇨ சிறுநீர் புரதம் வெளியேறுகிறது
⇨ கால் நரம்புகளிலும் குருதிக் குழாய்களிலும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
⇨ இருதயத்தில் இரத்தக்குழாய்களில் தாக்கம் ஏற்பட்டிருக்கலாம்.
⇨ கொழுப்பு அளவில் கட்டுப்பாட்டில் இருக்கிறதா B.P 130/80ஐ விடக் குறைவாக இருத்தல்
⇨ குருதியில் குளுக்கோஸ் அளவு கட்டுப்பாட்டில் இருக்கிறதா

**சலரோகம் கட்டுப்பாட்டில் இருக்கின்றதா என அறிவதற்கு**

⇨ FBS or PPBS பரிசோதனை
⇨ B P 130/80 2 விட குறைவாக இருத்தல்
⇨ கொழுப்புக்கு உரிய பரிசோதனை
⇨ நிறை BMI 25 ஐவிட குறைவாக இருத்தல்
⇨ சலரோக நிலைகளின் கட்டுப்பாட்டுநிலை

**Dr.P. Sivagnanasuntharm, (DAM.RMP)**
Gnana Earlalai Vinayagar Dispensary.

## என் அம்மா





அம்மா அம்மா அம்மா
அன்பான அம்மா
என்னை ஈன்ற அம்மா
எனக்கு நல்ல அம்மா

கண்ணைப் போல நாளும்
காத்து வரும் அம்மா
கொஞ்சிக் கொஞ்சிப் பேசிக்
குலாவி மகிழும் அம்மா

பாடம் சொல்லித் தருவார்
பட்சணங்கள் தருவார்
அம்மா அம்மா அம்மா – என்
அன்பான அம்மா

அன்னையெனும் மூன்றெழுத்தாக
வந்துதித்த தெய்வமே
கண்ணின் இமைபோல காத்தாயே
ஆராரோ பாடி எம்மை துயில வைத்தாயே

தாலாட்டி பாலூட்டும் எம்மை வளர்த்து
பள்ளிப் பருவம் வரும் வரை எம்மை காத்து
பள்ளி செல்லும் வயதில் எம்மைப் பக்குவமாய்
பள்ளி செல்ல வைத்தாயே
கல்வியிலும் விளையாட்டிலும் முதலிடம்
பெற்றபோதே துள்ளிக் குதித்தாயே
எனக்கு ஆறுதல் கூற ஆசையூட்டி
என்னை படிக்க வைத்த அன்னையே

அபிதா, தரம் 02

## பாடசாலை



கல்வி எனும் பொக்கிசத்தை
தினந்தோறும் சொல்லித்தந்து
நலம் பல பெறுவதற்கு
நல்குகின்றது எங்கள் பாடசாலை

கலைகள் பலவற்றை நாமறிந்து
காலையிலே உற்சாகத்துடன் சென்று
மாண்புமிக கல்வியை இனிதே பெற
பண்புடனே திகழும் நற்பாடசாலை

சு.பிரதீபா,
தரம் - 5

ஒளிவிழாவும் ஆசிரியர் தின விழாவும்









# சக்தி தீய்தல் ( Brun out)

சக்தி தீய்தல் என்பது தொடர்பான அறிவியல் இன்றைய காலகட்டத்தில் மிகவும் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. மாணவர்கள் ஆசிரியர்கள் உட்பட அனைத்துத் துறை சார்ந்தவர்களும் சக்தி தீய்தல் நிலைக்கு உட்படலாம் அல்லது உட்படுத்தப் படலாம். சக்தி தீய்தல் என்றால் என்ன என்பதற்குப் பல அறிஞர்கள் பல்வேறு வித மாக வரைவிலக்கணம் செய்துள்ளார்கள். இவ் வரைவிலக்கணங்கள் எல்லாவற்றினதும் அடிப்படைத் தொனிப்பொருள் ஆழந்த சக்திக் குறைபாடேயாகும். இவ்வாழ்ந்த சக்திக்குறைபாட்டிற்கான அடிப்படைகளாக கோபம், விரக்தி,தோல்வி, போன்ற உணர்வுகள் அல்லது நிலைமைகள் இதற்கான அடிப்படைக் காரணிகளாகக் காணப்படலாம்.

*உங்கள் உள சக்தி தேய்கிறதா? கடந்த ஆறுமாதத்தில் உங்கள் வாழ்வைப் பாருங்கள் (வேலைத் தலத்திலும் வீட்டிலும்) பின்னர் கீழே உள்ள வசனங்களை வாசித்துப் புள்ளியிட்டுக் கொள்ளுங்கள்*

1. *மிகவும் அருமையாக*
2. *சிலவேளைகளில்*
3. *அடிக்கடி உள்ளது*
4. *எப்போதும் ஏற்படுகின்றது.*

1. *போதிய நித்திரை கொண்டபோதும் களைப்பாக இருக்கிறது.*
2. *திருப்தியற்ற நிலையை உணருகின்றேன்.*
3. *எந்தக் காரணமும் இல்லாமலே கவலையாக இருக்கிறேன்*
4. *விடயங்களை மறந்து போகிறேன்.*
5. *எரிச்சலூட்டப்படுகிறேன்*
6. *ஒதுங்கிப் போகிறேன்*
7. *நித்திரைக் குழப்பம் இருக்கின்றது.*
8. *உடல் வருத்தம் வருகின்றது.*
9. *"ஏன் கஷ்டப்படுவான்?" என்ற மனப்பாங்கு இருக்கின்றது.*
10. *மற்றவர்களுடன் பிரச்சினைப்பட்டுக்கொள்கிறேன்.*
11. *எனது வேலை தொடர்பாக வினைத்திறன் அதிகமாக இல்லை.*
12. *மது.்.போதைப் பொருள் பாவிக்கிறேன்.*
13. *மற்றவர்களோடு தொடர்புகொள்வது கஷ்டமாக இருக்கிறது.*
14. *முன்னரைப்போல் விடயங்களில் கவனம் செலுத்த முடியாதுள்ளது.*
15. *இலகுவில் களைப்படைகிறேன்.*
16. *கடுமையாக வேலை செய்தாலும் பயன்குறைவாக உள்ளது.*

*17. விரக்தியாக உணருகின்றேன்.*

*18. வேலைக்குப் போக விருப்பமில்லை*

*19. சமூகப் செயற்பாடுகளில் ஈடுபாடு இல்லை.*

*20. பாலியல் நாட்டம் குறைவாக இருக்கின்றது.*

*புள்ளியும் நிலையும்*

*20-40 : நன்றாக இருக்கிறீர்கள்*

*41-60 : உங்களைக் கவனித்துக் கொள்கிறீர்கள் ஆயின் சரி.*

*61-80 : சக்தி தீய்தலை நோக்கிப் போகின்றீர்கள்.*

*81-100: சக்தி தீய்வுக்கு உட்பட்டுள்ளீர்கள்.*

சீர்மியர்கள் நெருக்கீட்டுக்கு உட்படுதல் என்பது மிகவும் பொதுவான ஒரு பிரச்சினையாகும். இதன் காரணமாகச் சீர்மியரின் வேலைச் சுமையைக் குறைக்கும் நோக்குடனும் சக்தியூட்டும் நோக்குடனும் மேற்பார்வைகள் ஒழுங்கமைக்கப்படுகின்றன.

நெருக்கீடுகள் தொடர்ச்சியாக ஏற்படுகின்றபோது அதன் தாக்கம் உடலியல் சார்ந்த நோய் நிலையாகவோ அல்லது வேலையைத் தவிர்த்தலாகவோ வெளிப்படலாம். மேலும் இந்தநிலை ஒருவரின் தனிப்பட்டதும் தொழில் சார்ந்ததுமான வினைத்திறனையும் பாதிக்கக்கூடும்.

ஒருவரது உளசக்தி தீய்ந்து போகின்ற நிலமைக்கான அறிகுறிகள் உணர்வுக்குறைவு, உதவியற்ற நிலையை உணர்தல் போன்ற உளம்சார் வெளிப்பாடுகளாகவோ, தலையிடி,முதுகுவலி, உயர் குருதி அமுக்கம், களைப்பு, தொடருகின்ற தடிமன், போன்ற உடல்சார் வெளிப்பாடுகளாகவோ அல்லது வேலைகளைப் புறக்கணித்தல், அதிகளவு லீவு எடுத்தல், சமூகத்தில் இருந்து தனிமைப்பட்டிருத்தல், பதவிஉயர்வு பெற முனைதல், வேலையில் வினைத்திறன் குறைதல் போன்ற நடத்தைசார் வெளிப்பாடுகளாகவோ தோன்றலாம். "நான் இதற்கு முன்னரும் அதிகப் படியான நெருக்கீடுகளைச் சமாளித்துள்ளேன். " இதுவும் அதேபோன்ற மற்றொரு நிலைதான்" எனவே இவ்வாறாகத் தோன்றுகின்ற எண்ணங்கள் கூட சக்தி தீய்ந்து வரும் நிலையினைக் காட்டுகின்ற அறிகுறிகள் ஆகலாம்.

நேரான பார்வையுடன் உற்சாகமாகத் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும் ஒருவரை இவ்வாறான சக்தி தீய்தல் நிலை மாற்றியமைத்து விடுகின்றது நெருக்கீடுகளைத் தாங்கிக் கொள்ளுகின்ற உளத்தாங்குதிறனின் அளவு நபருக்கு நபர் வேறுபட்டுக் காணப்படும். ஒருவருக்குப் பாதகமான விளைவைத் தரும் நெருக்கீட்டுச் சம்பவம் இன்னொருவருக்கு நேரான சவாலாக அமையலாம். ஒப்பீட்டு அடிப்படையில் இடையிடையே வந்துபோகும் நெருக்கீடுகள் தொடர்ந்து நிலைத்திருக்கும் நெருக்கீடுகளை விட பாதிப்புக் குறைந்தவை.

ஒருவருக்குச் சக்தி தீய்தல் ஏற்படுவதற்குத் தொடர்ந்து வருகின்ற வேலைப்பழுவும் அவரோடு இணைந்து வேலை செய்வோருடனான நீண்டகால முரண்பாடுகளும் முக்கிய காரணிகள் ஆகின்றன. மேலும் மனிதர்களுக்கிடையே வேறுபாடு காட்டப்படுதல், கட்டுப்பாடு, ஒழுங்கு என்பன குலைந்திருத்தல், அல்லது இல்லாதிருத்தல் போன்றவையும் சக்தி தீய்தல் ஏற்படுவதனைத் தூண்டுகின்றன.

## சக்தி தீய்தல் நிலமையினைக் கையாள்தல்/சமாளித்தல்

ஒருவர் தாம் மதிக்கின்ற விழுமியங்களை அதிகளவில் கொண்டிருக்கின்ற நிறுவனங்களில் வேலை செய்யும்போது அதிகளவு வேலைப்பழுவையும் சமாளிக்கக் கூடியவர்களாக இருப்பர். பொதுவாக நெருக்கீட்டைக் கையாள்வதற்குத் தன்னை தயார்ப்படுத்தக்கூடியவர்கள் சக்தி தீய்தலையும் கையாளக் கூடியவர்களாக இருப்பார்கள்.

ஒருவர் நிறுவனங்களினால், அல்லது நிலமைகளினால், அல்லது தனி நபர்களினால் ஏற்படுத்தப் படுகின்ற நெருக்கீடுகளையும், அதனால் ஏற்படுகின்ற சக்தி தீய்தல் நிலமைகளையும் கையாளக்கூடிய திறன்களைப் பெற்றிருப்பது சிறந்தது. சக்தி தீய்தல் நிலமையினைக்கையாள வேண்டுமாயின் தமக்கு ஏற்படுகின்ற அழுத்தங்கள், நெருக்கீடுகள் தொடர்பாக எப்போதும் கவனத்தில் இருப்பதோடு அவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கு ஏற்ற நடவடிக்கைகளிலும் ஈடுபடுவது சிறந்தது.

## சக்தி தீய்தலைக் கையாளும் வழிமுறைகள்.

சக்தி தீய்தலினைக் கையாளுகின்ற வழிமுறையினை மூன்று பெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம் அவை.

1. தனி மனித மாற்ற வழிமுறை
2. வேலை அல்லது சேவை தொடர்பான மாற்றங்கள்
3. நிறுவனம் தொடர்பான மாற்றங்கள்

என்பன அவையாகும்.

தனிமனித மாற்ற வழிமுறைகள்

அ) உடற்பயிற்சியினை ஒழுங்காகச் செய்தல்

ஆ) குடும்ப, சமூக உறவுகளை வளர்த்தும் பேணிக்கொள்ளல்.

இ) தனக்கு மகிழ்வு தரும் அல்லது தான் தளர்வடையும் வேலைகளில் ஈடுபடல்.

ஈ) ரசனை அனுபவங்களைப் பெறுதல் பொருத்தமான வகையில் இயற்கை ரசனை, ஆக்கியல் ரசனை என்பவற்றில் ஈடுபடுதல்.

உ) உணவுப் பழக்கம், ஆரோக்கியப் பழக்க வழக்கம் ஆகியவற்றை முன்னேற்றுதல் போன்றன.

**2) வேலை தொடர்பான மாற்றங்கள்**

அ) தமது வேலை நேரத்தை உச்ச வினைத்திறனுடன் பயன்படுத்தப் பழகுதல்.

ஆ) யதார்த்த பூர்வமான எதிர்பார்ப்புகளைக் கொண்டிருத்தல்.

இ) வேலைப் பொறுப்புக்களின் எல்லைகளைத் தெளிவாக அறிந்திருத்தல்.

ஈ) தமது சக்தியின் (இயலுமையின்) எல்லைகளை அறிந்திருத்தல.

உ) தொடர் கல்வி மூலம் தமது திறன்களையும் அறிவையும் வளர்த்துக் கொள்ளல்.

ஊ) அடையத்தக்க தனிப்பட்ட இலக்குகளை நிர்ணயம் செய்து முன்னேறுதல்.

எ) ஒழுங்கான மேற்பார்வைக்கு உட்படுதல்.

ஏ) தனது தனிப்பட்ட வாழ்வுக்கும் வேலைக்கும் இடையில் ஒரு சமநிலையினை ஏற்படுத்திக் கொள்ளல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**3) நிறுவனம் தொடர்பான மாற்றங்கள்**

அ) எல்லை மீறிய பொறுப்புக்கள், சுமைகளைக் குறைத்தல்.

ஆ) வேலை செய்யும் சூழலிலன் கவிவு நிலையை உயர்த்துதல்.

இ) நிர்வாக நடைமுறைகள் ஜனநாயக ரீதியாக இருப்பதற்குப் பாடுபடுதல்.

ஈ) சகபாடிகளின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளல்.

உ) தொடர் பயிற்சிகளுக்குச் செல்லுதல்.

ஊ) கூட வேலை செய்யும் எல்லோருக்கும் தெளிவான வேலைப் பகிர்வு இருப்பதை உறுதி செய்தல் போன்றன.

எனவே ஒருவர் தனது தொழில் மட்டத்தினை அவதானித்துச் செயற்படுவாராயின் தனது சகத்திமட்டத்தினைத் தீய்ந்து போகாது பார்த்துக்கொள்ளமுடியும். தன்னை அறிவதும், தனது செயற்பாட்டினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துகின்ற திறன்களை வளர்ப்பதும், போதுமான அறிவைத் தொடர்ந்து வளர்ப்பதும் உயர்ந்தமனப் பாங்கோடு அறிவையும் திறனையும் செம்மையாகப் பயன்படுத்துவதும் போன்ற செயற்பாடுகளின் ஊடாக ஒருவர் உயர் சக்தியோடு தொடர்ந்து செயற்படமுடியும்.

**திரு.ச. கிருபானந்தன்.**
**உளவளத் துணையாளர், யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி.**

**மிகக்கடினமானது**

**இரகசியத்தைக் காப்பது**
**இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது**
**ஓய்வுநேரத்தை உயர்ந்த வழியில் பயன்படுத்துவது**

**- ஜே.பி.பால்மர்**










கட்டடத் திறப்பு விழா 2006

# பழமொழிகள்



01. அநாதையிற்கு ஆண்டவன் துணை
02. செட்டிக் கப்பலிற்கு தெய்வம் துணை
03. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
04. ஆனைக்கும் அடி சறுக்கும்
05. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
06. ஆறிலும் சாவு நூறிலும் சாவு
07. காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்
08. சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது
09. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா
10. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
11. தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும்
12. இரக்கப் போனாலும் சிறக்கப் போ
13. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
14. குப்பையில் போட்டாலும் குண்டுமணி மங்காது
15. ஏட்டுச் சுரக்காய் கறிக்குதவாது
16. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு
17. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா
18. காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
19. எய்தவன் இருக்க அம்பை நோவதேன்
20. கழுதை அறியுமா கற்பூர வாசனை
21. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு

**சி. ராதிகா**

# கல்வியின் சிறப்பு



உலகில் மனிதர்களாலே தேடக்கூடியதாக இருப்பது கல்விப் பொருள் செல்வப் பொருள் ஆகிய இரண்டுவகைப் பொருளாகும். இவற்றில் சிறந்தது கல்விப் பொருளே யாகும்.

கல்விப் பொருள் நீர் நெருப்பால் அழியாதது
திருடப்பட முடியாதது கொடுக்குந்தோறும் வளர்ந்த வண்ணமே இருக்கும்
செல்வப் பொருளே திருடர்களால் களவாடப்படக் கூடியது
பிறருக்கு கொடுக்குந் தோறும் குறைந்து கொண்டே போகும்.

அரசன் ஒருவனுக்கு அந்த நாட்டில் மட்டும் தான் சிறப்பு. ஆனால் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு. கல்வி நமக்கு பல நன்மைகளை தருகிறது.

கல்வியால் நாம் அறிவு பெருகுவதுடன் தொழில் வாய்ப்பையும் பெற்றுத் தருகிறது ஒவ்வொருவரும் கல்வியைக் கருத்துடன் குற்றமில்லாமல் கற்றல் வேண்டும் பின் கற்றபடி வாழ்க்கையில் நடக்கவேண்டும். கல்வியை கருத்துடன் இடைவிடாது கற்கும் போது அறிவு வளர்பிறைபோல் வளரும். அறிவுடையார் கண்ணால் பார்க்க முடியாத இறந்த கால நிகழ்வுகளையும் தூரதேச நிகழ்வுகளையும் பார்ப்பர்.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" ஆகையால்
அறிவைத் தரும் கல்வி கண்ணுக்கு ஒப்பிடப்படுகிறது.

உண்மையான கண்ணான கல்வியை இளமை முதல் ஒவ்வொரு நாளும் ஊக்கமுடன் பயிலவேண்டும்.

"இளமையில் கல்வி சிலையில் எழுத்து" அதாவது
சிறு பருவத்தில் கற்ற கல்வி மனதில் நன்கு பதியும்.

கல்வி கற்றால் பிற்காலத்தில் சமுதாயத்தில் நல்ல தொழில் வாய்ப்பைப் பெற்றுஅத்தொழிலைத் திருந்தச் செய்து சமுதாய உயர்ச்சிக்கு நாம் வழிவகுக்க முடியும்.

கல்வி கற்போம் சமுதாயத்தை வளர்ப்போம்.

**கே. கேஸ்டியன், தரம் 1.**

## தேனின் பயன்கள்



- தேன் ஒரு போசாக்கு நிறைந்த உணவு
- மருந்து வகைகளில் தேனிற்கு நிகர் இல்லை
- ஏறத்தாழ 313 வியாதிகளுக்கு அதில் நிவாரணம் உண்டு
- நாடி நாளங்களிலும் குடல்களிலும் உள்ள அழுக்குகளை அது அகற்றுகிறது
- சிறுநீர்ப் பாதையை சீராக்குகிறது
- நெஞ்சுச் சளியை அது நீக்குகிறது
- நாளாந்தம் வைகறையில் வெந்நீருடன் கலந்து அருந்தல் வேண்டும்
- தேனும் வெந்தயமும் சோகையைப் போக்கி இரத்தத்தை அகற்றச் செய்யும்

**செ. சஜீவன், தரம் 5.**

## விடுகதைகள்



- மழைக்காலம் வந்துவிட்டால் மகராசி பாட்டெடுப்பாள் அவள் யார்?
  **தவளை**
- கல்வீட்டுத்தாத்தா மெதுவாக நடப்பார். அவர் யார்?
  **ஆமை**
- வயல் உழுதவன் ஊதியம் வாங்கவில்லை. அவன் யார்?

**மண்புழு**

- எங்கும் நிறைந்தது கண்களுக்குத் தெரியாது. ஆனால் எமது உயிருக்கு உகந்தது. அது எது?

**காற்று**

- ஊசி போட்ட வைத்தியர் பாடிக் கொண்டே போவார். அவர் யார்?

**நுளம்பு**

- உரசினாலே உயிரைவிடுவான். அவன் யார்?

**தீக்குச்சி**

- உயிரில்லாத நீதிபதி ஒழுங்காய்த் தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?

**தராசு**

**வி. பிரணவன், தரம் 5.**

## ஒரு செல்வந்தர் குடும்பத்து பிள்ளையினால் செல்லப் பிராணியாக வளர்க்கப்பட்டுவரும் கூண்டில் அடைக்கப்பட்ட கிளி ஒன்றிற்கும் சுதந்திரமாக எங்கும் பறந்து திரியும் கிளி ஒன்றிற்கும் இடையில் இடம் பெற்ற கற்பனை உரையாடல்



செல்வந்தர் வீட்டில் உள்ள கூண்டிற்குள் வாழும் கிளியை சுதந்திரமாக பறந்து திரியும் கிளி தினமும் சந்தித்து வந்தது இவ்வாறு ஒரு நாள் சந்திக்கையில்...........

**சுத. கிளி** : நீ எவ்வாறு இந்த கூண்டிற்குள் அடைபட்டுக் கொண்டு வாழ்கின்றாய். என்னை மாதிரி நீ சுதந்திரமாகப் பறந்து திரிகிறது இல்லையா?

**செல். கிளி** : நான் பறந்து திரிகிறது குறைவு.

**சுத. கிளி** : அது இருக்கட்டும் ஆம் உனக்கு என்னென்ன சாப்பாடுகள் தருவார்கள்.

**செல். கிளி** : ஆம் எனக்கு வாழைப்பழம் போன்ற பழவகைகள் உணவுகளாக உண்பேன்.

**சுத. கிளி** : ஓ... நீ உனக்கு இவர்கள் சாப்பாடு தருவார்கள். நீ இருந்த இருக்கையில் இருந்து சாப்பிடுவாய். ஆனால் நானோ இவ் உலகம் முழுவதையும் சுற்றியே உணவு தேடி அலைந்து கிடைக் கிறதை சாப்பிடுவேன்.

**செல். கிளி** : இவர்கள் எனக்கு கதைக்க எல்லாம் சொல்லிக் கொடுத்திருக்கிறார் கள். அந்த நேரத்தில் சாப்பாடு தருவார்கள். சிறிது நேரம் என்னை வெளியே உலாவிடுகிறார்கள்.

**சுத. கிளி** : நீ பெற்ற பாக்கியம் ஒன்றும் நான் பெறவில்லை. ஆனால் எனக்கு ஒரு சுதந்திரம் என்ன என்றால் நண்பர்களுடன் சேர்ந்து இவ்வுலகம் முழுவதையும் பறந்து பார்த்து மகிழ்வது ஆகும்.

**செல். கிளி** : நான் இவ்வளவு சுதந்திரத்தையும் பெற்றுள்ளேன். ஆனால் நண்பர்களோடு சேர்ந்து பறந்து திரியும் சுதந்திரம் மட்டும் எனக்கு கிடைக்கவில்லை.

**ச.மதுசூதனன், தரம் 3.**

## பூரண நிலாப் பொழுது அன்று கடற்கரையில் கண்டகாட்சி



அன்றொரு நாள் வெள்ளிக்கிழமை அடுத்த நாள் பாடசாலை விடுமுறை தானே. அதனால் நானும் எனது தம்பியும் பிற்பகல் 5 மணி போல கடற்கரைக்கு சென்றோம். அங்கு நடக்கும் காட்சிகளையும் இரசித்துக் கொண்டிருந்தோம். மாலைவேளை சூரியன் மெல்ல மெல்ல மறையத் தொடங்கினான். "ஆடியொழிந்த பம்பரம் போல" சூரியன் மெல்ல மெல்ல மறைந்து கடலை தொடுகின்ற அளவில் நின்றது. சூரியன் கடலைத் தொட்டுக் கொண்டு மறைந்து விட்டது. இவ் அழகான காட்சியை நானும் தம்பியும் வழிமேல் விழி வைத்து பார்த்து இரசித்துக் கொண்டிருந்தோம்.

சூரியன் மறைந்ததன் பிற்பாடு நிலாவானது தனது நிலா வெளிச்சத்தைப் பரப்பிய வண்ணம் வந்தது. நானும் தம்பியும் கடற்கரை மணற்பரப்பில் இருந்தோம். அங்கும் இங்கும் எங்களைப் போல் பலபேர் கடற்கரையில் அமர்ந்திருந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு பையன் சுண்டல், வடை கொண்டு வந்தான். தம்பியும் நானும் சுண் டல் வாங்கி சாப்பிட்டோம். சில சிறுவர்கள் நிலா வெளிச்சத்தில் அங்கும் இங்குமாக ஓடி விளையாடினார்கள்.

கடலில் இந் நிலா வெளிச்சத்தில் மீன் பிடிப்படகுகளில் மீன் பிடித்து கொண்டிருந் தனர். சில கப்பலில் பயணிகள் வந்து இறங்கினர். இவ்வாறு இக்காட்சியை பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நிலாவானது உச்சியில் வந்த பின் நான் நேரத்தை பார்த்தால் இரவு 12 மணி ஆகிவிட்டது. இதனால் நானும் தம்பியும் வீடு செல்லப் புறப்பட்டோம்.

**க. கௌசல்யா, தரம் 3.**

## பாடசாலை நிகழ்வுகளின் பதிவுகள்









# சுத்தம் சுகம் தரும் என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம்



**சுத்தம் சுகம் தரும்**
**அன்றேல் தொற்று நோய் பரவும்**

**அன்பான பொது மக்களே!**

உங்களுக்கு முக்கியமானதோர் அறிவித்தலாக இதனைத் தருகிறோம். எங்கள் எழில் கொஞ்சும் நாடு காலம் காலமாக நாளுக்கு நாள் தன் எழிலை இழந்து வருகின்றது. சுத்தத்திற்கு பெயர் பெற்று விளங்கியமை பழைய கதையாகி விட்டது. சுற்றாடல் தூய்மை இழந்து அசுத்தமானதை உடனடியாக நீக்காது விடின் தொற்று நோய்கள் பரவும் எனச் சுகாதார பகுதியினர் எடுத்துக் காட்டியுள்ளனர். வீணான துன்பங்களுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்படாதிருக்க உங்கள் சுற்றாடலை தூய்மையாக வைத்திருங்கள்.

- கழிவுப் பொருட்களை வெளியே வீசாதீர்கள்.
- அவற்றை ஆழமாக வெட்டிப் புதைத்து விடுங்கள்.
- கழிவு நீரை நடை பாதைகளிலே ஓடவிடாதீர்கள்.
- தேங்கி நிற்க விடாது சுத்தமாக வைத்திருங்கள்.
- கிணற்று நீரைச் சுத்தமாக வைத்திருங்கள்.
- உணவுப் பண்டங்களை திறந்து வைக்காதீர்கள்.
- சுகாதாரப் பகுதியினரின் கழிவகற்றும் சேவைக்கு உங்கள் ஒத்துழைப்பை நல்குங்கள்.
- இறந்த பிராணிகளை உடனே புதைத்து விட ஆவன செய்யுங்கள்.
- சுருக்கமாகக் கூறின் சுற்றாடலைத் தூய்மையாக வைத்திருங்கள்.
- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
- சுத்தமே சுகம் தரும்.
- இதுவே உங்கள் பொன்னான வாழ்விடம்.

**ம. அனித்தன், தரம் 3.**

## மின் ஒழுக்கினால் ஏற்பட்ட விபத்தில் சிக்குண்ட ஒருவருக்கு எவ்வாறு முதலுதவி அளிக்க வேண்டும் என்பது பற்றிய விளக்கம்



தற்பொழுது மின் ஒழுக்கினால் ஏற்பட்ட விபத்தில் பலர் சிக்குண்டு இறக்கின்றனர். இவ்விபத்து ஏற்பட்ட நபருக்கு செய்யப்பட வேண்டிய முதலுதவி பின்வருமாறு:

- மின் ஆழியை துண்டித்தல்.
- உலர்ந்த துணியால் மின் விபத்து ஏற்பட்டவருக்கு சுற்றி சுற்றுதல்.

- மின் இணைப்பை துண்டிப்பதற்கு முன் மின் விபத்து ஏற்பட்ட நபரை தீண்டு தல் ஆகாது. ஏனெனில் அந்த மின் முதலுதவி செய்பவருக்கும் கவரும்.
- பின்செயற்கைச் சுவாசம் கொடுத்தல்
- மின்பட்ட இடத்தை உலர்ந்த பந்தத்தால் சுற்றுதல.
- இரத்தோட்டம் மூளைக்கு செல்வதற்காக காலை 40ழ கோணத்தில் வைத்தல் வேண்டும்.
- முதலுதவி அளித்த பின் மருத்துவரை அணுகுதல்வேண்டும்.

**செ. கலக்சி, தரம் 8.**

## தொலைக் காட்சி பார்ப்பதால் ஏற்படும் நன்மை, தீமைகள்



விந்தை மிகுந்த விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் நாளுக்கு நாள் புதிய பல கருவிகள் கண்டு பிடிக்கப்படுகின்றன. மக்கள் வாழ்க்கையை இன்பமயமாக்குவதற்கு அவை பெரிதும் உதவுகின்றன. வானொலி, தொலைக்காட்சி, திரைப்படம் ஆகியன விஞ்ஞானத்தின் விந்தை மிகு செயற்பாடாகும். இந்த விந்தை மிகு விஞ்ஞானத்தின் வெளிப்பாடுகளில் ஒன்றே தொலைக்காட்சி ஆகும். இந்த தொலைக் காட்சி பார்ப்பதால் பல நன்மைகளும் உண்டு. அதே நேரம் தீமைகளும் உண்டு.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நடைபெறும் செய்திகளை உடனுக்குடன் நாம் அறிவதற்கு வானொலி துணை செய்கின்றது. வானொலியிற் செய்திகளை காதால் மட்டும் கேட்க முடிகின்றது. ஆனால் தொலைக்காட்சி காதாற் கேட்டு கண்ணால் பார்த்து மகிழ உதவுகின்றது. நேருக்கு நேராக தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகளை காண்கிறோம். இந்நிகழ்ச்சிகள் நம் மனதில் ஆழமாக பதிந்து விடுகின்றது.

வீட்டில் இருந்தபடியே உலக அரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகளை நேரிற் காண்பது போலக் கண்டு மகிழ்ந்திடத் தொலைக்காட்சி நமக்கு உதவுகின்றது. தொலைக்காட்சியில் பல விதமான நிகழ்ச்சியை நாம் காண்கின்றோம். நாடகம், திரைப்படம் போன்றவற்றையும் காண்கிறோம். வகுப்பறையில் பாடம் கற்பது போன்று கல்வி ஒளிபரப்பில் பல்வேறு பாடங்களை கற்றிட முடிகின்றது. சிறந்த கல்விச் சாதனமாகவும் இது பயன்படுகின்றது. இலங்கையில் ரூபவாஹினி, சுயாதீனத் தொலைக்காட்சி நிலையங்கள் உள்ளன. இவை பயன்தரும் பல்வேறு நிகழ்ச்சிகளை தினந்தோறும் ஒளிபரப்புகின்றன. இவற்றை கேட்டும், பார்த்தும் நாம் பயன் அடைகின்றோம். இத் தொலைக்காட்சியில் அறிவியல் தொடர்பானவையும்

ஒளிபரப்புகின்றன. உலக அறிவியல் தொடர்பான விடயங்களையும் ஒளி பரப்புகின்றன. இதனால் எமக்கு அறிவியல்த் துறையிலும் முன்னேற்றம் அடைய முடிகின்றது. இதில் உலக விளையாட்டுத் துறை போன்ற விடயங்களையும் ஒளிபரப்புகின்றன. இத்தொலைக்காட்சி பார்ப்பதால் சகல துறைகளிலும் வல்லுனர்களாக முடியும்.

இன்று மக்கள் தொலைக்காட்சியின் பயன்களை நன்கு உணர்ந்துள்ளனர். இதன் காரணமாகவே வீடுதோறும் தொலைக்காட்சிகளை வாங்கி வைத்திட மக்கள் விரும்புகிறார்கள். தொலைக்காட்சியில் ஒளி பரப்பாகும் நிகழ்ச்சிகளை நல்ல முறையில் பயன்படுத்தினால் நமது வாழ்வும் இன்பமயமாகும் என்பது உறுதி. ஆனால் எந்த ஒரு பொருளை எடுத்துக் கொண்டாலும் அதில் நன்மை பல இருந்தாலும் சில தீமைகளும் இருக்கச் செய்கின்றது. அதேபோல் இந்தத் தொலைக்காட்சி பார்ப்பதால் பல நன்மைகள் இருக்கின்ற அதேவேளையில் சில தீமைகளும் இருக்கச் செய்கின்றது.

இந்தத் தொலைக்காட்சி பார்ப்பதால் தொடர்ந்தும் தொலைக்காட்சி பார்க்க வேண்டும்போல் இருப்பதால் கல்வி வீணடிக்கப்படுகின்றது. தொலைக்காட்சி பார்க்கும்போது தொலைக்காட்சியில் இருந்து வருகின்ற ஒளி கண்ணில் நேரடியாக வந்தடைகின்றது. இதனால் கண்பெரிதும் பாதிப்பு அடைகின்றது.

**இ.டிலக்சனா, தரம் 4.**

# பூந்தளிர்



குளம் முழுவதும் பூப்பூத்து
தாமரை, அல்லி அழகுடனே
வெண்ணிற, செந்நிற
பூக்கள் குளம் நிறைந்தே

முற்றத்துப் பந்தலிலே
மல்லி, முல்லை சிரித்திடவே
மலர் கொய்த தட்டுடனே
கோயில் செல்ல காத்திருப்போம்

மலை உச்சியிலும் பூப்பூத்து
ஏறும் வழியிலும் விதம் விதமாய்
பூரணையில் இறை வணங்கி
ஆசையுடன் கொய்திடுவோம்.

**மதுசூதனன், தரம் 3.**

# அன்பு



"அன்பு தான் இன்ப ஊற்று" என்று கூறுமளவிற்கு மனித சமுதாயத்திலே அன்பு முக்கிய உறவாகக் காணப்படுகின்றது. மனிதன் மனிதன் மீது அன்பு செலுத்துதல், அடிமைத் தலைவன் மேல் பக்தி கொள்ளல், ஏழைகளுக்கு இரக்கம் காட்டுதல் போன்றவை அன்பின் நிலைகளாகும். அன்பானது பெற்றோர் – பிள்ளைகள், குரு – சீடர், நண்பர்கள், உறவினர்கள் என்போருக்கிடையில் பரிமாறக்கூடியது.

கிரேக்க மொழியில் அன்புக்கு ஏரோஸ் (Eros), பிலியா (Philia), அகபே (Agape) ஆகிய மூன்று சொற்களும் அதனைச் சார்ந்து மோகம், நேசம், அன்பு என்று மொழி பெயர்க்கலாம். மனிதர்கள் நேர்மையின் விதையை விதைத்து உடன்படிக்கை அன்பு என்னும் அறுவடை செய்ய வேண்டும். மனிதர்களை அன்பு செய்து அவர்களின் தேவையை இறைவன் நிறைவு செய்வதால் மனிதர்கள் இறைவனை அன்பு செய்ய வேண்டும். இறைவனுடைய அன்பானது சொந்தம் பாராட்டக் கூடியது.

அன்பு செய்பவர்கள் மேல் ஆண்டவர் தம் அன்பைப் பொழிகின்றார். அவர்களை விடுவிக்கின்றார். அவர்களுக்கு இரக்கம் காட்டுகிறார். எனவே உலகச் செல்வங்களை நாடாது இறையன்பை நாடுவது நலம் பயக்கும். இயேசுவினுடைய அன்பானது "அகப்பான்" என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. இத்தகைய அன்பானது திருந்திய பாவியை வரவேற்கின்றது. அவனது நடத்தையில் வழிகாட்டியாகவுள்ளது. அன்புதான் "உலக மகாசக்தி" என்னுமளவிற்கு உலக உயிர்கள் யாவும் அன்பினால் பின்னிப் பிணைந்துள்ளன. மானிடப் பிறவி எடுத்த நாமும் உயிரினங்கள் மீது அன்பு செலுத்தி உயர்நிலையை அடைய வேண்டும். அன்பே கடவுள். அன்பே உலகளாவிய தெய்வம் எனவே நாம் அன்பிற்கு கட்டுப்படுவோம்.

**அன்புடன் கண்களால் பாருங்கள்**
**அன்புடன் காதுகளால் கேளுங்கள்**
**அன்புடன் கரங்களால் கருமமாற்றுங்கள்**
**அன்பான எண்ணங்களை எண்ணுங்கள்**
**அன்பான வார்த்தைகளைப் பேசுங்கள்**
**அன்பை நாள்தோறும் உணருங்கள்.**

**க.ஜோயல் ஜோனத்தான்**
**தரம் 2**



விநோத ஆடையாளர்கள்



கால் கோல் விழா - 2008



ஆசிரியர் தின விழா - 2007



விளையாட்டுப் போட்டி
2008

# நிஜங்கள்



முட்டிக் குனிவது முட்டாள்தனம்
மோதிப் பணிவது கோழைத்தனம்
திட்டித் தீர்ப்பது பொறாமைதனம்
திருடி வாழ்வது கபடத்தனம்

கொட்டிக் கொடுப்பது தருமத்தனம்
கொடுமைப்படுத்துவது மிருகத்தனம்
தட்டிப்பறிப்பது திருட்டுத்தனம் - பிறர்
தயவில் வாழ்வது அடிமைத்தனம்

காட்டிக் கொடுப்பது எட்டப்பன் குணம்
ஊட்டி வளர்ப்பது தாய்மைக் குணம்
நாட்டைக் காப்பது விசுவாசத்தனம்
நம்பிக்கை இழப்பது இயலாதனம்.

**உ. சங்கீர்த்தனன், தரம் 2**

# இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை

## சிறுகதை



ஒரு ஊரில் ஜெயன் என்ற ஒருவன் இருந்தான். இவனுக்கு இரண்டு சகோதரிகள். ஒன்று அக்கா, மற்றது தங்கை அப்பா இல்லாத காரணத்தால் குடும்பப் பொறுப்பு இவனிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இவன் உயர்தரப் பரீட்சை எடுத்துவிட்டு வேலை தேடி அலைந்தான். இதன்பேறாக வங்கியில் ஒரு எழுத்தாளனாக பணிபுரிந்து வந்தான். இதன் பெறுபேறாக இவனுக்கு மாதம் 4,000/- சம்பளமாக கிடைத்தது. இதைக் கொண்டு தனது வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து மனத்திருப்தி அடைந்தான். இருந்தாலும் அவர்களது அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது இருந்தான.

ஒரு நாள் ஜெயன் வேலை செய்து வீட்டிற்கு வரும்போது அவனது நண்பனான மணியைச் சந்திக்க நேரிட்டது. இருவரும் தமது குடும்பத்தை எவ்வாறு பாதுகாக்கிறோம் என்று பகிர்ந்து கொண்டார்கள். மணி நாம். இவ்வளவு படித்தும் எங்களுக்கு கிடைக்கிறது ஆகக்கூடிய சம்பளம் 4,000/- தானே. அதனாலே நாம் வெளிநாட்டுக்குச் சென்றால் இன்னும் அதிகமான சம்பளம் பெறலாம். எமது குடும்பத்தையும் நன்றாகப்

பார்த்து நாமும் சுகமாக இருக்கலாம் என்றான். இதைக் கேட்ட ஜெயனுக்கோ தனது குடும்பத்தை விட்டு பிரிய மனமில்லை. யோசித்தான் இனி நான் தானே உழைத்து எனது அக்காவிற்கும், தங்கைக்கும் சீதனம் கொடுத்து திருமணம் செய்ய வேண்டும்.

இதனால் வெளிநாட்டிற்கு போனால் நல்லது தானே என்று நண்பன் மணியிடம் பயணத்திற்கான ஏற்பாட்டை கவனிக்குமாறு கூறினான்.

தனது திட்டத்தை தாயிடம் சொன்னான். தாய் மறுத்தாள். இருந்தாலும் பின் சரி என்று சொல்லி விட்டார். இருவரும் அரேபிய நாடான சவுதி அரேபியாவுக்குச் சென்றனர். போன சிறிது நாளில் வேலை தேடி அலைந்தோம். கடைசியாக ஒர தேநீர்க் கடையில் கோப்பை கழுவுகிற வேலை கிடைத்தது. இதனால் மாதம் 8,000/- சம்பளம் எடுத்தனர். ஜெயன் மாதம் மாதம் 5,000/- ஐ வீட்டிற்கு அனுப்பிவிட்டு 3,000/- ஐ தனது தேவைக்காக ஒதுக்கினான். ஜெயன் நான் இலங்கையில் வேலை செய்ததை விட எனக்கு 4,000/- சம்பளம் தானே கூடுதலாக கிடைக்கிறது. இந்த 4,000/- இற்காகவா நான் அங்கிருந்து எனது குடும்பத்தை பிரிந்து வந்தேன் என யோசித்தான். ஒரு வருடம் வேலை செய்த பின் மீண்டும் வீடு வந்தான். வீடு வந்து மீண்டும் வேலை தேடி அலைந்தான். வேலைக்கான விண்ணப்பப் படிவங்களை நிரப்பிக் கொடுத்துவிட்டு வீட்டில் ரீயூசன் கொடுத்தான்.

இதிலிருந்து நாம் என்ன அறிகின்றோம். "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" எனும் பழமொழி ஆகும்.

**ச. சசிகலா**
**தரம் 3**

## கனவிலே கடவுள் தோன்றினால்.....!



- கனவிலே கடவுள் தோன்றினால் "கடவுளே எனக்கு நல்ல அறிவு கொடுங்கள்" ன்று கேட்பேன்.
- "நான் திறம்படக் கற்பதற்கு ஆர்வத்தையும் நல்ல ஆற்றலையும் கொடுங்கள்" என்று கேட்பேன்.
- "எமது நாட்டில் யுத்தம் நடவாது சமாதானம் ஏற்பட வேண்டும்" என்று கேட்பேன்.
- "உலக மக்கள் அனைவரும் அமைதியாக வாழ வேண்டும்" என்று கேட்பேன்.
- "எனது வீட்டுக்கும் நாட்டுக்கும், உலகுக்கும் தொண்டு செய்யும் ஆற்றலையும், மனோதிடத்தையும் எனக்குத் தாருங்கள்" என்று கேட்பேன்.

**இ. சிறிதரன், தரம் 4.**

விளையாட்டுப் போட்டி - 2008 சில பதிவுகள்



## மகாத்மா காந்தி

- மகாத்மா காந்தி இந்தியாவில் வாழ்ந்து வந்தார்
- அவர் உண்மையே பேசி வந்தார்
- அவர் கடமைகளை கண்ணியமாகச் செய்தார்.
- தனக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்தார்.
- அகிம்சை வழியில் இந்தியாவிற்கு விடுதலை பெற்றுக் கொடுத்தார்.
- அவர் வாழ்ந்த வாழ்க்கையை தானே சுயசரிதையாக எழுதினார்.
- அவர் எழுதிய சுயசரிதையை "சத்திய சோதனை" என்பார்கள்.

## பாரதியார்

- இருபதாம் நூற்றாண்டில் எமது தாய் மொழியின் சிறப்பை உலகுக்கு உணர்த்தப் பிறந்தவர் மகாகவி பாரதியார் ஆவார்
- தேசியக் கவி புரட்சிக் கவி மறுமலர்ச்சிக் கவிஞர் என்றெல்லாம் உலகத் தோரால் போற்றிப் புகழப்படுகின்றார்
- "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" என்பதன் மூலம் அவரது மொழிபற்றும் வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழ் வாழிய பாரத மணித்திருநாடு' என்பதன் மூலம் அவரது நாட்டுப் பற்றும் கவிதைகளில் பெருக்கெடுத்து ஓடுகின்றது.
- மத வெறியை எதிர்த்து ஆயிரந்தெய்வங்கள் உண்டென்று தேடி அலையும் அறிவிலிகள் என்று சாடினார்.
- சிறுவர்களுக்காக 'ஓடி விளையாடு பாப்பா" என்னும் பாப்பாப் பாடல்களைப் பாடியுள்ளார்.

**இ. சிறிதரன்**

## வினோத உயிரினங்கள்

- அதிக நீர் அருந்தும் பறவை – புறா
- மிகச் சிறிய முட்டையிடும் பறவை – தேன்சிட்டு
- சத்தமிடாத விலங்கு – ஒட்டகச்சிவிங்கி
- ஞாபக சக்தி கூடிய விலங்கு – யானை
- நீல நில இரத்தத்தையுடைய கடல் உயிரினம் – நண்டு, இறால்
- பறக்கும்போதே தூங்கும் பறவை – ஆலபட்றால்
- பித்தப்பை இல்லாத முலையூட்டி – எலி
- நாக்கு இல்லாத விலங்கு – முதலை

## 2007 வகுப்பு நிலைக்கான பரிசு

**தரம் 1**
1. ச.சிவசங்கர் 2. இ.வினிதா 3. செ.லக்ஷன்

**தரம் 2**
1. செ.கலக்சி 2. க.கௌசல்யா 3. ச.மதுசூதனன்

**தரம் 3**
1. நி.தேனுசன் 2. இ.சிறிதரன் 3. ச.சுஜானியா

**தரம் 4**
1 .நா.துஜீபன் 2. இ.விதுஷா 3. ச.கஜேந்தினி

**வரவு - தரம் 5**
பெண்: இ.விதுஷா, சு.பிரதீபா. ஆண்: கி.சஜீபன்.

**புத்தகம் பேணல்**
ஆண்: செ.சஜீபன் பெண்: ச.கஜேந்தினி.

**வரவு - தரம் 3**
ஆண்: ச.மதுசூதனன் பெண்: க.கௌசல்யா

**புத்தகம் பேணல்**
ஆண்: வ.திருச்செல்வன் பெண்: செ.கலக்சி

**வரவு - தரம் 1**
ஆண்: கே.கேஸ்டியன் பெண்: கி.வைஷ்ணவி

**புத்தகம் பேணல்**
ஆண்: கே.கேஸ்டியன் பெண்: வி.யாதவி.

**வரவு - தரம் 4**
ஆண்: நி.தேனுசன் பெண்: ச.சுஜானுஜா.

**புத்தகம் பேணல்**
ஆண்: நி.தேனுசன். பெண்: ல.டிலக்சனா.

**வரவு - தரம் 2**
ஆண்: க.ஜோயல் பெண்: இ.வினிதா.

**புத்தகம் பேணல்**
ஆண்: செ.லக்சன் பெண்: உ.அபிதா.




ஆசிரியர் தினம் 2008

# அகில உலக ஆசிரியர் நாள் -2007 ஆண்டாக ஐப்பசி ஆறில் ஆசிரியர் நாள்

**இந்த நல்ல நாளில் எங்களூர் ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் அதிபர் பெருமகனையும் ஆசிரிய மணிகளையும்**

## வாழ்த்தும் பாமலர்

**காப்பு**

வல்லபை பங்குறு வள்ளல் வாரணன்
எல்லவரும் தொழுதெழுநாதன்-நல்லருளை
நம்பியே நாமும் இங்கு வாழ்த்த வந்தோம்
தம்பியே என்றும் துணை.

**வாழ்த்து**

யாழ்நகர் மீதமர் ஏழாலை வடக்கு
அமெரிக்க தமிழ்க்கலவன் பாடசாலை
கீழ் நிலை பெற்று சில நிலமாகிய
போதினில் வந்த அதிபர் ஆசிரியர்
ஏழிசை ஒலியோல் ஏறியே முன் போல்
ஆகிடப் பணிபல செய்தவரானார்
வீரமும் கல்வியும் ஞானமும் எழும் புகழ்
விளை நிலமாக்கவே பாடுபட்டார்
தீரமும் செம்மையும் கொண்டே செய்பணி
சிறந்தே மிளிர்ந்ததுவே.

**இப்பணிகள்**

ஊரது நடுவில் ஊருணிபோன்றும்
சீர்பெறும் நடுவூர்ப் பழமரம் போன்றும்
கார்முகில் பொழியும் மழையது போன்றும்
நேர் தரும் வெற்றிகள் பொலிந்தனவே
மீண்டும் தொடங்கிய மிடுக்கெனவே
ஈண்டும் வகுப்புகள் உயர்ந்தனவே
காண்போர் மனமும் கனிகவர்ந்திடவே
மாண்பாய் மாணவர் பயில்கின்றார்.

**இதற்காக**
பெற்றார் சங்கமம் பெருநட்பாய்
மற்றார் உறவும் தரும் அன்பாய்
கற்றார் புத்தியும் செவிக்குணவாய்
பற்றாய்க் கொண்டார் நல்லதிபர்
தனிமரம் என்றும் தோப்பாகா இத்
தனிப்பெரும் உண்மை தனைப்புரிந்து
புனிதப் பணியில் சென்றானார்
கனியைப் போன்ற ஆசிரிய குழுதானே.

இம்மனித நேயப்பண்பாளர்
ஆண்டில் இளைய பருவத்தார்
நீண்ட அநுபவ செயல் வல்லார்
தூண்டும் அறிவுக் களஞ்சியத்தார்
யாண்டும் இங்கு வாழியவே.

எல்லா நலமும் நிறைந்திடவே
நல்லாருறவும் சேர்ந்திடவே
பல்லோர் புகழும் பட்டமுடன்
வல்லாரான மிகு நல்லவராய்
எல்லா நாளும் வாழ்ந்திடவே
சொல்லால் மாலை சூட்டி நின்று
வாழ்த்துகின்றோம் வாழ்த்துகின்றோம்
வாழிய வாழிய வாழியவே
**சுபமங்களம்.**

**இவ்வண்ணம் வாழ்த்துபவர்**
**கந்தகாமி குடும்பத்தார்**
**(பாடசாலை நலன் விரும்பிகள்)**

**பழமுதிர் சோலை**
**ஏழாலை வடக்கு**
**ஏழாலை. 06.10.2007.**

மேலைத் தேச வர்த்தியம்



2004 ல் தரம் ஒன்று மாணவர்கள் புதுவரவில்



சாதனை வீரர்கள்





கணனித் தொகுதி

# நன்றிக்குரியவர்கள்

மாகாணக் கல்விப்பணிப்பாளர்,
வலயக் கல்விப்பணிப்பாளர்,
முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர்,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
முன்னாள் உதவிக் கல்விப்பணிப்பாளர்,
உதவிக் கல்விப்பணிப்பாளர்,
வலிதெற்கு பிரதேசசெயலர்,
கோட்டக் கல்விப்பணிப்பாளர்,
அயற்பாடசாலை அதிபர்கள்,
மதகுருமார்,

மலருக்குரிய நிதியைத் தந்துதவிய திருமதி செ.செபரட்ணம் குடும்பத்தினருக்கும்,

பாடசாலைக்கு பன்முகப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திலிருந்து தொடர்ந்து வருடாவருடம் உதவி வருகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராஜா அவர்களுக்கும்,

கனானியைத் தந்துதவிய தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதி. வண. கலாநிதி டானியல் S.தியாகராஜா அவர்களுக்கும்,

தென்னிந்தியத் திருச்சபை ஊடாக பல்வேறுபட்ட உதவிகளையும் வழங்கிக் கொண்டிருக்கும் வண. K.J.W தேவசகாயம் அவர்களுக்கும், அவர்களது பாரியார் திருமதி ஜெயராணி கலைநேசன் அவர்களுக்கும்,

கட்டுரை வழங்கிய கல்விசார் பெரியோருக்கும்,

விளம்பரதாரர்களுக்கும்,

சிறப்பு மலரினைப் பெற்றுக் கொள்வோருக்கும்,

பாடசாலைக்குரிய மகுடவாசகத்தை உருவாக்குவதில் உதவிய திரு. சி.கந்தசாமி (ஓய்வுபெற்ற கணக்குப் பரிசோதகர்),

பாடசாலைச் சின்னத்தை வடிவமைப்பதில் உதவிய திரு. திருச்சிநவரத்தினம் அவர்களுக்கும் (அதிபர் யா/ கோட்டைக்காடு அ.த.க),

பாடசாலைக் கீதத்தை ஆக்குவதில் உதவிய கலாபூசணம் சு.துரைசிங்கம் அவர்களுக்கும் (ஓய்வுநிலை அதிபர்),

பாடசாலைப் பணிக்கூற்று, தொலைநோக்கு என்பவற்றை உருவாக்குவதில் உதவிய திரு. பா.தனபாலன் அவர்களுக்கும் (உப பீடாதிபதி - தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்),

பாடசாலைத் தேவைக்கென ரூபா 5000.00 இனை தந்துதவிய திருமதி இராஜமனோகரி குடும்பத்தினருக்கும் (கனடா)

யுனிசெவ் அமைப்பு, GTZ (ISஅலகு) அமைப்பு).

மல்லாகம் வர்த்தக நிலையங்களில் முழுமையாக விளம்பரத்தைச் சேர்க்க உதவிய Tip Top உரிமையாளர் திரு. க.கந்தசாமி அவர்களுக்கும்,

மானிப்பாய், யாழ்ப்பாணப் பகுதி வர்த்தக நிலையங்களில் விளம்பரங்களைத் திரட்டுவதற்கு உதவிய திரு பொ. சிறிஸ்கந்தராசா (சிறி) திரு. பொ. சிறிகுலராசா (பேபி) அவர்களுக்கும்.

விளம்பரங்களை திரட்டுவதற்கும் ஏனைய நிதி திரட்டும் நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு நல்கிக்கொண்டிருக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களான திரு.நா.செல்வராசா, திரு. க.நித்தியானந்தம் அவர்களுக்கும்,

கொழும்பில் நின்று வாழ்த்துச் செய்திகளைப் பெற்று அனுப்புவதில் துணைநின்ற எமது பாடசாலையின் அயலவராகிய திரு. த. நிரோசன் அவர்களுக்கும்.


பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், பெற்றோர் அனைவருக்கும் ,

இம்மலரினை அச்சிட்டு உதவிய ACM பிரிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும்,

பாடசாலையினுடைய பல்வேறு தேவைகளுக்கும் பல்வேறு வழிகளில் உதவிபுரிந்த அன்பு உள்ளங்களுக்கும்,

மீண்டும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**பாடசாலைச் சமூகம்.**



யா/ ஏழாலை வடக்கு
அ.மி.த.க பாடசாலையின்
120ஆவது ஆண்டுவிழா
சிறப்புமலர் சிறப்புற உளமார
வாழ்த்துகின்றோம்.



# TIP TOP &
## SHANTHAN HOTEL



# ரிப் ரொப் &
## சாந்தன் உணவகம்

- சகல விதமான சிற்றுண்டி வகைகளையும், தரமாகவும் நியாய விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
- இல்லங்களிலும், நிறுவனங்களிலும் நடைபெறும் சகல விழாக்களுக்கும் உரிய சிற்றுண்டி வகைகளை ஓடர் முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

மல்லாகம் சந்தி,
மல்லாகம்


சுன்னாகம்

விழாமலர் சிறப்புற வாழ்த்துகிறோம்


# ஸ்ரீமுருகன் ஹாட்வெயார்


## SRI MURUGAN HARDWARE

**சீமெந்து, கட்டடப் பொருட்கள், பெயின்ற் வகை அனைத்தையும்
தரமான முறையில் பெற்றுக்கொள்ளலாம்.**



**உரிமையாளர்:- பா.ஸ்ரீவசந்தன்**
**கே.கே.எஸ் வீதி,**
**மல்லாகம்.**





விழாமலர் சிறப்புற வாழ்த்துகிறோம்

**உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசிச் சேவைக்கும் CD, போட்டோ கொப்பி, நெற் போன் சேவை ஆகியவற்றிற்கும் நாடுங்கள்.**

# தபீனா கொமினிகேசன்


# THAPEENA COMMUNICATION

**ஏழாலை மேற்கு,**
**ஏழாலை.**

**உரிமையாளர்:**
**பொன்னம்பலம் விஜிதகுமார்**

விழாமலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

- அன்பளிப்புப் பொருட்கள்
- அழகுசாதனப் பொருட்கள்
- எலக்ரோனிக் பொருட்கள்





ஆகியவற்றிற்கு நாடவேண்டிய ஒரே இடம்

**பைன் செலக்ஷன்**

இல.77, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

**Fine Selection**

No.77, K.K.S.Road, Chunnakam

விழாமலர் சிறப்புற வாழ்த்துவாழவதில் மகிழ்வடைகின்றோம்

**ரஜீவன் வைண்டிங் அன் மோட்டோர்ஸ்**

சகலவிதமான வைண்டிங் வேலைகளும்

➢ மின்சார உபகரணங்கள்
➢ மோட்டார் சைக்கிள் ➢ வாட்டர்பம்
➢ அவுட்மோட்டர் ➢ ஆட்டோ

கிளை 189, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்




ஆகியவற்றின் உதிரிப்பாகங்களையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

66,68,கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

விழாமலர் சிறப்புற வாழ்த்துவோர்

☞ போட்டோ பிரதிகள்
☞ பாடசாலை உபகரணங்கள்
☞ லெமினேற்றிங்
☞ காகிதாதிகள் என்பவற்றை உடனுக்குடன் பெற்றிட

**ராஜா கொம்பிளக்ஸ்**

கே.கே.எஸ். வீதி, சுன்னாகம்.

விழாமலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

சகலவிதமான வீட்டு உபகரணப் பொருட்கள்,
அழகு சாதனப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள

**Abiramee Fashion House**

**அபிராமி பெஷன் ஹவுஸ்**



5, K.K.S Road, Chunnakam.

# நிவேன் பான்சி

இல. 50, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

சிறந்த பொருட்களைத்
தெரிவுசெய்ய
**கண்ணன் பான்சி**

விழாமலர் சிறப்புற வாழ்த்துவோர்



இல.50, K.K.S றோட், சுன்னாகம்.

விழாமலர் சிறப்புற வாழ்த்துவாழவதில்
மகிழ்வடைகின்றோம்

# ஜனா பாம்

**பால் மற்றும் பால் உற்பத்திப் பொருட்கள்,**
**சுத்தமான பசுநெய் விற்பனை நிலையம்**

ஓடருக்கு கேக் வகைகளும் செய்து கொடுக்கப்படும்

மல்லாகம் சந்தி

மல்லாகம்



யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது
விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்


# ராம் நெற். கொம்

**தொலைத்தொடர்பகமும் கணனி திருத்தகமும்**

## Our Service

- *Local, STD, IDD Calls & Net2Phone*
- *Typing, Printing, Photo copy & Laminating*
- *CD/DVD Writing*
- *PC Repairing & Maintenance*
- *Software Installation & Upgrading*

K.K.S Road,
Mallakam Junction.




Local: 021 2225902
021 4590491, Fax: 021 4590491

IDD: 0094 21 2225902
0094 21 459046\91
e.mail:
*raamnetcom@yahoo.com*



# RAAMNET. COM





***Communication & Computer Services***

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது
ஆண்டு விழாவும் சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புற உளமார்ந்த வாழ்த்துக்கள்

# தவம் இயந்திரவியல் தொழிலகம்

# THAVAM ENGINEERING WORKS





# THAVAM AGRO

## தரமான நீர் இறைக்கும் பம்பிகள் தயாரிப்பாளர், திருத்துநர்கள்




பலாலி வீதி

கோண்டாவில்



விழாமலர் சிறப்புற வாழ்த்துவோர்

# ஜெய துர்க்கா



நகைத் தொழிலகம்

**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

நவீன வடிவமைப்புக்களில் தங்க ஆபரணங்களை நியாயமாகப் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்


ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.


ஸ்ரேசன் றோட், மல்லாகம்.

---

விழாமலர் சிறப்புற வாழ்த்துவோர்

# Vithusha Fancy & Bata





விதுஷா பான்சி & பாட்டா

**பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள் மற்றும் Bata, DSI போன்ற பாதணி வகைகள் என்பவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.**

K.K.S Road, Mallakam. 0771630736

---

விழாமலர் சிறப்புற வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்

# Mathanky Pharmacy & grocery

*K.K.S Road, R.D.S View, Mallakam.*

*மருந்து வகைகள், பால்மா, பிஸ்கட் வகைகள் மற்றும் ஆடம்பரப் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் யாவற்றையும் பெற்றுக் கொள்ளலாம்.*

---

*நாமும் வாழ்த்துகின்றோம்.*

# பரணிகா மல்ரி சென்ரர்

- ☞ *அன்பளிப்புப் பொருட்கள்*
- ☞ *பாடசாலை உபகரணங்கள்*
- ☞ *போட்டோ பிரதிகள்*
- ☞ *லெமினேற்றிங்*
- ☞ *அழகுசாதனப் பொருட்கள்*

*என்பவற்றை பெற்றுக் கொள்ளலாம்.*


**Paranika Multy Centre** *K.K.S Road, Mallakam.*

**யா/ ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலையின் 120ஆவது ஆண்டு விழா சிறப்புமலர் வெளிவருவதில் மகிழ்வுறுகின்றோம்.**

# சிவகுரு பல்பொருள் வாணிபம்



*பலசரக்கு, கட்டடப் பொருள் மற்றும் மின்சார உபகரணங்கள் அனைத்தையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.*



**உரிமையாளர்:- திரு. க.பிரபாகரன்,**
**ஏழாலை வடக்கு,**
**ஏழாலை.**

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது ஆண்டு விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# துவாரகா பல்பொருள் வாணிபம்

**உரிமையாளர்:-** திரு. சி.பரமேஸ்வரன்,
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.

120 ஆவது ஆண்டு விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

# உதயா பல்பொருள் வாணிபம்

**உரிமையாளர்:- திரு. பொ.சுப்பிரமணியம்,**
**புகையிரத வீதி,**
**மல்லாகம்.**

விழாமலர் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

# சயன் உணவகம்

- சகல விதமான சைவ, அசைவ சிற்றுண்டி வகைகளையும் சுவையாகவும், தரமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
- அனைத்து உணவு வகைகளையும் திருப்தியான முறையில் செய்து கொடுக்கப்படும்.



உரிமையாளர்:- வை.ரவி,
மல்லாகம் சந்தி,
மல்லாகம்.



120ஆவது ஆண்டு விழா மலர் சிறக்க வாழ்த்துகிறோம்.

# துர்க்கா பொத்தகச் சோலை

- தரமான பாடசாலை உபகரணங்கள்
- வண்ணமிகு வாழ்த்து மடல்கள்
- கலண்டர்கள் - டயறிகள்
- காகிதாதிகள்
- இலங்கை இந்திய சஞ்சிகைகள்
- புதினத்தாள்கள்
- றபர் ஸ்ராம்
- பணப்பரிமாற்றம்

ஆகிய சேவைகளுக்கு நாடவேண்டிய இடம்



## துர்க்கா பொத்தகச் சோலை

பேருந்து நிலையம், சுன்னாகம்.

120 ஆவது ஆண்டு விழா மலர் சிறப்புற உளமார வாழ்த்துகின்றோம்


# கண்ணன் புத்தகசாலை

சகலதர மாணவர்களுக்குமான

- பயிற்சிப் புத்தகங்கள்
- அப்பியாசக் கொப்பிகள்
- பாடசாலைப் பைகள் (School bag)
- இருபாலாருக்குமான பாதணிகள்
- அன்பளிப்புப் பொருட்கள்
- திருமண வாழ்த்து மடல்கள்
- புதினப்பத்திரிகை

போன்றவற்றை ஒரே இடத்தில் பெற்றிட நாடவேண்டிய ஒரே இடம்





## கண்ணன் புத்தகசாலை

K.K.S வீதி, மல்லாகம் சந்தி, மல்லாகம்.

120 ஆவது ஆண்டு விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

## யாழ்ப்பாணம் – சுன்னாகம் பழரசத் தொழிலகம்

# ஜசுபி தயாரிப்புக்கள்

***உள்ளூர் பழத்தில் இருந்து முற்றிலும் சுகாதார முறையில் தயாரானது***

- ✧ நெல்லி ரசம்
- ✧ மாம்பழ ஜாம்
- ✧ விளாம்பழ ஜாம்
- ✧ ஸ்ரோபரி ஜாம்
- ✧ பழக்கலவை ஜாம்
- ✧ மாம்பழ கோடியல்
- ✧ பழக்கலவை கோடியல்
- ✧ தேசிக் கோடியல்
- ✧ தக்காளி சோஸ்
- ✧ மிளகாய் சோஸ்
- ✧ மாம்பழ சட்னி
- ✧ தேசி ஊறுகாய்
- ✧ மோர் மிளகாய்

**எமது உற்பத்திப் பொருட்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.**

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்

ஜசுபி தொழிலகம்,
மானிப்பாய் வீதி, உடுவில்.




120 ஆவது ஆண்டு விழா மலர் சிறக்க உளமார்ந்த வாழ்த்துக்கள்

# திருமண வைபவங்களா?


# பூப்புனித நீராட்டு விழாவா?

# பிறந்தநாள் விழாவா?



**சகல மங்கள வைபவங்களையும்
சிறந்த முறையில் கலர்ப்படம்
பிடித்திடவும் கறுப்பு வெள்ளை,
பாஸ்போட், அறிமுக அட்டை,
அடையாள அட்டை படங்களை
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள**

# சோதி ஸ்ருடியோ



**மல்லாகம் சந்தி, மல்லாகம்.**

மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

## சித்தி விநாயகர் ஸ்ரேசனறிஸ்

- ⇨ பாடசாலை உபகரணங்கள்
- ⇨ அறிவுசார் நூல்கள்
- ⇨ அன்பளிப்பு பொருள்கள்
- ⇨ திருமண, பிறந்த நாள் வாழ்த்துமடல்கள்
- ⇨ திருமண அழைப்பிதழ் அட்டைகள்
- ⇨ Kit, Net, Max காட்வகைகள்


போன்ற அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்

**சித்தி விநாயகர் ஸ்ரேசனறிஸ்**

இல.16, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்

சுன்னாகம் வீதி,
புன்னாலைக் கட்டுவன், தெற்குச் சந்தி.

120 ஆவது மலர்
சிறப்புற வாழ்த்துகின்றோம்




- ⇨ இலத்திரனியல் சாதனங்கள்
- ⇨ மின் மோட்டார் பம்பிகள்
- ⇨ பைப் வகைகள்
- ⇨ மின் உதிரிப்பாகங்கள்

என்பவற்றை உயர் தரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்

## சுந்தர்சன்

மானிப்பாய்

120 ஆவது ஆண்டு
விழா மலர் சிறப்புற
வாழ்த்துகின்றோம்




## கிருஸ்ணா

## இரும்புத் தொழிலகம்

பிரதான வீதி, சாங்கானை.
உரிமையாளர்:
செ.கோபாலகிருஷ்ணன்

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலையின் 120 ஆவது
விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்



கட்டிடப் பொருட்கள், மிற்சுயி சீமெந்து, பெயின்ற் வகைகள், கல்றெக்ஸ் ஒயில்
என்பனவற்றை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள

கஜமுகன் காட்வெயர்

147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2833

120 ஆவது மலர்
சிறப்புற வாழ்த்துகின்றோம்


Arul Vinayagar Trades

All Kinds of Japan
Motor Cycle & Parts

108, Stanley Road, Jaffna.
*Tel: 021 222 25558*

மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

அழகு சாதனப்பொருட்கள்,
அன்பளிப்புப் பொருட்கள்
அனைத்தையும் ஒரே
இடத்தில்
பெற்றுக்கொள்ள



ரதி
பென்ஸ்
கவுஸ்

Rathy Fancy House

53, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க.
பாடசாலையின் 120 ஆவது
விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

பலசரக்குப் பொருட்களை
தரமான வகையில்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

# றூபா

## பல்பொருள் வாணிபம்

இல. 104, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 8330

மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்



உறுதியும் உத்தரவாதமும் உள்ள
22 கரட் தங்க வைர
நகைகளைப் பெற்றுக்கொள்ள
சிறந்த ஸ்தாபனம்

# சாரங்கா

## நகைமாடம்

157/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

120 ஆவது மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்



கீழைத்தேய, மேலைத் தேய கர்நாடக
இசைக்கருவிகள் விற்பனையாளர்

# அன்னம்ஸ்

இல. 113, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம். தொ.பே: 7115

யாழ் ஏழாலை வடக்கு அ.மி.த.க.
பாடசாலையின் 120 ஆவது மலர் சிறக்க
வாழ்த்துகின்றோம்



அழகு சாதனப்பொருள்கள்,
வீட்டுப் பாவனைப் பொருள்கள்
என்பவற்றை தரமான
முறையில்
பெற்றுக்கொள்ளலாம்

# பெஷன் ஹவுஸ்

இல.203, (65),
கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்

120 ஆவது மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

நவீன
டிசைன்களில்
ஆண்கள்,
பெண்கள்,
சிறுவர்களுக்கான
ஆடைகளை ஒரே
இடத்தில் நீங்கள்
தெரிவுசெய்திட
நாடவேண்டிய
இடம்



## வாணி ரெக்ஸ்

11, நவீன சந்தை, உட்புறம்.
சாவகச்சேரி.
81, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க.
பாடசாலையின் 120 ஆவது
விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

- பாண்
- பணிஸ்
- கேக் வகைகள்
- பிஸ்கட் வகைகள்

என்பவற்றை உயர்தரத்தில்
பெற்றுக்கொள்ளலாம்

## காங்கேயன் வெதுப்பகம்

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *



மலர் சிறப்புற
வாழ்த்துகின்றோம்

- சாறி வகைகள்
- வேட்டிவகைகள்
- சேட் வகைகள்
- சிறுவர்களுக்கான உடைகள்

மற்றும் துணிவகைளைப்
பெற்றிட

## நவம் ரெக்ஸ்

இல.10 யூபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 2514

யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க.
பாடசாலையின் 120 ஆவது
விழா மலர் சிறப்புற வாழ்த்துகின்றோம்

## வேலும் மயிலும் பான்சி ஹவுஸ்

இல.54, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மங்கையர் மனங்கவர்
அழகுசாதனப்
பொருள்களை தரமான
முறையில் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்

கிளை ஸ்தாபனம்

## நிகாஷ் அழகு மாடம்

இல.184, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.




Printed By: A.C.M. Press, T.P: 021 222 9102